
ISSN 2424-6654

தமிழ்த் தூது

# தாயக ஒலி


THAYAKA OLI

இரு திங்கள் ஏடு 21




தை - மாசி 2016

விலை ரூபா 100/=


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்
RATHY
Jewellers | Tooting
209 Upper Tooting Road, Tooting SW17 7TG
T: 020 8682 2233 F: 020 8767 7600
E: rathyjewellers@hotmail.co.uk
28 Ealing Road, Wembley Middx HA0 4TL T: 020 8903 3063


மகிழ்ச்சி சுடர்விடும் நன்நாளில்
அனைவருக்கும் எங்களது
பொங்கல் வாழ்த்துக்கள்!
மகிழ்ச்சி சுடர்விடும் நன்நாளில்
ஆனந்தப்பூரிப்பில் ஆழ்த்தி
உங்கள் மனங்கவரும்
பட்டுப்புடவைகளுக்கு....
Connect with us
You Tube
LAE
லிட்டில்ஏசியா
சில்க் எம்போரியம்
73, மெயின் வீதி, கொழும்பு - 11. தொலைபேசி: 2391592, 2391593 பெக்ஸ்: 2391745
Skype ID: little.asia.silk E-mail: info@littleasiasilk.com Web: www.littleasiasilk.com
LAE
லிட்டில்ஏசியா
எம்போரியம் (பிரை) லிமிட்டட்
317, 317 A, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06. தொலைபேசி: 2504470, 2500098 பெக்ஸ்: 2508934
skype ID: little.asia.emporium E-mail: info@littleasia.lk Web: www.littleasia.lk


AA Accounting & Business
Solutions Associates
265 Haydons Road / London SW19 8TY
Accountants and Management Consultants
for Efficient and Quality Professional
Accounting Services
We Specialise in
Year End Accounts Preparation
Management Accounts
Solicitors Accounts
Book Keeping
Self Assessment Tax Returns
Vat and TAX Investigations
Payroll Preparation
Business Startup Advice
Business Plans and Cash Flow Forecasts
Management Consultancy
Also through our contacts
we are able to raise Finance for New Business
Contact:
Uthayanan or Sasi
Mob : 0774 7794 358 / 07786 966 207 Tel : 020 8545 0205
www.aa-accounts.co.uk

சட்டத்தரணிகளும் குடிவரவு ஆலோசகர்களும்

# Rasiah & Co
# Solicitors


- *Conveyancing*
- *Residential & Commercial*
- *Matrimonial*
- *Immigration*
- *Landlord & Tenants*

**Tel : 020 8543 4040**
**Fax : 020 8543 2400**

180A Merton High Street,
South Wimbledon,
London SW 19 1AY

DX: 300004 Wimbledon South

rasiahsolicitors@btconnect.com



23 வருட கால அனுபவம்


# Linga & Co

## Legal Advisors & Immigration Specialists

### We Specialise in:

- Asylum and Immigration Matters
- Human Rights applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Work Permits
- EEA Application (Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications

- Family Law
- Employment Law
- Criminal Law



**V.P.Lingajothy**
LLB(Hons), M.Sc., Dip Fms, ACILEX
Principal
immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்.

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்களாயின் உடன் தொடர்பு கொள்ளவும்.

**மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்**

General Line : 020 8544 9285

Fax : 020 8542 9530

46, High Street
Collierswood
London SW19 2BY


**Emergency Line : 07771 646 441**

# Easan & CO

*Chartered Management Accountants*

## Specialists in arranging Commercial Loans

- Self Assessment Tax Return
- CIS Refunds
- Accounts & Book Keeping
- VAT Returns
- PAYE
- Management Accounting



S.Eswaranathan ACMA
(Easan)

196 Merton High Street
South Wimbledon
London SW19 1AX

Tel: 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 07801227017


# HENSHOU ISSHINRYU KARATE ACADEMY

59 Cranley Road, Ilford, Essex, IG2 6AF
Tel: 020 8518 3288, Mob: 07950346432, Email: info@henshou.com, Web: www.henshou.com

AFFILIATED TO ISSHINRYU WORLD KARATE ASSOCIATION – OKINAWA, JAPAN AND ALL INDIA ISSHINRYU KARATE ASSOCIATION - INDIA



## DEVELOP YOUR SELF DEFENCE, SELF CONTROL SELF DISCIPLINE, COURAGE & LEADERSHIP






*Renshi Raveendran is a 6th Dan Black Belt who has trained directly under Master Shihan Hussaini(India), Grandmaster Christopher Chase (USA) and Grandmaster Kichiro Shimabuku(Japan)

*Trained and coached over 1000 students from various branches (Students age varies from 5yrs to 65 yrs–male and female).

*His Students have won many awards from various local competitions and world Isshinryu Karate competitions held in the USA

தமிழர்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில்
றென்ஷி ரவீந்திரனது நேரடிக் கண்காணிப்பில்
தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவின் அனுசரணையுடன்
இஷின்றியு கராத்தே வகுப்புக்கள்
சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது



**OUR BRANCHES:**

**EASTHAM, MANOR PARK, NEWBURY PARK**
**WALTHAMSTOW, PLUMSTEAD, LEWISHAM**
**CROYDON, MITCHAM, BRISTOL, HARROW**
**SOUTHEND, SWINDON**

**CONTACT : RENSHI KANDIAH RAVEENDRAN** (6th DAN BLACK BELT)

**TEL : 020 8518 3288**

**MOB : 07950 346 432**

**Email : info@henshou.com Web : www.henshou.com**

# Devi Jewellers

## Devi Forex (Pvt) Ltd.



131












## Buyers & Sellers of Bullion



(Gold, Silver, Platinum & Palladium)

## Diamonds, Gems & Cubic Zirconium


131, Sea Street,
Colombo 11,
Sri Lanka.






Tel : 2388757,2388960
2395001/5
Fax : 2327101
E-Mail : info@devijewellers.lk


AUTHORISED MONEY CHANGER
WESTERN UNION MONEY TRANSFER
CUSTOM MADE JEWELLERY

*No Other Branches.*

WESTERN UNION
MONEY TRANSFER


Nallur Kumaran Textiles
Since 2000
New Sarees Collection Every Month from Bombay
Open
Mon-Sat 10am- 7pm
* திருமணக் கூறைகள்
* பூப்புனித நீராட்டு விழாப் பட்டு புடவைகள்
* Sequins Sarees
* Half Sarees
* நவநாகரீக ஆடைகள்
* பட்டுவேட்டிகள், சேட்டுகள்
* Childrens Party Wear
* ஏகாந்த வீணை, மிருதங்கம், தபேலா, சுருதிப் பெட்டி
* பரதநாட்டிய Costumes and Costume Jewels
Saree blouses உடனுக்குடன் தைத்துக் கொள்ளலாம்
1023-1025 London Road, Thornton Heath, Surrey CR7 6JF
Tel: 020 8684 1026 Mob: 07960 761 606
www.nallurkumaran.co.uk

ISSN 2424-6654

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# 'தாயக ஒலி'

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2047 தை - மாசி 2016 வில் - 04 ஒலி - 21

**இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும்**

**'தாயக ஒலி'**

**பிரதம ஆசிரியர்**

த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)

தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**

தாயகன் (இலண்டன்), சி.பவன் (இலங்கை)

**மதியுரைக் குழு**

பேராசிரியர் சபா ஜெயராசா

வவுனியூர் இரா உதயணன்

சைவப்புலவர் சு.செல்லத்துரை

ந.கருணை ஆனந்தன்

எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)

வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**

மூ.சிவலிங்கம்

கா.வைத்தீஸ்வரன்

கதிரவேலு மகாதேவா

செ.ராஜேந்திரா

இ.ஜீவகாந்தன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள்:**

கனடா : முருகேசு கிருபாகரன்
துு.நடராஜா, அ.பற்குணன்
இலண்டன் : இ.பாலேந்திரநாதன்
அமெரிக்கா : வே.பிரேமதயாளன்
அவுஸ்திரேலியா : தி.திருநந்தகுமார்
பிரான்ஸ் : ச.சச்சிதானந்தம்

**ஐரோப்பிய நாடுகளுக்கான விசேட ஒருங்கிணைப்பாளர்**

திருமலை பாலா

தொ.பேசி : 0044 (0)7956486014

**தொடர்பு : 9-2/1,** நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை.
தொ.பேசி : 0094(0)112364124

**E-Mail : thayakaoli@gmail.com**

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புகளுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்.

-ஆசிரியர்-

## உள்ளே ஒலிப்பவை

| | பக்கம் |
|---|---|
| பேனா முனையிலிருந்து..... | 02 |
| **கட்டுரை :** | |
| ● நடிகமணி வி.வி.வைரமுத்து | 04 |
| ● சிலப்பதிகாரமும் இளங்கோவடிகளும் | 21 |
| ● பென்சில் ஓவியர் -யோகா | 45 |
| **சிறுகதை:** | |
| ● உடைந்த உறவுகளும் உலுப்பிய சோகங்களும் | 13 |
| **கவிதை:** | |
| ● தைப்பாவை | 03 |
| ● தொலைந்துவிட்ட... | 11 |
| ● விட்டவழி | 23 |
| ● பரஸ்பரம், எவனும் அறியான், அவர்கள் வெடியால் | 23 |
| ● சிறுவர் கவிதை | 33 |
| ● புத்தாண்டுச் சிந்தனைகள் | 38 |
| **சிரிகதை :** | |
| ● சிரித்து வாழவேண்டும் | 39 |
| ● வாழைப்பழமும் தோடம்பழமும் | 40 |
| ● என்ன உருவம்? (சிறுவர் கதை) | 24 |
| **நூல் அறிமுகம் :** | |
| ● வாடாமல்லிகை | 25 |
| ● தொலைந்துபோன வசந்த... | 46 |
| **அறிந்தவையும் தெரிந்தவையும் :** | |
| ● மற்றொரு கிரகம் | 10 |
| ● அப்துல் கலாமுக்குச் சிலை | 22 |
| ● எலிசபெத் மகாராணி சாதனை | 48 |
| **ஆய்வுக் கட்டுரை :** | |
| ● தாயக ஒலி - ஒரு பார்வை | 28 |
| **கேட்டதைச் சொல்ல வந்தோம் :** | 18-20 |
| **விளையாட்டு :** | 34-36 |
| **நீத்தார் நினைவஞ்சலி :** | 41-43 |
| **உங்கள் விருந்து :** | 41-43 |
| **நகைச்சுவைக் கதை :** | 44 |

**அட்டையில்.....**

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

## பேனா முனையிலிருந்து .....



# அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்

'சிறுவர் பாதுகாப்பு' இன்று பாரிய பிரச்சினையாகத் தோன்றியுள்ள நிலையில் சமுதாயம் தெய்வதறியாது திணறி நிற்பதை அவதானிக்க முடிந்துள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செய்திகள் நாட்டு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி வருகின்றன. இன்றைய சமூகத்தில் பெண்பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர்கள் மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழவேண்டிய ஒரு துர்பாக்கிய நிலையில் வாழ்க்கையை ஓட்டுகின்றார்கள். 'இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்' என்று போற்றிப் பாதுகாக்கவேண்டிய சமுதாயம், பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் செய்வ தறியாது மக்கள் வேதனையில் கலங்கி நிற்கிறார்கள்.

2014 ஆம் ஆண்டில் மட்டும் இலங்கையில் 5762 சிறுவர்களும் 311 பெண்களும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனப் பாராளுமன்றத்தில் ஆதாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலை 2015 இலும் தொடர்கதையாகவே தொடருகிறது. குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்திக் கடுமையான தண்டனைகளை வழங்கவேண்டும் என்று மக்கள் தொடர்ச்சியான கோஷங்களை எழுப்பி வருகின்றார்கள். குறிப்பாக வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகிய பகுதிகளில் சிறுவர் மீதான வன்முறைகளைக் கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிந்துள்ளது. எமது சமுதாயம் கட்டிக்காத்து வந்த பண்பாடு, ஒழுக்கம், கட்டுப்பாடு, கலாசார விழுமியங்கள் ஆகியன சிதைந்து போகின்ற நிலை உருவாகிக் கொண்டிருப்பது வேதனை தரும் விடயமாகும்.

வயது வித்தியாசம் இன்றி சிறுவர்கள், குறிப்பாகச் சிறுமியர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுமுள்ளார்கள் என்ற செய்தி மனித இனத்தின் மிக மோசமான, கேவலமான, இழிநிலையையே வெளிப்படுத்துவதாகவே சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. மேலும் பிள்ளைகளுக்கான துஷ்பிரயோகங்கள் என்பது தூரத்திலிருந்து வருவதில்லை. அனைத்தும் வீட்டுக்குள்ளும், அயலவர்கள் மூலமாகவுமேதான் வரும் என்பதைக் கண்காணிப்பதில் பெற்றோர்கள் அவதானம் காட்ட வேண்டும். குறிப்பாகத் தாய்மார்கள் கண்காணிப்பு விடயத்தில் அக்கறை கொண்டவர்களாக இருக்கவேண்டும். வேலியே பயிரை மேய்ந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

கடந்த சில மாதங்களில் இடம்பெற்ற கொடூரமான குற்றச் செயல்கள் நாட்டு மக்கள் அனைவரையும் கதி கலங்க வைத்துவிட்டன. குறிப்பாக வித்தியா, சேயா, பிரசாந்தி போன்றவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சம்பவங்கள் பாரதூரமான கொடூரமாகும். "விரியும் மொட்டுக்களை கசக்கி எறியும்" கேடுகெட்ட கலாசாரம் முற்றாக ஒழிக்கப்பட்டு, சிறுவர்கள் பாதுகாப்பாக வாழும் சூழல் உருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

"பெற்றோர்களின் கவனக்குறைபாடு காரணமாகவே சிறுவர்களுக்கு அதிகமான பிரச்சினைகள் நிகழ்ந்துள்ளன. சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர்களை அறிவூட்டும் முகமாகவும், அவர்களின் பாதுகாப்புக்காகவும் விசேட ஜனாதிபதி செயலணி யொன்றை நிறுவியுள்ளதாக" கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தெரிவித்துள்ளமை சற்று மன ஆறுதலைத் தருகின்றது.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!

- ஆசிரியர்.

# தைப்பாவை



தையே நீ வருக
தமிழணங்கே வருக
மெய்யெல்லாம் அழகு
மின்ன நீ வருக
மைமேகக் கூந்தல்
மண் தடவ வருக
பைய நீ வருக
பாதமது சிவக்கும்.

நாற்குணமும் விளங்க
நங்கை நீ வருக
தேர்போல அசைந்து
தேவதை நீ வருக
ஆர்க்கும் பொன் சிலம்பு
அணிந்து நீ வருக
பார்க்கும் பல கண்கள்
படமுனைப் பிடிக்கும்.

வாழை, குலையோடு
வரவேற்கும் உன்னை
பாளையுடன் தென்னை
பரவசத்தில் மூழ்கும்
தாழை மலர் வாசம்
தழுவிவரும் காற்று
சூழலெலாம் இனிக்கும்
சுந்தரி நீ வருக!



தென்றல் நீ வருக
தேன்மலரே வருக
மன்றலது கமழ
மங்கை நீ வருக
குன்றமது தானும்
கோதையுனைக் கண்டு
நின்றபடி உருகும்
நேரிழையே வருக.

பொங்கலது பொங்கி
புதுப்பானை வைத்து
மங்கலங்கள் பழங்கள்
மலரெல்லாம் படைத்து
சங்கை நாம் செய்தோம்
தையே நீ வருக
எங்கும் உன் சிறப்பு
இனியவளே வருக.

நின் வழியில் நிற்கும்
நிழல் மரங்கள் எல்லாம்
பொன் மலர்கள் தூவும்
பூங்காற்று வீசும்
பண்பாடிப் புட்கள்
பாவையுனை வாழ்த்தும்
மண்ணெல்லாம் இந்த
மணிவிழா நடக்கும்.

உன்வரவு பார்த்து
ஊரெல்லாம் திரளும்
பெண்வரவு அன்றோ!
பிறகென்ன சொல்ல?
கண்ணெலாம் உன்னில்
கருவண்டாய் மொய்க்கும்
மண்ணாளும் எங்கள்
மகாராணி வருக.

தைப் பாவை வந்தால்
தமிழர் தம் எண்ணம்
கைகூடும் என்பார்
காத்து நாம் நின்றோம்
மைகூடும் வானில்
மஞ்சள் நிலாப் போல
செய்யவளே வருக
செகமெல்லாம் வணங்கும்.

**-வாகரை வாணன்.**

கட்டுரை

# ஈழத்தின் தலைசிறந்த நாடகக் கலைஞர் - நடிகமணி வி.வி.வைரமுத்து



உலகில் சிலர் புகழோடு பிறக்கிறார்கள். சிலர் புகழைத் தேடிக் கொள்கிறார்கள். சிலரிடம் புகழ் தேடி வருகின்றது. வைரமுத்து அவர்களைப் புகழ் நாடி வந்தது.

ஈழத்தின் நாடக வரலாற்றில் நடிகமணி வைரமுத்து அவர்களுக்கு தனிஇடம் உண்டு. ஈழத்து தமிழ் நாடகத் தந்தை என்று போற்றப்படும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் 'நடிகமணி' என்று போற்றிக் கௌரவிக்கப்பட்டவர். வைரமுத்து என்ற பெயரை அறியாதவர்கள் கூட நடிகமணியை நன்கு அறிவர்.

"ஈழத்தில் பண்டிதமணி என்றால் அது கணபதிப்பிள்ளை ஐயாதான். இரசிகமணி என்றால் கனகசெந்திநாதன்தான். புலவர்மணி என்றால் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்தான். அவ்வாறே நடிகமணி என்றால் வைரமுத்துதான்" என அறிஞர் உலகம் இன்றும் போற்றுகின்றது.

நடிகமணி வி.வி.வைரமுத்து 1924ஆம் ஆண்டு மாசி மாதம் 11 ஆம் திகதி காங்கேசன்துறையில் பிறந்தார். தந்தையார் பெயர் வேலப்பர். தாயார் ஆச்சிக்குட்டி. சகோதரர் பெயர் காசிநாதன். பிரபலமான இசைநாடக் குடும்பத்தில் பிறந்த இவருடைய தாய்வழிப் பேரன் வைரவியும் தந்தையார் வேலப்பாவும் புகழ்பெற்ற நடிகர்களாவர். தாய்வழி மாமன் பிள்ளைநாயகமும் ஈடிணையற்ற நாடகக் கலைஞராகவும், ஆர்மோனிய வித்துவானாகவும் திகழ்ந்தவர்.

1929 ஆம் ஆண்டு ஆரம்பக் கல்வியை வைரமுத்து அவர்கள் காங்கேசன்துறையிலிருந்த சைவ வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். எவ்வளவுதான் பெருங்கலைஞர்களாக விளங்கினாலும் சமுதாயத்தில் கூத்தாடிகள் என்று கணிக்கப்பட்ட காரணத்தினால் தந்தையார் மகனைப் படிப்பித்து அரசாங்க உத்தியோகத்தில் அமர்த்த விரும்பினார். மகனின் சுட்டித் தனத்தை கண்டு வருந்திய பெற்றோர் தங்கள் குடும்பத்துடன் மிக நெருக்கம் கொண்ட அல்வாயைச் சேர்ந்த ஆசிரியர் முருகேசரிடம் மகனை ஒப்படைத்தனர்.

1932 கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் 3 ஆம் வகுப்பில் அனுமதிக்கப்பட்டார். இங்கே மிகச் சிறந்த ஆசிரியர்களிடம் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றார் வைரமுத்து. கல்வி கற்க தொடங்கியதும் அவருடைய இயல்பான ஆற்றல்களை ஆசிரியர்கள் இனங்கண்டு கொண்டார்கள். ஒருசமயம் சிவராத்திரி விழாவின்போது அப்பூதியடிகள் நாடகத்தை ஆசிரியர் முருகேசர் அவர்கள் பயிற்றி மேடையேற்றினார். இதில் அப்பூதியடிகளாக வைரமுத்து பாத்திரமேற்று நடித்துப் பலருடைய பாராட்டுதல்களையும் பெற்றார். இதுதான் அவருடைய முதல் அரங்கப் பிரவேசமாக அமைந்தது. இதைத் தொடர்ந்து, அப்பர், சுந்தரர், மணிவாசகர், மெய்ப்பொருள் நாயனார் ஆகிய பாத்திரங்களை ஏற்று நடித்தார். இத்தகைய நாடகங்களில் மட்டுமன்றி சமூக நாடகங்களிலும் பங்கேற்று நடித்தார். குறிப்பாக நகைச்சுவை பாத்திரமேற்று நடிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். இந்த நகைச்சுவைப் பண்பு இவர் மரணமடையும் வரை கூடவேயிருந்தது.

அதுமட்டுமல்ல, பாடசாலையில் தேவாரம் பாடுதல், சங்கீதப் போட்டிகளில் பங்குபற்றுதல், நாடகங்களில் நடித்தல், தனிக் கச்சேரி செய்தல் எனப் பல துறைகளில் ஒளி வீசத் தொடங்கினார்.

அதேவேளை படிப்பிலும் அதிக கவனம் செலுத்தி வந்தார்.

1941 தொடக்கம் 1942 வரை இவர் மதுரையில் வித்துவான் செல்லப்பாபிள்ளை என்பவரிடம் முறையாகக் கர்நாடக இசையைக் கற்றுத் தெளிந்தார். அதேவேளை மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய வகுப்புகளிற் கற்று பிரவேச பண்டிதர், பாலபண்டிதர் ஆகிய பரீட்சைகளிலும் சித்தியடைந்தார். இரண்டு வருடங்களின் பின் வைரமுத்து இலங்கைக்கு ஒரு பூரணமான கலைஞராக மீண்டார்.

இரத்தினபுரியில் கிடைத்த ஆசிரியத் தொழிலையும் நாடகக் கலையின் மேல் உள்ள ஆர்வத்தால் உதறித் தள்ளினார். இசை நாடகப் பரம்பரையைச் சேர்ந்த அண்ணாவி சின்னையாவின் மகள் இரத்தினத்தை திருமணம் செய்தார்.

இவருடைய கலை உலக வாழ்வை நோக்கின் சிறந்த நடிகராக மட்டுமன்றி, ஆர்மோனிய வித்துவானாகவும், பக்கப்பாட்டு வித்துவனாகவும் விளங்கியிருந்தார். இவரது கலையுக வாழ்வில் அரிச்சந்திர 'மயானகாண்டம்' ஒரு மைக்கல், திருப்புமுனை என்றே சொல்லலாம்.

1952 ஆம் ஆண்டு வைரமுத்து குழுவினரின் சம்பூர்ண அரிச்சந்திரா நாடகம் முல்லைத்தீவில் மேடையேறியபோது இந்நாடகத்தை ஈழத்துப் பிரபல எழுத்தாளர் இலங்கையர்கோன் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. இப்படியொரு நடிகர் எம்மத்தியில் இருக்கிறாரா என இவர் அதிசயப்பட்டார். வியந்ததோடு நின்றுவிடாது இவரை நாடக உலகில் எப்படி நன்கு பயன்படுத்தலாம் எனவும் சிந்தித்தார். மகாஜனாக் கல்லூரியில் அதிபராக விளங்கிய திரு.சண்முகசுந்தரம் மூலம் வைரமுத்துவை அழைத்து அவருடன் உரையாடினார். பழைய முறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றாது, பழைய நாடகங்களைப் பழைமை கெடாது புதிய வடிவில் அமைத்து நடித்தாலென்ன என தனது ஆலோசனையைத் தெரிவித்து அதற்கான சம்மதத்தினை வைரமுத்துவிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

1953 ஆம் ஆண்டு இலங்கைக் கலைக் கழகம் தேசிய மட்டத்தில் ஒரு கலைவிழாவை ஏற்பாடு செய்ய விரும்பியது. அதன் தலைவராக அப்பொழுது பணிபுரிந்தவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள். கலைவிழாவின் ஓரம்சமாக மரபுவழி நாடகம் ஒன்றை மேடையேற்ற விரும்பினார்.

தனது கருத்தை இலங்கையர்கோனிடம் தெரிவித்தபோது வைரமுத்துவின் நடிப்பாற்றல் பற்றியும் இசைஞானத்தைப் பற்றியும் அவர் விதந்து கூறி இப்பணியை வைரமுத்துவைக் கொண்டே செய்யலாம் என்றார். பேராசிரியர் வித்தியானந்தனும் ஏற்கனவே திரு.சண்முக சுந்தரம் மூலம் வைரமுத்துவைப் பற்றி அறிந்தவராகையால் அதற்கு உடன்பட்டார்.

கலைக்கழகம் மேடையேற்றும் நாடகத்தை வானொலிக்கேற்றவாறும் தயாரிக்க வேண்டுமென்றும், மேடையேறிக் கொண்டிருக்கும் போதே அது இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பப்பட வேண்டும் என்றும் பேராசிரியர் விரும்பினார்.

இலங்கை வானொலியில் தமிழ் நாடகத் தயாரிப்பாளராகப் பணியாற்றிய "சானா" என்று அழைக்கப்பட்ட சண்முகநாதன் என்பவர் சிறந்த நகைச்சுவை நடிகராவார். அவர் ஏராளமான வானொலி நாடகங்களைத் தயாரித்து அளித்தவர். நாடகத்துறையில் நன்கு பயிற்சி பெற்றவர்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன், இலங்கையர்கோன், சண்முகநாதன் ஆகிய மூவரும் ஒன்றாக இணைந்து மரபுவழி நாடகம் ஒன்றை மேடையேற்றுவது பற்றிக் கலந்துரையாடினர்.

"அரிச்சந்திரா" நாடகத்தை ஒரு மணித்தியால நாடகமாக சுருக்கி எழுதும் பணியை இலங்கையர்கோன் ஏற்றுக்கொண்டார். ஈழத்துப் பிரபலமான இசைநாடக நடிகர்களை இணைத்துப் பயிற்சி கொடுக்கும் பொறுப்பை "சானா" ஏற்றுக் கொண்டார். நாடகத் தயாரிப்பைப் பேராசிரியர் ஏற்றுக்கொண்டார்.

நாடகத்திற்குப் பொருத்தமான நடிகர்களைத் தெரிவு செய்வதில் சில சிக்கல்கள் ஏற்பட்ட போதும் வைரமுத்து பொருத்தமான நடிகர்க ளைத் தேர்ந்தெடுத்தார். அவரே அரிச்சந்திரனாக நடிப்பதென முடிவு செய்யப்பட்டது.

இலங்கையர்கோன், "சானா" என அழைக் கப்பட்ட சண்முகநாதன், பேராசிரியர் ஆகியோ ரின் ஒத்துழைப்பினாலும், வைரமுத்துவின் அர்ப்பணிப்பான நாடகப் பயிற்சியினாலும் மூன்று மாதக் கடும் முயற்சியின் பின் 1953 ஆம் ஆண்டு தீபாவளித் தினத்தன்று யாழ். மாநகர சபை மண்டபத்தில் மேடையேறியது. மயான காண்ட காட்சியைப் பார்த்து ஆச்சரியப்படாதவர் களோ, கண்ணீர் விடாதவர்களோ இல்லை என லாம். இலங்கையிலும் இப்படி ஒரு நடிகன் இருக்கிறானே என்று ஆனந்தப்படாதவர்களே இல்லை.

'சுடர்விளக்கானாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்' என்பது பழமொழி. வைரமுத்து ஒரு சுடர்விளக்கு. அவ்விளக்கு குடத்துள் விள்க்காக இல்லாமல் மலை மேல் விளக்காக ஒளிவீசச் செய்த பெருமை இலங்கையர்கோன், பேராசிரி யர் வித்தியானந்தன் "சானா" என்று அழைக்கப் பட்ட சண்முகநாதன், மகாஜனாக் கல்லூரி அதி பராக இருந்த சண்முகசுந்தரம், பேராசிரியர் சிவத்தம்பி, கலையரசு சொர்ணலிங்கம், நாவற் குழியூர் நடராஜன் போன்ற பல குறிப்பிடத்தக்க வர்களைச் சாரும். இறுதி வரைக்கும் வைரமுத்து இவர்களை மறக்காமல் நன்றியுடையவராகவே இருந்திருக்கிறார்.

இந்த இடத்தில் இன்னுமொரு உண்மையை யும் எடுத்துக்கூற வேண்டும். நடிகமணி வைர முத்துவை வளர்த்துவிட்டவர்கள் பாமர மக்களா கிய கலைஞர்கள் என்பதையும் மனதிற் கொள்ள வேண்டும். வைரமுத்து அவர்கள் மேல் மட்டத்தவ ருக்குரிய கலைஞராக மட்டுமன்றி, மக்கள் கலை ஞராகவும் விளங்கினார் என்பதை யாவரும் அறிவர்.

மயானகாண்டம் நாடக அரங்கேற்றத்துடன் வைரமுத்து புகழின் உச்சிக்கே சென்றுவிட்டார் என பத்திரிகைகள் எல்லாம் புகழ்ந்தன.

1956 ஆம் ஆண்டிலிருந்து வைரமுத்துவின் நாடகங்கள் மேடையேறாத ஈழத்துக் கோயில் களே இல்லை எனலாம். இவருடைய நாடகங்கள் நடிக்கப்படாத அரங்குகளே இல்லை எனலாம். 1957 ஆம் ஆண்டில் இருந்து பேராதனைப் பல் கலைக்கழகத்தில் ஒவ்வோர் ஆண்டும் வைர முத்துவின் நாடகங்கள் நடைபெறுவதுண்டு. இந்நாடகங்களை பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களே தயாரித்தளித்தார். இதனால் தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமன்றிச் சிங்கள மக்களும் வைரமுத்துவின் ஆற்றலை அறியத் தொடங்கி னர். தமிழ் மக்கள் மத்தியிலும் அற்புதமான நாடகக் கலைஞர்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து மனந்திறந்து பலரும் பாராட்டினர்.

தனது மூத்த மகளின் பெயரால் வசந்தகான சபா ஒன்றை 1953 இல் உருவாக்கினார். இலங்கையர்கோன் தலைமையில் நிகழ்ந்த இவ்விழா வைரமுத்துவின் எதிர்காலப் புகழுக்கு ஓர் அத்திவாரமாக அமைந்தது. வசந்தகானசபா, மயானகாண்டம் மட்டுமன்றி வேறும் பல இசை நாடகங்களை மேடையேற்றி வெற்றி கண்டது. வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி, சாரங்கதாரா, அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி நல்லதங்காள், பக்தநந்தனார், கோவலன் கண் ணகி, ஞானசவுந்தரி, பிரகலாதன் என்பன முக்கி யமானவை.

1966 ஆம் ஆண்டு இதுவரை காலமும் நாட் டுக் கூத்தாக ஆடப்பட்டு வந்த "பூதத்தம்பி" எனும் கூத்தை இசை நாடகமாக அமைத்து முதன்முத லில் மேடையேற்றிய பெருமை இச்சபைக்கே உண்டு. வசந்தகான சபா நாடகங்கள் ஈழத்தில் நடைபெறாத இடங்களே இல்லை. யாழ்ப்பாணத் தில் உள்ள ஒவ்வொரு குக்கிராமத்திலும் பன் முறை வைரமுத்துவின் நாடகங்கள் மேடை யேறின.

சில நடிகர்களுக்கு நடிக்கத் தெரியும்; பாடத் தெரியாது. சிலருக்குப் பாடத் தெரியும்; நடிக்கத்

தெரியாது. சிலருக்கு இரண்டுமிருக்கும் தோற்றப் பொலிவு இராது. இவையனைத்தும் ஒருங்கே கைவரப் பெற்ற நல்ல நடிகர்தான் வைரமுத்து. மயானகாண்டத்தைப் பார்த்து மகிழ்ந்த ம.பொ. சிவஞானம் "ஈழம் செந்தமிழ்ப்பயிர் வளர்க்கும் சிறப்புடையது. நாவலர் பெருமான் போன்றவர் கள் அதற்குச் சான்று. இயலிசை நாடகம் ஆகிய முத்தமிழ் பயிரையும் வளர்ப்பதில் ஈடிணையற்று விளங்குகிறது என்பதற்கு கலைஞர் வைரமுத்து நல்ல சான்று" என்றார்.

வைரமுத்து சிறந்த கலைஞனாக வாழ்ந்த போதும் அரசியலிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். முழுநேர அரசியல்வாதியாக வாழவில்லையாயி னும் இவருள்ளத்தில் தனக்கென ஒரு அரசியல் சித்தாந்தம் இருந்தது. இவர் இறக்கும் வரை கலை யையும், தமிழர் விடுதலையையும் இரு கண்க ளாகக் கொண்டு வாழ்ந்தார் என்பதை யாவரும் அறிவர்.

யாழ்ப்பாணத்து அடிநிலை மக்கள் விரும்பிப் பார்த்து களித்து வந்த நாடக மரபினை நகர ரசனை மட்டத்திற்குக் கொண்டு வந்தவர் வைர முத்து. இடத்துக்கும், இரசிகர்களுக்கும் ஏற்ற வண்ணம் நாடகத்தை நடத்தும் ஆற்றல் வைர முத்துவிற்கு உண்டு. விடிய விடிய நித்திரை விழித்து நாடகம் பார்க்கும் இரசிகர்களுக்காக இரவு முழுவதும் நாடகமாடினார். அவர்களுள் பெரும்பாலானோர் நடிகமணி வைரமுத்துவைத் தான் இரசித்தார்கள். "வைரமுத்து வந்ததும் எங் களை நித்திரையிலிருந்து எழுப்புங்கள்" என்று கூறி நித்திரை செய்வதும் வைரமுத்து மேடை யில் தோன்றியதும் எழுவதுமாக நாடகம் பார்த் தவர்கள் இருந்திருக்கிறார்கள்."

இவர் நடிக்கத் தொடங்கிய தொடக்க காலத் தில் அவருக்கு பெயரும் புகழும் குவியத் தொடங் கிய போது நேர்த்திக் கடனுக்காக அவருடைய நாடகங்களைப் பல கோயில்களிலும் மேடை யேற்றியவர்களும் உண்டு. நாடகம் முடிவுற்றதும் அவர் ஒப்பனைகளைக் களையுமுன் அவரிடம் வந்து விபூதி பெற்று ஆசீர்வாதம் பெறும் பக்தி மிக்க இரசிகர்கள் இருந்திருக்கிறார்கள். குறிப் பாக " வள்ளி திருமணம்" நாடகம் நிறைவுற்றதும் முருகன் வேடத்தில் இருக்கும் அவரிடம் ஆசீர் வாதம் பெற்றவர்கள் நிறையப் பேருண்டு.விசம் தீண்டிப் பிழைத்துக் கொண்டவர்கள் நேர்த்திக் கடனுக்காக "அரிச்சந்திரா" நாடகத்தை மேடை யேற்றுவிப்பர். நாடகம் நிறைவுற்றதும் விசம் தீண்டித் தப்பியவர் விபூதி பெற்று ஆசீர்வாதம் பெறுவதும் வழக்கம். பருத்தித்துறை நெல்லண் டைப் பத்திரகாளி அம்மன் கோயிலில் இவரு டைய நாடகங்கள் பல தடவை நேர்த்திக் கட னுக் காக அரங்கேறியுள்ளன.

நல்ல திடகாத்திரமான உடல் வளம், முகப் பொலிவு, குரல்வளம், இசைஞானம், லயஞானம், தூய்மை, பொறுமை, நடுநிலைமை, தன்னடக் கம், சோர்வின்மை, தாரண்மை, ஆர்வம், கவனம், ஞாபகசக்தி, இலக்கிய அறிவு, உலகியல் ஞானம், சமயோசித புத்தி, சபைக்கூச்சமின்மை என்பன படைத்தவனாகவும் சூத்திரதாரி இருத்தல் வேண் டும். வைரமுத்துவின் அரங்கிலும் அவரே சூத்திர தாரியாகச் செயற்பட்டார். அவர் முக்கிய பாத்திர மேற்று நடித்தாலும், நாடகத் தயா ரிப்பு, ஒத்திகை, பின்னணி இசை, மேடைக்காட்சி அமைப்பு, ஒப் பனை ஆகிய அனைத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தார். பாடவும், ஆட வும், அனைத்து இசைக் கருவிகளைக் கையாள வும், மேடைக் காட்சிகளை அமைக்கவும் அறிந்த ஒருவராகவும் இருந்தமையால் இவருடைய நாடக அரங்கு முழுமை பெற்ற அரங்காக விளங் கியது. அது மட்டுமல்ல "இசையால் நடிப்பையும் நடிப்பால் இசையும் அகட்டி ஒன்றை ஒன்று தழு வியதாக இசை நாடக அரங்கை தனதாக்கிய பெருமையும் நடிகமணி அவர்களுக்கு உண்டு."

வைரமுத்துவின் அரங்கில் இசை முதன்மை பெற்றது. இசையை உணர்ந்து சுவைக்க முடி யாதவர்கள் இவரின் அரங்கை அனுபவிக்க முடி யாது. ஆனால் வைரமுத்துவின் ஆற்றல் என்ன வென்றால் இசை ஞானம் இல்லாதவர்களும் இவர் பாடும் பாடல்களில் மயங்கி தம்மை மறந்து அனுபவித்தமையேயாகும்.

வைரமுத்துவின் சிறந்த ரசிகர்களாக எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகியோரும் படித்த உயர் மட்ட அதிகாரிகள், அறிஞர்கள் ஆகியோரும் இருந்திருக்கிறார்கள். இவர்கள் மட்டுமன்றி சாதாரண படிப்பறிவு உள்ளவர்களும், அடிநிலை மக்களும் இணைந்து காட்டிய 'ஊக்கமும்', 'ஒத்துழைப்பும்', 'ஆர்வமும்தான்' நடிகமணி வைரமுத்து என்னும் கலைஞன் உருவாகி நிலைபெற காரணமாக இருந்தன.

1953 வைரமுத்துவின் 'மயானகாண்டம்' நாடகம் இலங்கை வானொலியில் நேரடியாக ஒலிபரப்புச் செய்யப்பட்டது. இதனையடுத்து இவருடைய இசை நாடகங்களைக் கேட்டு இரசிப்பதற்கு விரும்பிய ஆயிரக்கணக்கான இரசிகர்கள் வானொலிக்கு கடிதங்கள் பல எழுதலாயினர். இவ்வேண்டுகோளை ஏற்று இலங்கை வானொலி நிலையத்தினர் இவருடைய நாடகங்கள் பலவற்றை ஒலிபரப்புச் செய்தனர்.

1959 இல் இலங்கைக்கு வருகை தந்த பிரித்தானிய ஒலிபரப்பு நிலையத்தைச் சேர்ந்த (LEVI) 'லெவி' என்பவர் 'மயானகாண்டம்' நாடகத்தை ஒளிப்பதிவு செய்து இலண்டன் தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்தார். பின்னர் இந் நாடகம் வேறு சில நாடுகளிலும் ஒளிபரப்பப்பட்டது. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் வைரமுத்துவின் நாடகங்களை ஒளிபரப்புச் செய்தது இவருக்குக் கிடைத்த பெரிய அங்கீகாரம் எனலாம்.

அறுபத்தைந்து வருட காலம் மண்ணுலக மேடையில் இவராடிய வாழ்க்கை எனும் நாடகமும் நாடக மேடையில் ஆடிய இசை நாடகங்களும் மதிப்பீடு செய்யப்பட முடியாதவை. 1989 ஜுலை 8 ஆம் திகதி இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

*"சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி யென்னச்*
*சங்கீதமதில்*
*மிக்க நன்னாடக மேதைமை பெய்து மிகச்*
*சுவையாய்*
*எக்களிப் பூட்டிய நற்கலை வாணன்*
*இறக்கவில்லை*
*சிக்கெனப் பற்றியெம் நெஞ்சினில்*
*வைரமுத்தாயுளனே."*

- சொக்கன்

வைரமுத்து நாடகக் கலை இலக்கியத்தில் ஒரு சகாப்தம் அவருடைய நாடகங்களை ஒன்றிப் பார்க்கும் போது புதிய அர்த்தங்களும், அனுபவங்களும் உண்டாகும். நாடக உலகத்திற்குப் புதியதொரு பரிமாணத்தையும், செழுமையையும் ஏற்படுத்தி விட்டுச் சென்றுள்ளார். வைரமுத்து அவர்கள் நடிகமணி, நாடகச் சக்கரவர்த்தி, நாடகவேந்தன், நடிப்பிசை மன்னன், நாடகரத்னா, நடிப்பிசைச் சக்கரவர்த்தி, நவரஸ திலகம், கலைக் கோமான் ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். வாழ்க்கை முழுவதையும் கலை உலகுக்காக அர்ப்பணித்த இம்மேதையின் பணியை நன்றி உணர்வுடன் நாம் ஒவ்வொருவரும் ஒரு கணம் நினைவு கூருவோமாக!




திருமதி வளர்மதி சுமாதரன்
ஆசிரியை
கொ/சைவமங்கையர்
வித்தியாலயம்.


## அமெரிக்க நாணயத் தாளில் அன்னை திரோசா உருவம்



யூகோஸ்லாவியாவில் உள்ள ஸ்கோபிஸ்ஜி என்ற இடத்தில் அல்பேனியப் பெற்றோருக்கு 26.08.1910 இல் பிறந்த அன்னை திரேசா, இள வயதிலேயே துறவறம் பூண்டு பொதுநலப் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். ஜவஹர்லால் நேரு விருது, சமாதானத்திற்கான நோபல் பரிசு, இந்தியாவின் பாரத ரத்னா விருது என்பவற்றைப் பெற்றுக் கொண்ட இவருக்கு 2003 இல் அருளாளர் பட்டம் வழங்கப்பட்டது. இத்தகைய பெருமைக்குரிய அன்னை திரோசாவின் உருவப்படம் அமெரிக்க டொலர் நாணயத் தாளில் இடம்பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

# "தாயக ஒலி"யின் கனேடியச் சிறப்பிதழ்

## - கனடாவில் வெளியீடு



அன்று ஞாயிற்றுக்கிழமை (06.09.2015) மாலை 3 மணிக்கு கனடா, ஸ்காபுரோ நகரசபை மண்டபத்தில் இணுவில் திருவூர்ஒன்றியம் - கனடாவின் அனுசரணையில் இரு நூல்கள் வெளியிடப்பட்டன. டென்மார்க் வாசி இணுவில் வ.க.பரமநாதனின் "காலம் தந்த வலிகள்" கவிதைத் தொகுப்பும், இலங்கையிலிருந்து வெளியாகும் இரு திங்கள் ஏடான "தாயக ஒலி" கனடாச் சிறப்பிதழும் ஒரே மேடையில் வெகு விமர்சிசையாக வெளியிட்டு வைக்கப்பட்டன. மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பித்து செல்வி யாதவி சண்முகானந்தம் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்து, கனேடிய தேசிய கீதம், பேராசிரியர் இ.பாலசுந்தரத்தின் தலைமையுரை எனச் சூடுபிடித்தது விழா.

தலைமையுரையில் பேராசிரியர் இ.பாலசுந்தரம் "எத்தனையோ பெரும் கலைஞர்கள் பிறந்த மண் இணுவிலில் உதித்த வ.க.பரமநாதனின் கவியின்  நயம், நூலில் தெரிகிறது. இது ஒன்றும் ஆச்சரியமில்லை" எனப் புகழாரம் சூட்டினார். ஆசியுரை வழங்கிய ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆ.சுப்பிரமணியம் 'காலம் தந்த வலிகள்' நூலின் சிறப்புக்களைக் கூறினார். வாழ்த்துரையில் இணுவில் திருவூர் ஒன்றியத் தலைவர் செ.தளையசிங்கம், நூலாசிரியரை வாழ்த்தியதுடன் விழாவுக்கு வருகை தந்தோர்க்கு நன்றி தெரிவித்தார். நூலை வெளியிட்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.மகேந்திரன் இந்நூலிலே தன்னைக் கவர்ந்த பல பகுதிகளைச் சுவைபடக் கூறிச் சபையைக் கலகலப்பாக்கினார். முதற்பிரதியை வைத்தியர் பகீரதன் துரைராஜா பெற்றுக் கொண்டார்.

அடுத்து வாழ்த்துரை நிகழ்த்திய கனடா உதயன் ஏட்டின் ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் கவிதை நூல் பற்றிச் சிறப்புறக் குறிப்பிட்டார். நூல் ஆய்வுரையில் பொன்னையா விவேகானந்தன் (M.A ) இந்நூலில் வரும் நிலம் புகுந்த வலிகள், புலம் புகுந்த வலிகள், பொதுவில் புகுந்த வலிகள் எனும் முப்பகுப்புகளையும் சுவைபட விளக்கினார். அவர் இந்நூலைப் படித்தபோது பிடித்தவற்றை மேடையில் படித்துக் காட்டி நூலின் சிறப்புக்களைக் குறிப்பிட்டுப் பேசினார். ஆசியுரையில் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், நூலாசிரியரின் கவிதை ஈடுபாடு, கவியரங்க அனுபவம், ஆற்றல் போன்றவற்றைத் தனக்கே உரிய பாணியில் எடுத்துரைத்தார். பின் நூலாசிரியர் வ.க.பரமநாதன் நன்றியுரை செலுத்தினார்.

அதனையடுத்து 'தாயக ஒலி' கனடாச் சிறப்பிதழ் வெளியீடு இடம்பெற்றது. கனடா தமிழ் எழுத்தாளர்

இணையத்தின் தலைவர் கலாநிதி சிவநாயகமூர்த்தி தாயக ஒலி கனடாச் சிறப்பிதழை ஆய்வு செய்து உரை நிகழ்த்தினார். தாயக ஒலி கனடாச் சிறப்பிதழின் அட்டைப் படத்தின் கண்ணைக் கவரும் அழகு முதல் உள்ளே காணப்படும் ஒவ்வொரு ஆக்கங்கள் பற்றியும் அலசியதுடன் அதன் சுவைகள் பற்றி நயதுடன் எடுத்துக் கூறினார். கனடாச் சிறப்பிதழில் இடம்பெற்ற சிறுகதைகள், கட்டுரைகள், சிரிகதைகள், கவிதைகள், நூல் அறிமுகம் மற்றும் பல விடயங்கள் பற்றிய தனது ஆய்வுகளை முன்வைத்தார்.

அதனையடுத்து நூலை அவர் வெளியிட முதற்பிரதியை பண்டிதர் ச.வே.பஞ்சாட்சாரம் பெற்றுக் கொண்டார். இதன் பின் சிறப்புப் பிரதிகளைப் பலர் வந்து பெற்றுக் கொண்டனர். இணுவில் திருவூர் ஒன்றியச் செயலாளர் ஆர்.எம்.கிருபாகரனின் நன்றியுரையோடு விழா நிறைவுபெற்றது. ●

-கிருபா

## அறிந்தவையும் தெரிந்தவையும்

# பூமிக்கு சமீபமாக மற்றொரு கிரகம் கண்டுபிடிப்பு

சூரிய குடும்ப முறைக்கு அப்பால் 21 ஒளியாண்டுகள் தூரத்தில் மற்றொரு பாறைத் தன்மை வாய்ந்த கிரகத்தை நாசா கண்டுபிடித்திருக்கிறது.

இந்தக் கிரகம் பூமியிலும் பார்க்கப் பெரியதாகும். விஞ்ஞான விபரங்களின்படி தங்கச் சுரங்கம் என்று கணிக்கப்படும் சாத்தியப்பாட்டை இது கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நாசாவின் ஸ்பைட்சர் விண்வெளி தொலைக்காட்டியைப் பயன்படுத்தி இந்தக் கிரகம் இருப்பதை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். விண்வெளி ஆராய்ச்சியில் இது பாரிய மைல்கல்லாக கருதப்படுகின்றது.

அண்மையில் பூமியைப் போன்ற கெப்லர் 452 பீ கண்டுபிடிக்கப்பட்டது. இப்புதிய கிரகத்திற்கு எச்.டி.219134 பீ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் நட்சத்திரம் இக்கிரகத்திற்கு மிக சமீபமாக இருப்பதால் உயிர் வாழ்வுக்கான தன்மையைக் கொண்டதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. ஆனால் இக்கிரகத்திற்குச் செல்வதற்கு இயலாத வகையில் அது மிக வெப்பமானதாக இருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனாலும் கெப்லரிலும் பார்க்க இது குறிப்பிடத்தக்களவு பூமிக்கு அண்மித்தாக இருக்கின்றது. 21 ஒளியாண்டுகள் தூரத்திலேயே இது இருக்கின்றது.

நாசாவின் புதிய பிரபஞ்ச ஆராய்ச்சியின் விளைவாக புளூட்டோவின் பிந்திய படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. பூமியின் சுழற்சிப் பாதைக்கு அப்பால் 36373 மைல் மணி வேகத்தில் சென்று இந்தப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. வேறு எந்த விண்கலங்களும் முன்னர் இத்தகைய படங்களைப் பிடித்திருக்கவில்லை. இந்த வேகத்தில் விண்கலத்தில் நீங்கள் பூமியிலிருந்து சென்றால் எச்.டி.219134 பீ யை சென்றடைய 387000 ஆண்டுகள் எடுக்கும். எச்.டி.219134 பீயை நேரடியாகப் பார்க்க முடியாது. தொலைக் காட்டிகளினாலும் அதனைப் பார்க்க இயலாது. ஆனால் அந்தக் கிரகம் சுற்றி வரும் நட்சத்திரத்தை வெறும் கண்களால் பார்க்கலாம் எனக் கூறப்படுகின்றது. எதிர்வரும் தசாப்தங்களில் அதிகளவுக்கு ஆராயக்கூடிய ஒன்றாக இந்தக் கிரகம் இருக்கின்றதென நாசாவில் உள்ள ஸ்பயிட்சர் விண்வெளி தொலைக்காட்டி விஞ்ஞானி மைக்கல் பேர்னர் தெரிவித்திருக்கிறார். பூமியிலும் பார்க்க சுமார் நாலரை மடங்கு கனதியானது என இந்தக் கிரகம் தொடர்பான அவதானிப்புகள் முன்னர் வெளிவந்திருந்தன. இந்தக் கிரகம் தனது நட்சத்திரத்தை மூன்று நாட்களுக்கு ஒரு தடவை சுற்றி வருவதாகவும் அனுமானிக்கப்பட்டுள்ளது. ●

கவிதை

# தொலைந்துவிட்ட என் இளமை நாட்கள்!

கனடா "Monsoon Journal" பத்திரிகையில் வெளிவந்த "My Lost Youth" ஆங்கிலக் கவிதையின் தமிழ் வடிவம்

ஆங்கிலத்தில் : இணுவை செ.கமலாகரன் தமிழில்: ச.வே.பஞ்சாட்சரம்

உலகின் நாடுகள், ஊர்கள் பலப்பல போனேனே!
ஒன்றும் என்னூர் இணுவிலை மிஞ்சக் காணேனே!
நலமிகு உடலும், நல்ல மனமும் நல்குவது!
நன்னீர், உணவு, உல்லா சங்கள் பல்குவது!

அன்பிற் சமத்துவ அயலோர் சூழற் சிறுவன் நான்,
அனலும் வெயிலில் அலையெழும் புழுதி குளித்தும்தான்,
மின்னல் இடியுள் வீழும் மழையில் நனைந்துந்தான்
வீதியில் கிலேச மின்றித் திரிந்தே னே, அந்நாள்!




இணுவை
செ.கமலாகரன்

குளக்கரைதான் அன்றைச் சிறுவர் எங்கள் புகலிடமாம்!
கொய்யாக் கனிகள் குலுங்கவ் வடலிகள் மகிழிடமாம்!
களவாய்ப் புகுந்து, காடாய் நெருங்குங் கிளைகளிலே
கணத்துள் ஏறிக் கனிபறித் துண்ணும் வழமையில்நாம்!

அன்னை ஊரே! அடுத்துன் விளாத்தி யடிவீதி
அமைந்த கந்தசுவாமி கோவில் தன்வீதி
தன்னை நினைவில் கொண்டு வந்து சிலிர்ப்பிக்கும்
தகிக்கும் என்றன் தாய்மண் பாச மனத்துக்கம்!

தாயேஇவ் வீதியில் தத்திப் பழகி மிதிவண்டி,
தடுக்கி வீழ்ந்தும் இரத்தம் சிந்தும் புண்கொண்டு
காயங்கள், ஊமைக்காயங்கள் தமக்கு மருந்திடுமுன்
கத்திக் கதறி அப்பா உதையால் வருந்திடுவோம்!

"கட்டாயம் ஆறு மணிக்குள் வீட்டில்!" கட்டளையால்
கடுகி ஓடி விளையா டிவியர் வைதோய்காற்
சட்டை கழன்று விழவே தோழர் கைதட்டிச்
சிரிக்கச் சினந்த திடலும் இந்த வீதியேதான்!



கவிஞர்
ச.வே.பஞ்சாட்சரம்

வளர்ந்தோர் ஒருபுறம் ஆடுவர் அங்கே காற்பந்து!
மறிப்பார் தாச்சி! மகிழ்வார் ஓர் குழு கைப்பந்து!
இளஞ்சேய் நாமோ 'ட'போட்டுகளாய்த் துடுப்பாட்டம்!
இடறுங்குன்று குழிவீதி தருங் கடுப்பேற்றம்!

விரிந்த நிழல் கூடி அமர்ந்தோர் முதிய ரணி
விளையா டியபடி தாயம், மிகவும் விரியவிழி
கரிசனை யோடே எம்மையும் ஊக்கும்! தம்பழைய
கட்டிள வயதுக் கனவுகள் தூண்டல் தான்அதுவும்!

அவர்களில் ஒருவர் அன்றைத் தினசரி படித்திடுவார்!
அனைவரும் அக்கறை யாய்த்தம் காது கொடுத்திடுவார்!
எவை மிகப் பிந்திய செய்திகள் என்றுங் கண்டறிவார்!
இருப்பவர் ஆய்வுரை களையும் மனதில் கொண்டிடுவார்!

என்றும் தனது மரபு விழுமி யங்களினை
இனிதே பேணும் என்னூர்க் கெந்தச் சொர்க்கம்இணை?
துன்றும் வாழ்வின் துறைகள் யாவும் அச்சமின்றித்
துய்த்து நிற்பர் சுகங்கள் தோழமை யோடும் ஒன்றி!

வைகறை வேளை பலகணி ஊடாய் நுழைகதிரின்
வாலொளிக் கீற்றும், கோவில்கள் கண்டாமணி ஒலியும்
கையெனுஞ் சிறகடி மரக்கிளைச் சேவல் கூவல்களும்
காலமாம் நீள மரவள்ளிக் கிழங்கின் சீவல்களே!

முழுக்கி ராம மக்களிடையும் விறுவிறுப்பு!
முனைப்பார் தேன்கூட் டீக்கள் போலச் சுறுசுறுப்பு!
சுழன்றுழைப்பார்தம் துறைகளில் நெஞ்சம் தோய்ந்தவராய்!
தோன்றுவர் அங்கே சுயநல எண்ணம் தேய்ந்தவராய்!

உன்னத விளைச்சல் பயிரில் உந்தும் விழைவினிலே
உழைப்பர் உழவர் குடும்ப உறுப்பினர் துணையினிலே
என்ன பாசம் என்ன நேசம் தேனுந்தும்!
இணைந்து பகலின் எல்லைவரைமுயல் ஆனந்தம்!

தோட்ட வெளியில் துலாக்கள் மிதித்தே கமக்காரர்
துண்டு, துண்டாய் நடுநிசி தன்னில் எடுப்பாகப்
பாட்டி சைப்பர்! பலகால் நானுங் கேட்டிருப்பேன்!
படுக்கையில் கிடந்த படியேஅதைநான் மீட்டிசைப்பேன்!

இளவெயில் காலையில் புத்தகப் பையைப் பின்னிருக்கை
ஏற்றி, மிதிவண்டி விரைபள்ளிச் சிறுவர்! தம்வேலைத்
தளங்களைச் சார்ந்திடப் பறக்கின்ற பணியர், பல்தொழிலர்
தம்அந்தக் காட்சிகள் என்மனாங் கவரும் நல்லெழில்கள்!

தெருவில் ஆண்டு முழுவதும் இராப்பகல் திரிகின்ற
சிற்றுழு பொறிகள் செய்யும் இரைச்சல் ஒலியெல்லாம்,
எரு, குழை ஏற்றிய பார வண்டிகள் கடகடப்பு
இவை அன்று வெறுத்தன! இன்றோ கேட்கத் துடிதுடிப்பு!

சின்ன ராசா, புண்ணிய மூர்த்திகள் தவிலுடனே,
சீரிணு வையோடு சேர்ந்தே வளர்ந்த நாதஸ்வர
இன்னிசை ஆண்டு முழுவதும் இணுவைக் கோவில்களில்
எங்கள் செவியில் தேன்மழை தன்னைத் தூவிடுமே!

சந்தம் துள்ளும் வடக்கு வீதிச் சுவாமி முன்னாம்
தவிற்சமாவைத் தலைகள் ஆட்டிச் சுவைத்த வண்ணம்
அந்தி மாலை கடந்தும் எத்தனை அணிகள் நிற்கும்!
அப்படி எத்தனை நாட்கள் அங்கென் நெஞ்சும் சொக்கும்!

திப்பம், நுட்பம் திகழ்ந்திடச் செய்த திருமஞ்சம்
சேரடியர்வடம் பற்றி இழுக்கத் திருவீதி
பெட்புற வலஞ்செய் பிள்ளைமுருகன் கம்பீரம்,
பேரெழில் நல்கும் பெருமை இன்றென் நெஞ்சோரம்!

இடைவேளை இரண்டுக்கு மூன்று விடும் நம் "காலிங்க"னாம்
இணுவைக் கோர்திரை யரங்கு! நாங்கள் அழைப்பின்றியே
படையெனத் திரண்டு பாதுகாக்கும்அவ் வரங்கொளிரப்
பாரறி "சினிமாஸ் லிமிடெட்" படம், சுவரொட்டி தரும்!

நலம், தீங் குகளில் நான்முந்தி நீமுந்தி என்றணுகி,
நலிவுகள் நீக்கும் நல்லிரக்க நெஞ்சர் மலியிணுவை!
கலங்கும் மரணங்கள், கடும்பிணி, வறுமையில் கைகொடுப்பார்!
கலையுணர் வுடையர்! கண்ணியர்! கடவுள் கால்பிடிப்பார்!

சாவீ கெளிலே செத்தவர் ஆணுற வுகள்தேற்றித்
தந்தையர் உருக, தாயரோ வட்ட மாய்க்குந்தி
ஓவெனக் கதறிக் கைகள் அணைப்பில் ஒப்புச் சொல்லி
ஒப்பாரி பாடுதல் உறவுகள் நெஞ்சை வாட்டிக் கொல்லும்!


எத்தனை தடவைகள், எங்கும் விரிகாய் கறித்தோட்டம்,
எங்கும் விரியும் பசிய புகையிலை மரத்தோட்டம்,
சத்தம் சந்தடி அணுகாத் தொலை அண் ணாபண்ணை
சாலும் செழுமை தம்மால் மயக்கும் என்கண்ணை!

தொடர்ச்சி...... தொலைந்துவிட்ட என் இளமை நாட்கள்

உடலைத் தழுவி இதஞ்செய் ஊதல் மென்காற்றும்,
ஊறி வியர்வை உடம்பில் வழி கோ டைவெப்பும்,
சுடும்மெய் குளிரும் படிஅமிழ் தாகும் பனந்தேனும்
தூய இயற்கை வழங்கும் நமக்கு வலுதானாம்!

ஓ! என் தாயே! உன்றன் மாா்பில் நான்சாய்ந்தே
உண்ணத் தகுகாய் கறியூண் உண்ணத் தான் நேர்ந்தேன்!
ஆ! உன்மடியின் பிரிவால் அன்றோ தவிக்கின்றேன்!
ஆத்ம சாந்தி உன்னால் அடையத் துடிக்கின்றேன்!

உன்னிடமே நான் மீண்டும் ஓடி வந்திடலும்,
உன்பணி பலவும் உவந்தே ஓடிச் செய்திடலும்,
என்வாழ் வந்தியை இனிதுன் மடியில் போக்கிடலும்,
என்கடை மூச்சை உன் இடத்தில் விடலும் ஏக்கமம்மா!



'தாயக ஒலி'யின் இலண்டன் பிரதிநிதி திரு. இ.பாலேந்திரநாதன் (திருமலை பாலா) இலண்டனில் முக்கிய பிரமுகர்களுக்கு ( திரு.எஸ்.ஆறுமுகசாமி, திரு.பி.எச்.அப்துல் ஹமீட் ) 'தாயக ஒலி'யை வழங்கி வைக்கிறார்.

## 'தாயக ஒலி' சந்தா விபரம்

ஒரு வருடச் சந்தா - ரூபா 900 (அஞ்சல் செலவுடன்)
வெளிநாடு - $30(U.S), £ 20(U.K)
உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

தொடர்பு :

| | |
|---|---|
| திருமலை பாலா<br>(Thirumalai Bala)<br>London<br>07956486014 | வங்கிக் கணக்கு விபரம்<br>T.Sivasupramaniam<br>A/C No : 8100086490<br>Commercial Bank<br>Wellawatte, Sri Lanka |

சிறுகதை

# உடைந்த உறவுகளும் உலுப்பிய சோகங்களும்

இனுவை வசந்தன்

அக்கா பாரிசவாதம் வந்து படுக்கையில விழுந்து விட்டா. அத்தானும் எழுபத்திரண்டு வயதில பேய்ச் சேர்ந்துவிட்டார். மூன்று பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோரைப் பார்க்காத பிள்ளைகள் செத்தவீட்டுக்கா வரப்போகுதுகள்? தகப்பன்ரை செத்த வீட்டுக்கு அறிவிச்சும் அதுகள் ஒன்றும் வரவில்லை. மூத்த மகன் லண்டனிலிருந்து செத்த வீட்டுச் செலவுக்குக் கொஞ்சக் காசு அனுப்பியிருந்தான். கனடாவில் இருக்கும் மகள் ரெலிபோனுக்கிளாலை அழுதுபோட்டு வைச்சிட்டாள். இளைவன் "டென்மார்க்கிலிருந்து லீவு எடுக்க முடியாது. அதனால வரமுடியாமல் இருக்கிறன் மாமா பார்த்துச் செய்யுங்கோ" என்று சொல்லிவிட்டுப் போனை வைத்துவிட்டான்.

தகப்பனுக்கு கொள்ளி வைக்கப் பிள்ளையள் இல்லை. நான்தான் கொள்ளி வைக்க வேண்டிய நிலை. பிள்ளைத்தாச்சியாக இருந்த என்ரை மனிசிக்காறி "எனக்கு இந்த நிலையிருக்கேக்க நீங்கள் கொள்ளி வைக்கக்கூடாது" என்று சொல்லிப் போட்டாள்.

இருந்தும் ஊர் உலகத்திற்கு அஞ்சி நானே கொள்ளி வைத்தேன். அத்தானுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள் எல்லாம் செய்து முடித்தாயிற்று. அக்காவின் நிலையை எண்ணி மிகுந்த கவலைப்பட்டேன். அவவைப் பார்ப்பதற்கு மிகவும் சிரமப்பட்டு ஒரு மனிசியை ஒழுங்குபடுத்தினேன். மூன்று நேரச் சாப்பாடும் சம்பளமும் தருவதாகச் சொல்லியிருந்தேன். அக்காவின் பிள்ளைகள் மூவருக்கும் விபரமாகக் கடிதம் போட்டேன். "இஞ்ச மாமா நாங்களும் வீடு, செலவு எண்டு சரியாகக் கஷ்டப்படுகிறம். நீங்கள் பார்த்துச் செய்யுங்கோ நாங்கள் வசதிபோல அனுப்பி வைக்கிறம்" என்று மகன்மாரும் சொல்லிப் போட்டாங்கள். "என்ர அவர் தாய், தகப்பனை இங்க கூட்டி வந்து பார்க்கிறபடியால் என்னாலை ஒன்றும் செய்யமுடியாது மாமா. அண்ணனிடத்திலும் தம்பியிடத்திலும் கேட்டு வாங்குங்கோ" என்று மகள்காரியும் சொல்லிப் போட்டாள்.

அக்காவைப் பார்க்க என்ன செய்வது. எனக்கும் என்ர தோட்ட உழைப்பிலதான், மூன்று நாலு பிள்ளைகளுடன் என் குடும்பதைப் பார்க்க வேண்டும். வெளியில சொன்னாலும் வெட்கக் கேடு. என்ர மனிசிக்கு என்ர நிலை தெரிந்துவிட்டது.

"இஞ்சருங்கோ சும்மா யோசித்துக் கொண்டிருந்து என்ன செய்யப் போறியள். தாய், தகப்பன் இல்லாத நான் கல்யாணம் முடிச்சு இஞ்ச வந்த போது தாயாக இருந்து என்ர மூன்று பிள்ளைப் பெத்தும் அவவல்லே பார்த்தவ. அந்த நன்றிக் கடனை நாங்கள் மறக்கக்கூடாது. என்னட்ட இருக்கிற நகைகளைத் தாறன். வித்துப் போட்டு அந்தக் காசை வங்கிக் கணக்கில வையுங்கோ. மாதம் மாதம் கிடைக்கிற வட்டிக்காசில் ஒரு மனிசியை வைத்து உங்கட அக்காவைப் பார்ப்பம்."

"என்ன நகைகளை விக்கிறதா? கோயில், கல்யாண வீடு என்று போகும்போது நகையில்லாமல் போனால் ஊரில எப்படியெல்லாம் கதைப்பினம்"

"ஊர் உலகத்திற்குப் பயந்து என்ன பரதேசம் போறதே! நல்லாயிருந்தாலும் தூற்றும். கெட்டுப் போனாலும் தூற்றும். பரதேசிகள் உலகம். அதை எல்லாம் விட்டிட்டு நான் சொன்ன அலுவலைப் பார்த்து உங்கள் அக்காவைக் கவனமாகப் பராமரியுங்கோ" என்றாள்.

"பெற்ற பிள்ளைகளுக்கு இல்லாத அக்கறை உனக்கு இருக்கிறதையிட்டு உண்மையிலேயே நான் பெருமைப்படுகிறேன்" என்றேன்.

என் மனைவியின் ஆதரவால் அக்காவைக் கடைசிக் காலத்தில் கவனிக்கக்கூடியதாக இருந்தது. டாக்டர், மருந்துகள், பராமரிப்பு என்று செலவுகள் இருந்தாலும் சொந்தச் சகோதரியைப் பார்ப்பது மனதிற்கு ஒரு ஆறுதலாக இருந்தது.

கடைசிக் காலத்தில் பிள்ளைகள் ஒன்றும் தன்னை வந்து பார்க்கவில்லையே என்ற வேதனை அக்காவைப் பெரிதும் வாட்டியதை அவவின் கதைகளிலிருந்து தெரிந்து கொண்டேன். அக்காவின் வருத்தம் பற்றி பிள்ளைகள் எல்லோருக்கும் தெளிவாகச் சொல்லி அவ சாகிறத்துக்கிடையில நீங்கள் எல்லோரும் வந்து பார்த்தால் அவவுக்கு ஆறுதலாக இருக்கும் என்றும் தெரிவித்திருந்தேன்.

கொஞ்ச நாட்களில் கனடாவிலிருக்கும் மகளிடம் இருந்து எனது முகவரிக்கு ஒரு கடிதம் வந்திருந்தது.

"அன்புள்ள மாமா, அம்மாவைக் கவனமாகப் பார்ப்பதற்காக நன்றி. அவ இறப்பதற்கு முன்பு அவ பெயரில் உள்ள வீட்டையும் காணியையும் ஒரு பிரக்கராசியைப் பிடித்து என்ர பெயருக்கு மாற்றி எழுதப் பண்ணிவிடுங்கோ. நீங்கள் சொன்னால் அவ கேட்பா. அவ எழுதாமல் செத்துப் போனால் சொத்து பிள்ளையள் மூண்டு பேருக்கும் போகும். பெடியங்களுக்கு என்னத்துக்குச் சொத்து. பொம்பிளைப் பிள்ளை எனக்குத்தான் அம்மா முழுச் சொத்தும் எழுதித் தரவேண்டும் என்று நீங்கள் சொல்லிவிடுங்கோ. உடன் பதில் போடுங்கள் மாமா.

வாணி"

என்று கடிதத்தை வாசித்துவிட்டு அதை என் மனைவியிடம் கொடுத்தேன். மனைவி வாசித்துவிட்டுப் பெருமூச்சுவிட்டாள். அவளின் மனநிலை எனக்குப் புரிந்தது.

அடுத்தநாள் அக்காவின் மூத்தமகனின் தொலைபேசி அழைப்பு வந்தது.

"மாமா, எனக்கு இங்கு வேலை இல்லை. நாடு கடத்துவதற்கான முன்னெடுப்புக்கள் நடப்பதாக அறிகின்றேன். அதற்கு அப்பீல் செய்திருக்கி றேன். சிலவேளை நானும் எனது குடும்பமும் நாட்டுக்குத் திரும்ப வேண்டி ஏற்பட்டால் இருப்பதற்கு வீடு வேண்டும். அம்மாவை முதியோர் இல்லத்தில் கொண்டு போய்விட்டுவிட்டு, வீட்டைத் திருத்தி பெயின்ற் அடிப்பியுங்கோ காசு அனுப்புகிறேன்."

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அக்காவின் பிள்ளைகளின் நிலையைக் கேட்டு,

"இதுகளும் ஒரு பிறவிகள். கடைக்குட்டியின் நிலை என்னவாம்?" என்றாள் என் மனைவி.

"பொறுத்திருந்து பார்ப்பம் அவன் என்ன சொல்லுவான் என்று" என்றேன்.

ஒருநாள் காலை அக்காவின் வீட்டுப் பூக்கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு நின்றேன். நடுத்தர வயது மதிக்கத் தக்க ஒரு தம்பதியினர் அங்கு வந்து "இதுதானோ தவபாலனின் வீடு" என்று கேட்டார்கள்.

நான் "எந்தத் தவபாலன்?" என்று கேட்டேன்.

"டென்மார்க்கில் இருக்கின்ற சின்னத்துரை தவபாலன்" என்று சொன்னார்கள்.

"ஓம் இதுதான் அவரின் தாய்வீடு" என்று சொன்னேன்.

"வீட்டோடை எத்தனை பரப்புக் காணி இருக்கு?" என்று கேட்டார்கள்.

"ஏன் விசாரிக்கிறியள்?" என்று கேட்டேன்.

"தவபாலன் டென்மார்க்கில் எனது தம்பியிடம் காசு வேண்டியிருக்கிறார். கொடுத்த காசுக்கு வீடும் காணியும் பெறுமோ என்று என் தம்பி பார்த்து அறிவிக்கும்படி சொல்லியுள்ளார்" என்று வந்த பொம்பிளை சொன்னார்.

மேற்கொண்டு நான் ஒன்று பேசவில்லை. "வந்தனிங்கள் வீட்டையும் காணியையும் பார்த்து விட்டுப் போங்கோ"

"இவ்விடத்தில் பரப்பு என்ன போகுது?" என்று

வந்தவர் வினாவினார்.

நாங்கள் விற்று வாங்கினால்தானே தெரியும். பெறுமதி தெரியாது என்றேன்.

வந்தவர்கள் வீட்டையும் காணியையும் பார்த்துவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

இந்தவிடயம் அக்காவுக்குச் சொல்லவில்லை. மனைவிக்குச் சொன்னே. அப்பொழுதான் மனைவி ஒரு விடயத்தைச் சொன்னாள்.

"போன மாதம் நோர்வேயிலிருந்து எங்கட பெரியப்பாவின் மகன் தவராசா இஞ்ச வந்திருந் தான். தான் டென்மார்க்குப் போனபோது தவபால னைக் கண்டவனாம். அவன் இரண்டு பிள்ளை கலோட ஒரு வெள்ளைக் காறியைக் கல்யாணம் செய்து மெத்த ஆடம்பரமாக வாழுகின்றானாம்."

"அவர் கடன் வாங்கி குடும்பம் நடத்துகிறா னாக்கும்" என்றேன்.

"உதுகளைப் பெற்ற நேரம் மூன்று தென்னம் பிள்ளையை வைத்திருந்தாலும் நல்லாய்க் காய்த்து வருமானத்தைக் கொடுத்திருக்கும் என்று முந்திப் பெரியவர்கள் சொல்லுகிறவர்கள். அது உங்கட அக்காவின் பிள்ளைகளுக்கும் பொருந்துமாப் போல இருக்கு" என்று மனைவி தன் மனவேதனையைக் கொட்டினாள்.

காலங்கள் ஓடிக் கொ ண்டிருந்தன. கனடாவில் இருக்கும் மருமகள் வாணி வீட்டை தன் பெய ருக்கு மாற்றியாச்சோ என்று அடிக்கடி கேட்டுத் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருந்தாள். தொந்தரவு தாங்க முடியாமல், "எடி பிள்ளை உன்னை அம்மா வரட்டாமாம்; எழுதித் தாறா வாம் என்று சொல்லுகிறா" என்று சொல்லி அவளை வரவழைக்க முயற்சித்தேன்.

"ஏன் வராமல் எழுதித்தர மாட்டாவாமோ? விசர் மனுசிக்குத் தெரியாதோ இங்கிருந்து உங்க வந்து மீண்டும் திரும்பி வாறத்திற்கு எவ்வளவு செலவாகும் எண்டு" என்று மருமகள் சொன் னாள்.

தொடர்ந்தும் அவளுடன் பேசுவதில் எதுவித பயனும் இல்ல என்று போசாமல் இருந்துவிட் டேன்.

பிள்ளைகளைக் காணமுடியவில்லையே என்ற கவலையில் அக்கா இருந்ததை அறிந்து கொண்டேன்.

ஒருநாள் அக்காவின் உயிர் பிரிந்துவிட்டது.

பிள்ளைகள் மூவருக்கும் அறிவித்தேன். மூத் தவன் சொன்னான், "அப்பாவின் செத்தவீட்டுச் செலவுக்கு நான்தானே காசு அனுப்பினனான். அம்மாவின் செத்தவீட்டுச் செலவுக்குத் தம்பியி டம் வாங்குங்கோ" என்றான்.

இளையவன் சொன்னான். "மாமா வழக்கு ஒன்றில் சாட்சியாகப் போக வேண்டியிருப்பதால் அம்மாவின் செத்தவீட்டுக்கு வரமுடியாமல் இருக்கு. நீங்கள் பார்த்து எல்லாத்தையும் ஒப்பேற் றுங்கோ. அண்ணன் அனுப்புவானாம்."

தாயின் செத்தவீட்டுக்கும் இவங்கள் வரமாட் டாங்கள். பரவாயில்லை, பொய் சொல்லாமல் இருக்கலாமல்லவா?

மகளின் நிலையை அறிய அவளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

"அம்மா கிடந்து அழுந்தாமல் போய்ச் சேர்ந் ததே பெரிய புண்ணியம். செத்தவீட்டுப் படங் களை வீடியோ பண்ணி அனுப்பிவிடுங்கோ. இஞ்ச எல்லோரும் பாப்பம்." என்றாளே அச்சற் புத்திரி.

அக்காவுக்கும் நான்தான் கொள்ளி வைத் தேன்.

அக்கா இறந்து பதினைந்தாம் நாள் மூத்த வன் மனைவி, பிள்ளைகளுடன் இலங்கைக்கு வந்துவிட்டான்.

"இனி அங்கே போகேலாது. இங்கதான் இருக்கப் போறம்" என்று மட்டும் சொன்னான்.

வீட்டில் உள்ள நாய் அவர்களைப் பார்த்து குலைத்துக் கொண்டே நின்றது.

நான் எனது வீட்டை நோக்கி நடக்கிறேன். ●

# கலாசார பண்பாட்டு விழுமியங்கள் மீளக் கட்டியமைக்கப்பட வேண்டும்

எமது சமூகத்தில் முன்னர் காணப்பட்டிருந்த கலாசார பண்பாட்டு விழுமியங்கள் தற்பொழுது நவீன தொடர்புச் சாதனங்களின் அதீத பயன்பாட்டால் அருகிச் செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றை மீளக் கட்டியமைக்க இளம் தலைமுறையினர் முன்னின்று செயற்பட வேண்டும்.

பாடசாலைக் கற்றல் முறைமையில், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் சேவையுமே ஒரு மாண வனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல உதவுகின்றன. அந்த வகையில் மாணவ சிற்பங்களை உருவாக்கும் சிற்பிகளாக ஆசிரியர்கள் திகழ்கின்றனர். சிறுபராயத்திலிருந்து மாணவர்கள் உயர்ந்த இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும். அவர்களுக்கு உறுதுணையாகப் பெற்றோர்களும் ஆசிரி யர்களும் முன்னின்று வழிகாட்டவேண்டும்.

தற்பொழுதுள்ள சூழ்நிலையில் நவீன தொடர்புச் சாதனங்களின் வருகை மாணவர் மட்டத்தில் மாறுபாடான தன்மையைத் தோற்றுவிக்கிறது. குறிப்பாக எமது பண்பாடுசார் விழுமியங்களில் நெறி தவறி தவறான பாதையில் செல்ல வைக்கின்றது. இன்று பெரியோரை மதிக்கும் பழக்க வழக்கம் அருகிச் செல்வது எமது சமூகம் அழிவை நோக்கிச் செல்வதைக் காட்டுவதாக அமையும். எனவே இளந்தலைமுறையினர் கல்வி வளர்ச்சியில் மேலோங்கும் அதேவேளை ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றி சமூகத்தில் மேன்மை மிக்கவர்களாக உருவாக வேண்டும். அதற்குப் பக்கபலமாகப் பெற் றோர்களும் ஆசிரியர்களும் எப்பொழுதும் நிற்க வேண்டும். •

- கலாநிதி செ.சந்திரசேகரம் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# வகுப்பறைகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை

இலங்கையின் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையின் பிரகாரம் வகுப்பறைகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை 40 இல் இருந்து 35 ஆகக் குறைக்கப்படும். நாடளாவிய ரீதியில் இயங்கும் அரச பாடசாலைகளில் ஒரு வகுப்பறைக்கு உள்வாங்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணக்கையை 40 இல் இருந்து 35 ஆகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வருடத்திற்கு ஒரு மாணவன் என்ற ரீதியில் 5 ஆண்டுகளின் 5 மாணவர்களை வகுப்பறைகளிலிருந்து குறைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதலாம் தரத்திற்குப் பிள்ளைகளை இணைத்துக் கொள்ளும்போது ஒரு வகுப்புக்கு 35 பிள்ளை கள் என்ற ரீதியிலேயே இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த மையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மாணவர்கள் முகங்கொடுக்கும் நடைமுறைப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சர்வதேச முறைக்கு ஏற்ப எதிர்காலத்தில் மாணவர்களுக்கு வகுப்புகளில் இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்ப தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. •

-திரு. டபிள்யூ.பந்துசேன, செயலாளர், கல்வியமைச்சு.

# மலையக ஆய்வு நிலையம்

மலையக சமூகத்தின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்கும் மேல் நோக்கிய நகர்வுக்கும் அச்சமூகம் சார்ந்த ஆய்வு நிலையம் ஒன்றின் அவசியம் உணரப்பட்டுள்ளது. இன்று நாம் ஒரு அறிவுச் சமூகத்தில் வாழ்ந்து வருகின்றோம். அறிவினைச் சேகரித்தல். அதன் மூலம் புதிய அறிவினை உற்பத்தி செய்தல் மற்றும் அதனை சமூக, பொருளாதார அபிவிருத்திக்காகப் பரப்புதல் ஆகியன 21 ஆம் நூற்றாண்டின் முக்கிய செயற்பாடுகளில் பிரதானமான இடத்தைப் பெற்று விளங்குகின்றன.

சமூக, பொருளாதார பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்வதன் மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அடையாளம் காணமுடியும். அந்த வகையில் இலங்கையில் வாழும் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கும் அவை தொடர்பான தீர்வுகளை அடையாளம் காண்பதற்கும் ஓர் ஆய்வு நிலையத்தின் தேவை அதிமுக்கியமானது. இன்று மலையகத்தில் ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்களும், தனிநபர்களுமே மலையகம் சார்ந்த ஆய்வினை முன்கொண்டு வருகின்றார்கள். ஆயினும் மலையத்திற்கு ஓர் ஆய்வு நிலையம் இல்லாமையானது மலையக மக்களுக்கு பாதக விளைவுகள் பலவற்றையும் ஏற்படுத்துவதாகவே உள்ளது என்பது கவனத்திற்குரியது.

மலைய மக்களின் வரலாறு, அவர்கள் தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முன் வைக்கப்பட்டுள்ள ஆய்வுகள், கட்டுரைகள் என்பவற்றை நாம் ஆவணப்படுத்த வேண்டும். ஆய்வு நிலையம் என்பது சமூகத்தின் வரலாற்றைப் பேசுவதற்கு மிகவும் அவசியமாகும். இதன் மூலம் மலையகத்தில் ஆய்வு கலாசாரலத்தை ஏற்படுத்த முடியும். ●

-திரு.இரா.ரமேஸ், விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்

---

# பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் 7076 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன என மாவட்டச் செயலகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. நடந்து முடிந்த யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தம், விபத்துக்கள் உள்ளிட்ட பல காரணங்களாலும், தொழில் வாய்ப்புத் தேடி வெளிநாடுகளுக்குச் செல்லுதல், குடும்பப் பிணக்குகள் காரணமாகப் பிரிந்து செல்லுதல் போன்ற பல்வேறு காரணிகளாலும் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 7076 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தற்பொழுது வாழ்ந்து வருகின்றன. இவ்வாறான பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் பெரும்பாலானவர்கள் தமது அன்றாட வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்கு பல்வேறு சவால்களையும், சிரமங்களையும் எதிர் கொண்டு வருகின்றார்கள்.

நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருபது வயதிற்குட்பட்ட 34 குடும்பங்களும், முப்பது வயதிற்குட்பட்ட 526 குடும்பங்களும், நாற்பது வயதிற்கு உட்பட்ட 1124 குடும்பங்களும், ஐம்பது வயதிற்கு உட்பட்ட 1335 குடும்பங்களும், அறுபது வயதிற்கு உட்பட்ட 1507 குடும்பங்களும் அறுபது வயதிற்கு மேல் 2550 குடும்பங்களும் என பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வாழ்வாதாரப் போராட்டத்துடன் வாழ்ந்து வருகின்றன.

-கண்டாவளையான்.

●

# பிள்ளைகளின் பாதுகாப்பு

பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வது சகல பெற்றோர்களினதும் பொறுப் பாகும். தவறு இடம்பெற்றதன் பிறகு அதனைச் சரிசெய்து கொள்ளமுடியாது. எனவே பிள்ளைகளின் பாதுகாப்பில் அக்கறையுடன் செயற்படவேண்டும். அந்தப் பொறுப்பை வேறு நபர்களுக்கு வழங்கக் கூடாது. அண்மைக்கால நிகழ்வுகளைப் பார்க்கும்போது பிள்ளைகளுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளில் அதிகமானவை பெற்றோர்களின் கவனக் குறைவால் நிகழ்ந்தவை என்பது புலனாகும். சேயா உட்பட பிள்ளைகள் இந்த குரூர சம்பவங்களுக்குள் சிக்கிக்கொண்டார்கள். இத்தகைய சம்பவங்கள் தொடர் பில் பொதுமக்கள் உணர்வுபூர்வமாகவும் ஆவேசப்பட்டும் நடந்து கொண்டார்கள்.

எதிர்காலத்தில் நாட்டைப் பொறுப்பெடுக்கக்கூடிய சின்னஞ் சிறார்களையே நாடு இழந்துள்ளது. இத்தகைய குற்றவாளிகளுக்கு கட்டாயமாகத் தண்டனை வழங்கவேண்டும். அதேபோன்று இவ் வாறான சம்பவங்கள் நடக்கும்போது ஒரு சாராரை மாத்திரம் நோக்கி விரலை நீட்டிவிட்டு அந்தச் சம்பவத்தை மறந்துவிட முடியாது. விசேடமாக சிறு குழந்தைகள் தொடர்பில் தொடர்ந்தும் அவ தானமாக இருக்க வேண்டும். இந்தப் பொறுப்பை வேறு எவரிடமும் சுமத்திவிடமுடியாது. பெற்றோர் களே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர்கள் கூடுத லான அவதானம் செலுத்தும் போது அவர்களுக்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்த முடியாது. இணை யத் தளத்திற்கு முன் அமர்ந்திருக்கும் பிள்ளைகள் தொடர்பில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று தேடிப் பாருங்கள். அப்பொழுதுதான் அவர்கள் தவறான வழிக்கு இட்டுச் செல்லப்படமாட்டார்கள். ●

-கௌரவ தலதா அத்துகோரள, வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர்.

# 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன்



மகாகவி பாரதியார், பாடல்களைக் கற்பனையாக எழுதவில்லை. அவரது இதயத்திலிருந்து உதித்த சத்திய வார்த்தைகளாகவே அவை விளங்குகின்றன. மனிதன் மனிதனாக வாழ தினமும் பாடல்களைப் பாடிய பாரதி இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராக மிளிர்கிறார்.

சாதி, மத பேதங்களைக் களைந்து, பிஞ்சு நெஞ்சங்களில் நல்லெண்ணங் களை விதைத்தவர் பாரதி. ஒரு தாய் வயிற்றில் பிறந்த நாம் சண்டையிடக்கூடாது எனும் விழிப்புணர்வினை ஏற்படுத்தி சமூகத்தினை வழிப்படுத்தியவர். யாம் அறிந்த மொழிகளில் சிறந்தது தமிழ்மொழி எனவும், சுதந்திர தாகம் பற்றிக் குறிப்பிடும் போது 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' எனவும் கல்வியை வளர்பதற்கு கல்விச்சாலைகளினை வைப்போம் எனவும் தனது கருதினை வெளிப்படுத்தினார்.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையினைக் கொழுத்துவோம்' எனக் குறிப்பிட்ட இவர் தனிப் பாட்டு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு எனப் பல பாடல்களைப் படைத்துள்ளார். இப்பாடல்களில் பரிவு, உயர்வு, பெண் விடுதலை, மூட நம்பிக்கைகளினைக் களைதல் போன்ற பல விடயங்களினை வெளிப் படுத்தியிருந்தார். இன்று அவரது பாடல்கள் பல சினிமாப் பாடல்களாக வந்து பலரும் அறியக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இக்கால இளைஞர்கள் உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் பாரதியார் பாடல் கள் உள்ளன. ●


-திரு. ஆ.நடராஜன், யாழ்.இந்தியத் துணைத் தூதர்.

கட்டுரை

# சிலப்பதிகாரமும் இளங்கோவடிகளும்

உலகோரால் உவந்து போற்றப்படும் காப்பியங்கள் ஐந்து. அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பனவாம். இளங்கோவடிகளால் பாடப்பட்ட சிலப்பதிகாரத்தில் சொல்லப்படாத தருமமோ, சொல்லப்படாத தெய்வங்களோ இல்லை. அஃதன்றி அடிகள் எல்லாச் சமயங்களையும் எடுத்தோதுகிறார். அவர் சைவம், வைணவம், சாக்தம், சௌரம், கௌமாரம், சமணம் யாவற்றையும் எடுத்து ஆளுகிறார். அடிகளார் எவ்வித பேதமுமின்றி யாவற்றையும் நிரலே எடுத்தோதுவது போற்றத்தக்கதாகும். பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானையும், நீலமேனி நெடியோனாகிய திருமலையும், அறுமுகக் கடவுளையும், கொற்றவையையும், இந்திரனையும் நயந்து பாடியுள்ளார். அடிகள் சேர மன்னர் வம்சத்தவர் ஆயினும், பாண்டிய, சோழ அரசர் களையும் நடுவு நிலை தவறாது எடுத்துப் பாராட்டிப் பாடியுள்ளார். இஃது இவரது கபடமற்ற மனத் தூய்மையைப் புலப்படுத்துகிறது. "வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு" என்பது இதனால் பெறப்படும்.

அரசியல் வழுவிய வேந்தரை அறக்கடவுள் கூற்றனாய் நின்று கொல்லுமென்பதும் புகழமைந்த பத்தினியை வானோரும், ஏத்திப் போற்றுவரென்பது அங்கையில் நெல்லிக்கனியாம். இவ்வாறு சிலப்பதிகாரம் யாவரும் போற்றும் சிறப்பினதாகும். சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் கருத்துரை எழுதியுள்ளார். ஆயினும், மகாமகோ உபாத்தியாயர் டாக்டர் உ.வே.சாமிநாதஐயர் அவர்களால் அரிதின் முயன்று பதிப்பிக்கப்பட்டதென்பதை யாவருமறிவர். எத்தனையோ அரும்பெரும் நூல்களை அச்சிட்ட பெருமை ஐயர் அவர்களையே சாரும். சிலப்பதிகாரம், புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று காண்டங்களைக் கொண்டு விளங்குவதாகும்.



ஆயினும் பல காதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. புகார்க் காண்டத்து மங்கல வாழ்த்துப் பாடலில் "*திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்*" என்றும், "*கொங்கலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்றிவ் வங்கண் உலகளித்தவான்*" என்றும் மதுரைக் காண்டத்துக் காடுகாண் காதையை ஆரம்பித்தும், வஞ்சிக் காண்டத்துக் குன்றக்குரவையைப் புனைந்தும் செல்கின்றார். கொலைக்களக் காதை கூறுமிடத்து,

*"வினைவிளை காலமாதலின் யாவதும்*<br>
*சினையலர் வேம்பன் தேரானாகி*<br>
*ஊர் காப்பாளரைக் கூவி ஈங்கென்*<br>
*தாழி பூங்கோதை தன் காற்சிலம்பு*<br>
*கன்றிய கள்வன் கையத்தாகில்*<br>
*கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கென"*<br>
என்றான் மன்னன்.

அரசன் கூறியதைக் கேட்ட கொலையாளி, கோவலனைக் கொன்று சிலம்பினைக் கொணர்ந்தான். அது கேட்டு அழுது கலங்கிய கண்ணகி

*"வாயிலோயே வாயிலோயே*<br>
*அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து*<br>
*இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே"*<br>
எனக் கதறினாள்.

அதன் பின் பாண்டிய மன்னனிடம் சென்று

*"தேராமன்னா செப்புவதுடையேன்*<br>
*எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்*<br>
*புள்ளுறு புன் கண் தீர்த்தோன் அன்றியும்*<br>
*வாயிற்கடைமணி நடு நா நடுங்க*<br>
*ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான்*<br>
*தன்*

*அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்*
*பெரும்பெயர் புகார் என்பதியே"*

என்றாள் கண்ணகி. இவ்வாறு தன் வரலாற்றைக் கூறியதன் பின் அடிகளார் உலகோருக்கு அறிவுரை கூறுகின்றார்.

*"தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்"* என மக்களை விழித்துப் பின்வருமாறு கூறுகின்றார்.

பிறர்க்குக் கவலையும், துன்பத்தையும் செய்தலை நீக்குங்கள், கடவுள் உண்டென உணர்மின்கள். அவ்வாறு கடவுளை உணர்ந்தோரை விரும்புங்கள். பொய் கூறுவதற்கு அஞ்சுங்கள். புறஞ்சொற் கூறாதீர்கள். ஊண் உண்ணுவதைத் தவிர்மின்கள். உயிர்க்கொலை செய்யாதீர்கள். தானத்தை மேற் கொண்டு செய்மின்கள். பிறர் செய்த நன்றியை மறவாதீர்கள். தீயோர் நட்பை விடுமின்கள். பொய்ச் சான்று சொல்லாதீர்கள். உண்மை மொழியை விட்டு நீங்காதீர்கள். அறங் கூறும் அவையத்து அடையுங்கள். மறநெறிச் செல்லும் தீயோர் வழிச் செல்லாதீர்கள். பிறர் மனை விரும்புவதனை அஞ்சுங்கள். துன்புமுற்ற உயிர்களைத் தாங்குங்கள். இல்லறத்தையே பேணுங்கள். பாவச் செயலை நீக்குமின்கள். கள்ளும், களவும், காமமும், பொய்யுமாகிய இவற்றைத் தவிர்மின்கள். வாழ்நாள் நிலையற்றது. எனவே உலகிற்கு உற்ற துணையாகிய அறத்தைச் செய்மின்கள்.

இவ்வாறு அடிகளார் சிலப்பதிகாரத்துள் அறமுரைத்துச் செல்வது போற்றத்தக்கதாகும். ●

ஆனந்தர் சுப்பிரமணியம், கனடா.

---

**அறிந்தவையும் தெரிந்தவையும்**

# அப்துல் கலாமுக்குச் சிலை!



**மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் நினைவாக 20 அடி உயரத்தில் பீடத்துடன் கூடிய இரும்புச் சிலையை நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.**

இராமேஸ்வரத்தில் அப்துல் கலாம் அவர்களின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடமான பேக்கரும்பில் நாள் தோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள், பொது மக்கள், மாணவ, மாணவிகள் என ஆயிரக்கணக்கானோர் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இதனால் அப்துல் கலாமுக்கு பாம்பன் பாலம் அருகில் சிலை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அப்துல் காலம் ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி மேகாலயாவின் ஷில்லாங்கில் நடந்த ஒரு கருத்தரங்கில் மாணவர்களிடையே பேசிக் கொண்டிருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார். இந்நிலையில் குடும்பத்தினரின் விருப்பப்படி, அப்துல் கலாமின் உடல் அவரது சொந்த ஊரான இராமேஸ்வரத்தில் உள்ள பேக்கரும்பில் ஓகஸ்ட் 30 ஆம் திகதி நல்லடக்கம் செய்யப்பட்டது.

தென்னகத்து காசி என்று அமைக்கப்படும் இராமேஸ்வரத்துக்கு பொதுவாக நாள்தோறும் வடமாநிலங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்றர். அவர்கள் கோவிலுக்கு சாமி கும்பிட்டு விட்டு, அப்துல் கலாம் அடக்கம் செய்யப்பட்ட பேக்கரும்புக்கு வந்து அஞ்சலி செலுத்துவதைப் பார்க்க முடிவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் அவர்கள் கலாமின் வீட்டையும் ஆர்வமாகப் பார்த்துச் செல்கின்றனர்.

இராமநாதபுரம் கிழக்கு மாவட்ட அரிமா சங்கத்தினர் சிலை நிறுவும் பணியினை முன்னெடுத்து வருவதாக அறிய முடிந்துள்ளது. ●

கவிதை

# விட்ட வழி

என்னண்ணை பெரியண்ணை
இந்தப் பக்கம் புதிசாய்
உம்மோடு பேசிச் சிரித்து
கனகாலம் ஆயிடிச்சு.

உண்மையைச் சொல்லும்
உமது மகளுக்கு என்ன
வியாதி வந்து உறவை
வெறுத்துவிட்டு போனவளாம்.

வடிவாய் தானே வளர்த்தீர்
என்ன குறையும் விட்டீர்
பருவம் வந்தபோது
நினைக்காது விட்டதும் குறையோ?

காலமறிந்து விதைக்க
வேணுமென்று சும்மாவோ
சொன்னாங்க. அவவும்
உமக்கு காட்டியோ போட்டா?

எனக்கும் இருக்குதுகள்
நான்கிற்கும் அலையிறன்தான்
விட்ட வழி எதுவோ?
அண்ணை இதுவும் மெய்தானே!

-திருமலை சுந்தா

# பரஸ்பரம்

நீ 'அம்மே' என்கிறாய்
நான் 'அம்மா' என்கிறேன்.
நீ'அக்கே' என்கிறாய்
நான் 'அக்கா' என்கிறேன்.
நீ 'அய்யே' என்கிறாய்
நான் 'அண்ணா' என்கிறேன்.
நீ 'சகோதரயா' என்கிறாய்
நான் 'சகோதரன்' என்கிறேன்.
நீ 'தெவியனி' என்கிறாய்.
நான் 'தெய்வமே' என்கிறேன்
நீ 'ஒவ்' என்கிறாய்,
நான் 'ஓம் என்கிறேன்...

மேலும்
நீயும் நானும்
ஆச்சரியத்தில் ஆபத்தில்
'ஐயோ', அம்மோ', 'அப்போ'...
என்று
ஒன்றைத்தான் உச்சரிக்கிறோம்!

# எவனும் அறியான்!

அவன்
'புத்தர் பூமி' என்கிறான்.
இவன்
'சிவபூமி' என்கிறான்.
அடுத்தவன்
'ஆதாமின் அடி' என்கிறான்.
ஆனால்
இப்பூமி
அவனுக்குரியது என்பதால்
எவனுக்கும் உரியதல்ல என்பதை
அவனும் அறியான்!
இவனும் அறியான்!
எவனும் அறியான்!

# அவர்கள் வெடியால்!

தெற்கில் வெடித்தபோது
நான் இரசித்தேன்!

வடக்கில் வெடித்தபோது
நீ இரசித்தாய்!

மொத்தத்தில்
நம்தேசம் அழிந்ததை
யார் இரசித்தார்?

உணர்வோமா,
இனிமேலாவது உண்மையை!

-செ.அன்புராசா அடிகள், மாங்குளம்.

சிறுவர் கதை

# என்ன உருவம்?

காட்டில் வாழ்ந்த நரி ஒன்று நாட்டுக்கு வந்தது. அங்கும் இங்கும் சுற்றித் திரிந்தது. காட்டில் வெயில் இல்லை. நரி நாட்டில் வெயிலில் சுற்றித் திரிந்தது. அப்பொழுது ஒரு கறுப்பு உருவம் வந்தது. நரி பயத்தில் வேகமாக ஓட ஆரம்பித்தது.

கறுத்த உருவமும் தொடர்ந்து நரியைத் துரத்தியது. நரி பயத்தில் வேகமாக ஓடி ஒரு மரத்தில் அடியில் போய் ஏறியது. திரும்பிப் பார்த்தது. அங்கே எதுவும் இல்லை. மெதுவாக கீழே இறங்கி வந்தது. பயத்தினால் தண்ணீர் தாகமாக இருந்தது. அருகில் இருந்த குளத்தில் நீர் அருந்த மெதுவாக குளத்தில் இறங்கியது. மீண்டும் கறுப்பு உருவம் ஒன்று குளத்தில் இருப்பதைக் கண்டது.

மீண்டும் பயத்தினால் ஓட ஆரம்பித்தது. வேகமாக ஓடி நரி காட்டுக்கு வந்தது. பயத்தினால் நரியின் கால்கள் நடுங்கின. நடுங்கியபடி வந்த நரியை கரடி ஒன்று கண்டது.

"என்ன விடயம், ஏன் அப்படிப் பயப்பிடுகின்றாய்"? என்று கேட்டது.

அதற்கு நரி நடந்தவற்றைக் கூறியது. கரடி விழுந்து விழுந்து சிரித்தது. நரிக்குக் கோபம் வந்தது. "நான் பயத்தினால் நடுங்குகின்றேன். நீர் ஏன் சிரிக்கின்றீர்?" என்றது.

கரடி "கோபம் கொள்ள வேண்டாம். என்னுடன் வா" என்று நரியை அழைத்துச் சென்றது. நரியை முன்னே செல்லுமாறு கூறியது. சென்று மரங்களுக்கிடையே வெயில் படும் இடத்திற்குக் கூட்டிச் சென்றது. "இங்கே பார். இதைப் பார்த்துத் தான் நீ பயந்தாயா?" என்று கேட்டது கரடி. நரி திரும்பிப் பார்த்தது.

"இது உன்னுடைய நிழல். இதைப் பார்த்துத் தான் நீ பயந்து ஓடினாய்." என்று கரடி கூறியது.

நரிக்கு வெட்கமாக இருந்தது. என்னுடைய நிழலைப் பார்த்து எப்படிப் பயந்து நடுங்கிவிட்டேன் என்று எண்ணிச் சிரித்தது. ●



ஹேமா கனகலிங்கம்



அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கே.ஆர்.டேவிட் அவர்களின் 'நீரில் கிழித்த கோடுகள்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சண்முகலிங்கன் தம்பதியினர், டேவிட் தம்பதியினரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

With Compliments From

# N.Ranjithakumaran

MA (Human Rights)

*Solicitor*

180 Mitcham Road
Tooting
London SW17 9NJ
UNITED KINGDOM

Tel - 0208 767 9717
Mobile - 0795 688 6749
Fax - 0208 767 9684


email : ranjit@ranjitandco.com





# Ramesh & Co Accountants

T.P : 020 86823336



Home Services Contact

## Welcome to Ramesh & Co Accountants

We are South west London, based firm and we offer accounts, tax and business advises. We pride ourselves in providing the highest levels of professional service with expertise in the field. Our goal is to provide personalised professional services at the lowest fees to each of our clients and to build a long term professional relationship with them. Our accountants are highly experienced in Accounting, Taxation and Business, Financial and Mortgage consultancy services. Our Accountants & Tax Consultants offer friendly professional services for a competitive fixed fee. If you are not familiar with our company and your first contact with us, we would be pleased to hear from you. Please let us know what your needs and questions are, we will be more than happy to help! Call Ramesh & Co Accountants today on 0208 682 3336.


**Phone: 02086823336 | 02083552532**
**Mobile : 07823886784**
**Fax: 020 86728022**
**Website: www.rameshandco.co.uk**
**Email: info@rameshandco.co.uk**

ஏழை மக்கள் கண்ணீர் துடைக்க

உங்கள் முன் வரும் இணையத் தளம்

விரைவில் எதிர்பாருங்கள்!


U2 MOBILE
Connected For Longer
U2i Mobile
Call Us on - 020 3769 6867
www.u2imobile.uk
LOWER
National & International Calls
UNLIMITED ROAMING
From 148 Countries
1 SIM 2 NUMBERS
Mobile & Land line number
Best price per minute
JOIN NOW
Standard
Micro
Nano


வாடாமல்லிகை
அண்ணா தொழிலகம்
இணுவில்

# வாடாமல்லிகை என்னும் வண்ணமலர் காவியம்

அண்ணா பொன் ஏடு தந்த அருந்தமிழ் புதல்வனின் மாண்புறு மாட்சியை பறைசாற்றும் களஞ்சியம். பிறந்த மண்ணில் வெளியீட்டை நடத்தி அதைத் தொடர்ந்து கொழும்பில் அறிமுகவிழாவைக் காண அவாக் கொண்ட செம்மல். விழாவைக் காணவிடாமல் காலனவன் கவர்ந்துவிட்டான். ஏங்கித் துடிக்கின்றோம் ஐயா!

சாதனைகள் பல கண்ட சான்றோன். அனுபவ அறிவின் வெளிப்பாடாய். போதனைகள் பல தந்த செம்மையாளன். தொழில்பேட்டை அமைத்து உச்சம் கண்ட உத்தமன். தொழிலாளர் நலம் காத்த நல்லதோர் ஆசான். குழந்தைகள் சத்துணவுக்காய் குறி வைத்து நிபுணர்கள் அறிவுரையில் 'ஜீவாகாரம்' தந்த பாரி. இடப்பெயர்வின்போது இறுங்காது நின்று எம்மவரைக் காத்து வாழ வழிகாட்டிய கலங்கரை விளக்கம். உயிராபத்து நிறைந்த வேளையிலும் தன்னுயிரைத் துச்சமென எண்ணி மக்கள் நலப்பணியில் தொண்டனாய் உழைத்த பிறநலப் பணியாளன்.

இத்தனைக்கும் மேலான பெருமைக்குரிய அண்ணா தொழிலக அதிபர் அமரர் பொ.நடராசா அவர்களின் 'வாடாமல்லிகை' பூங்காவுக்குள் நுழைகின்றேன்.

வாழ்க்கையில் நாம் சந்திக்க நேரிடும் சில மனிதர்களிடம் நாம் காணும் அர்ப்பணிப்பை வார்த்தைகளால் வர்ணிக்க முடிவதில்லை. தம் கடமைகளைத் தெய்வீகமாய் எண்ணும் இம் மனிதர்கள் உண்மையாகவே வாழ்க்கைக்கு உன்னத ஒளியேற்றுபவர்கள் என்பதை மறுக்கமுடியாது.

இந்நூலின் தொகுப்பாசிரியராக இருந்து தம்பணியைச் செவ்வனே ஆற்றித் தந்துள்ளார் சைவப் புலவர் சு.செல்லத்துரை ஐயா அவர்கள்.

'வாடாமல்லிகை' ஐந்து முகைகளாக வகுக்கப்பட்டு, தெளிவான உண்மைகளைப் பேசுகின்றன. முகை ஒன்று வாழ்த்தும் வரவேற்பும் கூறி நிற்க, முகை இரண்டு எண்ணில்லா இன்னல்களைத் தாங்கி வந்துள்ளது. முகை மூன்று இருப்பை குலைத்த இடப் பெயர்வுகளின் ஒரு வரலாற்றுப் பதிவை முன்னிறுத்தி நிற்கின்றது. முகை நான்கில் மீண்டு வந்த நினைவுகளுடன் எழுச்சி பெற்ற இன்றைய தொழிலகம் பற்றிய வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது. முகை ஐந்து அறிஞர்கள் பார்வையில் எங்கள் அண்ணா, மதிக்கப்படுகின்ற ஒப்பற்ற நிலையைத் தரிசிக்க வைத்துள்ளது. ஐந்து முகைகளிலும் துன்பியலுடன் ஒன்றிவிட்ட நடப்பியலைக் காணமுடிந்துள்ளது.

வாடாமல்லிகையின் வண்ணத்தைப் பார்த்திடலாம் வாருங்கள் என்று அழைக்கும் தொகுப்பாசிரியர் தன்னுரையில்....

"ஈழத்தமிழ் நாட்டில் இணுவில் திருவூரில், உழைப்பால் உயரவேண்டும் என்னும் உன்னதமான ஓர் இளைஞனின் எண்ணத்தில் வேர்கொண்டு முயற்சி திருவினை ஆக்கும் என்னும் முன்னோரின் மூல மந்திரத்தில் முனைப்பாக முளைத்தெழுந்து, கடின உழைப்புக்கு நிகரில்லை என்னும் ஒப்பற்ற உரத்தில் வளர்ந்து வளம்பெற்று, எல்லார்க்கும் இனியது செய் எனும் இன்சொல்லாம் நன்னீரால் பாசனம் பெற்றுப் பலித்தோங்கி என்னாளும் எதனாலும் வாடாத மல்லிகை போல் முகையரும்பி மெட்டாகி மலர்ந்திருக்கும் வண்ணமலர் . இன்னல் பல சுமந்தும் இங்கிதமாய் எழுந்து நிற்கும் அண்ணாவின்

புன்னகையில் அதிசயமாய் மலர்ந்தமலர்" - என்று கூறிய கூற்றுக்கள் உண்மையில் உண்மையின் உயர்வுக்கு எடுத்துக்காட்டாக உருப்பெற்று நிற்கின்றன.

"அண்ணா நிறுவனத்தை ஸ்தாபித்து பலரை வாழ வைத்த மனிதனின் பயணத்தில் சந்தித்தவை, சிந்திக்க வைப்பவை. ஒப்புரவாளர் உயர்திரு.பொ.நடராசா அவர்களின் உண்மை வாழ்வு அகத்தை ஆழமாகத் தொட்டு அகலமாகச் சிந்திக்க வைக்கிறது." என்று செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் அண்ணாவின் சிறப்பபை முன் வைத்துள்ளார்.

"தன்னம்பிக்கை, விடாமுயற்சி, இடர்களை எதிர்கொள்ளும் துணிவு, ஏனையோர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், தலைமைத்துவ ஆற்றல் என்பவற்றைத் தன்னகத்தே கொண்ட பெருமைக்குரியவராக அண்ணா தொழிலதிபர் திகழ்கின்றார் என்றால் மிகையாகாது" என்று புகழாரம் சூட்டி, அவரின் அனு பவத் தொகுப்பு நூலாகிய வாடாமல்லிகை மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன் என்கிறார் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் திரு.சுந்தரம் அருமைநாயகம்.

மனிதப் பிறவியின் விழுமிய நோக்கங்கள் முற்றும் அற்றுப் போகாவகை காக்கவல்லன நல்லறிஞர் உள்ளத்திலிருந்து வெளிவரும் உண்மை விளக்கங்கள். அந்த வகையில் அண்ணா நடராசா அவர்கள் நூலின் நுழைவாயில் தன்னை முன்னிறுத்தி சமுதாய மேம்பாட்டுக்கான அற்புதமான கருத்துக்களை அள்ளித் தந்துள்ளார்.

*"இவை என் பயணத்துள் அடைந்த அனுபவத்தின் பெறுபேறுகள். இவை இனிவரும் சந்ததிகளுக் கான ஊக்க மருந்தாக ஊட்டம் பெறலாம் என எண்ணுகிறேன். இது எனது அர்ப்பணிப்புகளின் அடை யாளங்கள். எனது அயராத உழைப்பின் வெளிப்பாடுகள்."*

"வேடிக்கை மனிதரைப் போல - நான் வீழ்வேனென்று நினைத்தாயோ?" என்று பைந்தமிழ்ப் புலவன் பாரதி சக்தியை நோக்கிப் பாடுகிறான். அதே இறுமாப்பை அண்ணாவிடமும் காண்கிறோம்.

*"ஒவ்வொரு முறை விழுகின்ற போதும் அதைவிட வேகமாக நான் எழுந்திருக்கிறேன், என்பதை நினைவில் வைத்திருக்கிறேன். இதுதான் உங்களுக்கும் பாடமாக வேண்டும்.*

*"என் பயணத்தில் இரண்டு முக்கிய நினைவுகள் என் மனதைத் தொட்டவை. ஒன்று 1995 இல் நிகழ்ந்த கொடூரமான இடப்பெயர்வு. அந்த நாட்களில் நான் உடல் நலமற்றிருந்தேன். என் அன்னை முதுமை யின் இயலாமையில் இருந்தார். அப்படி இருந்தும் அண்ணா நிறுவனத்தையும் அதன் ஊழியர்களை யும் மக்கள் கூட்டத்துடன் மழையின் நடுவே நகர்த்தியிருந்தேன். அந்த அனுபவங்கள் ஆழமான வடுக் களாக என் மனத்துள் இருந்தன. என் வாழ்வின் வீரம் செறிந்த விளையாட்டாகவே அதை நினைத்துப் பார்க்கின்றேன். ஜீவகாரம் உருவாக்கியபோது கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. கள நிலை யும் மோசமாக இருந்தது. எனினும் என் கால் அடிகள் ஒவ்வொன்றும் அளந்தே வைக்கப்பட்டன. அப் போது மறக்க முடியாத பல மனி நேயங்கள் எனக்கு உதவிக் கரம் நீட்டின. நான் இந்த மண்ணின் மைந்தன், எந்தச் சோதனையிலும் நாம் மக்களை விட்டு ஓடியதில்லை. என்றும் ஒரு மக்கள் கூட்டம் எம் பின்னால் இருக்கின்றது என்ற உண்மையான எண்ணம் எனக்குண்டு. இது எந்த நிறுவனத்துக்கும் இல்லாத பெருமை என நெஞ்சார முழு மனத்துடன் உங்கள் முன் நிற்கின்றேன்."* - என்று கூறியுள் ளமை அவரது மனோதிடத்தை எடுத்துக் காட்டியுள்ளது.

மேலும் முன்னுரையை பேராசிரியர் சபா ஜெயராசாவும் அணிந்துரையை கலாபூஷணம் திருமதி கோகிலா மகேந்திரனும் தந்துள்ளார்கள். "அண்ணா நடராசா அவர்களது வாழ்க்கையின் படிமமாக 'வாடா மல்லிகை' அமைந்துள்ளது. அண்ணாவின் 'வாழ்க்கையே செய்தி' யாகின்றது. பல்வேறு அறை கூவல்களை எதிர்கொண்டு, வாடாது, தளராது, வன்முறைகளுக்கு முகம் கொடுத்து விண்டெழுந்த

வாழ்க்கைச் சுவடுகள் ஆவண வடிவம் பெறுதல் தமிழ்த் தேசிய வரலாற்றில் ஒரு முக்கியமான பதிவாகின்றது" என்று முன்னுரையில் பதித்துள்ளார் பேராசிரியர் சபா ஜெயராசா. "வாழ்வில் சிலர் அதிர்ஷ்டத்தால் வெற்றி பெறுவர். வேறு சிலர் ஒவ்வொரு கணத்திலும் நன்கு சிந்தித்துத் திட்டமிட்டுச் செயலாற்றி வெற்றி பெறுவர். இரண்டாவது வகையைச் சேர்ந்த ஒரு மனிதனின் வாழ்வின் முக்கியமான சில பக்கங்கள் 'வாடாமல்லிகை'யாக மலர்ந்திருக்கின்றன" என்று அணிந்துரையில் கூறப்பட்டுள்ளது.

முகை இரண்டு, 'எண்ணிலா இன்னலங்கள்' என்ற பகுதி பதினாறு அத்தியாயங்களைக் கொண்டு நிற்கிறது. இந்தப் பகுதியில்தான் அண்ண தனக்கு நேர்ந்த அவலங்களை மனந்திறந்து பேசுகின்றார். அமைதி காக்க என்று இங்கு வந்த இந்திய அமைதிப் படையின் அட்டூழியங்கள் யாழ்ப்பாணத்தைச் சிதைவுறச் செய்த வரலாறுகள் சொல்லப்பட்டுள்ளன.

வலி.வடக்கு இடப்பெயர்வு, இந்திய அமைதிப் படை திரும்பியது ஆகிய தலைப்புகளில் உண்மைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஒரு துன்பியல் வரலாறும் எழுந்த எழுச்சியும் தரவுகளாகத் தரப்பட்டுள்ளன.

முகை மூன்று 'இருப்பைக் குலைத்த இடப் பெயர்வுகள்' - இடம்பெயர்வின் அவலங்களும், மனித நேயப் பணிகளும் பதின்மூன்று அதிகாரங்களில் பகரப்பட்டுள்ளன.

பல்வேறு இடங்களில் மக்கள் இடப்பெயர்வால் வாழ்ந்த வாழ்க்கைக் கோலங்களையும் எல்லா அவலங்களையும் சந்தித்த நம்மவர்கள் எல்லோரும் யாழ். மீண்டனர் என்ற தகவலையும் இயற்கையால் வந்த அழிவுகளையும் இந்த நூல் பதிவுகளாகத் தந்துள்ளது.

சோதனைகள் பல கண்ட அண்ணா தொழிலகம் எழுச்சி பெற்ற வரலாறு முகை நான்கில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. தன்னம்பிக்கையையே தன் மூலதனமாகக் கொண்டு செயற்பட்டதாகவும், தடக்கி விழவிருந்த நிலைகளை எல்லாம் தவிர்த்துவிட்டதும் அந்த நம்பிக்கையில்தான் என்றும் அண்ணா தொழிலக அதிபர் குறிப்பிடுகின்றார். 'இன்னலே எழுச்சிக்கு உரமாகியது' என்ற அத்தியாயத்தில் "இன்னலும் எழுச்சியும் எமக்கு மட்டுமல்ல எல்லோர்க்கும் பயன் தரும் பட்டறிவாக எதிர்காலத்துக்கு வழிகாட்டும் ஒளி விளக்காகப் பயன்தரவேண்டும். 'வாடா மல்லிகை' எக்காலும் வாடாமல் அழகு தருவது போல் நாமும் வாடாமல் மீண்டும் மீண்டும் துளிர்தெழுவோம். உழைக்க வேண்டியது எங்கள் கடமை. பலன் தர வேண்டியது இறைவன் செயல் என்பதை உணர்ந்து வாடாதிருப்போம்" என்ற ஆறுதல் வார்த்தைகளை நம்பிக்கையுடன் தந்துள்ளார்.

முகை ஐந்து அண்ணாவைப் பற்றி அறிஞர்கள் பார்வை: இணுவில் அண்ணா தொழிலக முதல்வர் எஸ்.பி.நடராசா பற்றிய மனப்பதிவுகளை அறிஞர்கள் பலர் முன்வைத்துள்ளனர். குறிப்பாக பேராசிரியர் க.தேவராஜா, காந்தளகம் க.சச்சிதானந்தன், பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், பேராசிரியை வசந்தி அரசரத்தினம், கலாபூஷணம் கா.வைத்தீஸ்வரன், கவிஞர் சோ.பத்மநாதன், பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, மருத்துவர் செ.சு.நச்சினார்க்கினியன் ஆகியோருடன் 'குழந்தைகளின் மேம்பாட்டில் அண்ணா தொழிலகம்' என்று தெரிவிக்கும் வைத்திய கலாநிதி ந.சிவராசாவும் இடம்பெற்றுள்ளார்.

பொதுவாக நோக்குமிடத்து 'வாடாமல்லிகை' ஒரு வரலாற்று ஆவணமாக, பல சம்பவங்களின் தொகுப்பாக, உழைப்பால் உயர்ந்த ஓர் உத்தமனின் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தும் பொக்கிஷமாக மலர்ந்து, பலருக்கும் பயன்தரும் அறிவுக் களஞ்சியமமாக உருவெடுத்துள்ளது. ●

-தம்பு சிவா

ஆய்வுக் கட்டுரை

# தாயக ஒலி சஞ்சிகை ஆய்வு



- வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கிய தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார் பெருவிழா 26.09.2015 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

தாயக ஒலி இரு திங்கள் ஏடும் இலண்டன் தமிழினி பத்திரிகையும் இணைந்து நடத்திய தனிநாயகம் அடிகளார் கட்டுரைப் போட்டி பரிசளிப்பு, சான்றோர் கௌரவிப்பு, போட்டி நடுவர்கள் கௌரவிப்பு, கலை நிகழ்ச்சிகளுடன் எனது சஞ்சிகை ஆய்வுக்கும் தனிநாயகம் அடிகள் எனும் ஆளுமையின் பெருவிழாவின் மேடையில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு பெருமையடைகிறேன்.

இது ஓர் ஆய்வல்ல. 19 இதழ்களின் பார்வை. 2011 செப்டெம்பர் மாதம் 'இணுவில் ஒலி'யாக ஆரம்பித்த சஞ்சிகை 2013 இல் 'இணுவில் ஒலி' 8 ஆவது சஞ்சிகை 'தாயக ஒலி'யாக மாறிட தொடர்ந்து 19 சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. இரு திங்கள் இதழாக வெளிவரும் தாயக ஒலி, இதுவரை பல சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளது. அவற்றுள், லண்டன் சிறப்பிதழ், தனிநாயகம் அடிகள் சிறப்பிதழ், கனடா சிறப்பிதழ் குறிப்பிட்டுக் கூறக் கூடியவையாகும்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இரு திங்கள் ஏடு பிரதம ஆசிரியர் தம்பு சிவா என்றழைக்கப்படும் த.சிவசுப்பிரமணியம் அவர்கள். துணை ஆசிரியர்கள், தாயகன் ( இலண்டன் ), சி.பவன் ( இலங்கை ), ஆறுபேர் கொண்ட மதியுரைக்குழு. ஐந்து பேர் கொண்ட சஞ்சிகைக்குழு, கனடா, இலண்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள். ஐரோப்பிய நாடுகளுக்கான ஒருங்கிணைப்பாளர் ஒருவர் ஆகியோருடன் இயங்கி வருகின்றது.

தாயக ஒலி சஞ்சிகையின் சிறப்புக்கள்

- ஒவ்வொரு இதழும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட அட்டைப் படத்தைக் கொண்டு வெளிவருவது.

- அட்டைப் படத்தில் முக்கிய ஆளுமைகளின் படங்களும் முக்கிய நிகழ்வுகளின் படங்களும் பிரசுரிக்கப்படுகின்றன.

- தவறாமல் இதழ்கள் தோறும் தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் சிறப்பு மலர்கள், பொங்கல் மலர், தீபாவளி மலர் வெளிவருவதுடன் சில அறிவுறுத்தும் குறியீட்டுப் படங்களும் வெளி வந்திருக்கின்றன. உதாரணம் 11 ஆவது இதழின் அட்டைப் படம் :- "நீரைப் பாதுகாப்போம், சுத்தமான நீரை அருந்துவோம்."

- இலண்டன் சிறப்பிதழ்
- தனிநாயகம் அடிகளார் சிறப்பிதழ்
- தமிழ் நடை அல்லது மொழிநடை

இலகு தமிழுக்கும் பண்டிதத் தமிழுக்கும் இடைப்பட்ட மொழி நடையில் ஆக்கங்கள் அமைந்திருக்கின்றன. அதற்கு செவ்விதாக்கம் மிக அவசியம். மிகக் கவனத்துடன் எழுத்தாளர் உணராத வண்ணம் செவ்விதாக்கம் நடைபெறுகிறது என நம்பலாம்.

கனடா சிறப்பிதழ் - 18 ஆவது சிறப்பிதழாகும். பிரதிகள் தீர்ந்துவிட்டன. 40-44 பக்கங்கள் கொண்ட தாயகஒலி 400 பக்கங்களுக்கான தகவல் களஞ்சியமாக வெளி வருகிறது.ஒவ்வொரு சிறப்பிதழும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட அட்டைப் படத்துடன் வாங்கிப் படிக்கும் ஆவலைத் தூண்டும் வண்ணம் அமைந்திருப்பது தனிச் சிறப்பாகும்.

இணுவில் ஒலியாய் இருக்கும் போதும், தாயக ஒலியாக மாறிய போதும் சஞ்சிகையின் உள்ளடக்கம் கதம்பம் போன்ற அமைப்பில் வெளி வருவது வாசிப்பில் ஆர்வத்தை ஊட்டும் வண்ணம் அமைந்துள்ளது.

சஞ்சிகையின் உள்ளே நுழைந்தால், பொருளடக்கம் எனும் வழிகாட்டி உள்ளே ஒலிப்பவை எனும் உபதலைப்பில் மிக இலகுவாகப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்பொருளடக்கத் தலைப்புகள் ஆக்கியோரின் பெயர் குறிப்பிடப்படாமல் இருப்பது யார் இதை எழுதியுள்ளார் எனப் பார்க்கத் தூண்டுகிறது. பேனா முனையிலிருந்து... எனும் ஆசிரியர் தலைப்பே மிகப் பெறுமானம் உடைய ஒன்றாக எழுதப்பட்டு வருகின்றது. சஞ்சிகை தோறும் வித்தியாசம், வித்தியாசமான சமகால சமூக, பொருளாதார அரசியல் நடப்புகளின் பார்வை இங்கு பதியப்படுகின்றது.

கட்டுரை, சிறுகதை, சிரிகதை, சிறுவர் கதை, கவிதை, கேட்டதைச் சொல்ல வந்தோம், அரங்கம், விளையாட்டு, அறிந்தவையும் தெரிந்தவையும், நூல் அறிமுகம், ஏனையவை போன்ற தலைப்புகளில் கட்டுரைகளும், கதைகளும் செய்திகளும், கவிதைகளும், அறிவூட்டல் கருத்துக்களும் நிறையவே காணப்படுகின்றன. துணுக்குச் செய்திகளுக்கும் குறைவில்லை.

மேலும் தகவல்கள், அரங்க நிகழ்வுகள், வாசகர் கருத்துக்களுக்கான 'உங்கள் விருந்து' பக்கம், இலக்கியம், மாணவர் உலகம், அறிவியல், திறனாய்வு, முற்போக்கு இலக்கியம், உளவியல் சார் கட்டுரைகள், மங்கையர் மாண்பு, சான்றோர் அறிமுகம், பழந்தமிழ் இலக்கியப் பார்வை போன்றவையும் தொடர்ந்தும் சஞ்சிகைக்கு சஞ்சிகை மாற்றமான முறையிலும் இடம்பெற்று வருவது சந்தாதாரர்களையும் தொடர் வாசிப்பை மேற்கொள்வேரையும் அலுக்காது தாயக ஒலியைத் தவறாது படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

ஆன்மீகக் கட்டுரைகளும், பக்தி இலக்கியத் தகவல்களும் அதில் ஆர்வமுள்ளவர்களைக் கவர்ந்திழுக்கும் உத்தியாகும். கேள்விப்பட்டதைச் சொல்லுகிறோம் எனும் தலைப்பில் கிசுகிசு எழுதாது உண்மைச் சம்பவங்களின் தொகுப்பாக அவை எழுதப்படுவது பத்திரிகை தர்மத்தின் சிறப்புப் படியாகும்.

இணுவில் ஒலிக்கு சங்கு இலச்சினையாக இருந்து வந்து தாயக ஒலிக்கு முரசு இலச்சினையாக கொட்டும் முரசு என அட்டையில் காட்டப்பட்டுள்ளது. தற்பொழுது தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் உருவம் பிரகாசிக்கின்றது. ஒரு சஞ்சிகையின் பணி பொதுமக்கள் அல்லது வாசகனது கவனத்தை ஈர்க்கும் பொறுப்பாகும் என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

உலகளாவிய ரீதியில் நடைபெறும் நிகழ்வுகளின் செய்திகளும் மிகச் சுருக்கமாகவும், நேர்த்தியாகவும் தரப்படுகின்றன. இலங்கை, லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, இந்தியா போன்ற நாடுகளில் நடைபெறும் கலை இலக்கியச் செய்திகள் தாயக ஒலியில் அடிக்கடி இடம்பெறுகின்றன.

தாயக ஒலி வாசகர்களுடன் மட்டும் நின்றுவிடாது சமூக, சமயத் தொண்டுகளையும் முன்னெடுத்துச் செல்லுகின்றது. வணிக நோக்கத்தை மட்டும் கருத்தில் கொள்ளாது 'தாயக ஒலி' இயங்கி வருகிறது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

தாயக ஒலிக்கு தாராளமாகவும் தொடர்ந்தும் உதவி வருபவர்கள் உள்ளனர் என்பதைத் தொடர்ச்சியாக வெளிவரும் விளம்பரங்கள்

எடுத்துக் காட்டுகின்றன. பிரதம ஆசிரியர் தம்பு சிவா அவர்கள் கூறுவது போல் ஐந்து வருடங்களுக்கு போதுமான விளம்பரங்கள் கைவசம் உள்ளன என்பது உண்மைதான் போலும்.

விசேடமாகக் குறிப்பிட வேண்டிய ஒன்று உள்ளது என்னவெனில் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி, 2013 இல் தாயக ஒலி மாணவர்களுக்கான திறந்த கட்டுரைப் போட்டி ஒன்றை தேசிய ரீதியில் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழாவும் நடத்தி வைத்ததாகும். அதில் சிறப்பதிதியாக கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

2015 ஆண்டில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் கட்டுரைப் போட்டி இலண்டன் தமிழினி பத்திகையுடன் இணைந்து நடத்தியதற்கான பரிசளிப்பு நிகழ்வு இன்றைய தினம் நடைபெறுகின்றது. வெற்றி பெற்ற 16 மாணவ, மாணவியருக்கு பதக்கங்கள், பணப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன.

19 ஆவது தாயக ஒலியில் அட்டைப் படத்தில் பல தமிழ் இலக்கிய ஆளுமைகளின் படங்களும், தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் படமும், பாரத்தின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் படமும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. 18 ஆவது இதழ் கனடா சிறப்பு மலராக வெளி வந்திருக்கிறது. தனிநாயகம் அடிகளார் பற்றி மூன்று கட்டுரைகள் தனிநாயகம் அடிகளார் சிறப்பிதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. போட்டியில் முதலாவது, இரண்டாவது பரிசு பெற்ற கட்டுரைகளுடன் இன்றைய நிகழ்வுக்கு தலைமை தாங்கும் நாவலர் நற்பணிமன்றத் தலைவர் திரு. கருணை ஆனந்தன் அவர்களின் கட்டுரையொன்றும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரைகள் 2014 கார்த்திகை - மார்கழி 14 ஆவது இதழில் வெளிவந்திருக்கின்றன.

உங்கள் விருந்து எனும் தலைப்பில் வாசகர் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. 'இனிய உளவாக' எனும் வள்ளுவர் வாக்குப் போல் வாசகர் கருத்துக்கள் அதில் இடம்பெறுகின்றன. எழுத்தாளரையோ எழுத்தாக்கங்களையோ சாடாமல் கனிகொய்யுமாப்போல் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன. உதாரணத்துக்கு,

கண்டியைச் சேர்ந்த தவபாலச்சந்திரன் எனும் வாசகர் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கின்றார்.

"இருமாத இலக்கிய இதழான 'தாயக ஒலி' அச்சுத் தாள்கள், கவச்சிகரமான முன் அட்டை, வளமான விளம்பரங்கள் ஆழமான கருத்துள்ள கட்டுரைகள், மக்களுக்கு அறிவூட்டும் ஆசிரிய தலையங்கம், தரமான குறுங்கதைகள், கவிதைகள், சிறுகதைகள், விளையாட்டுச் செய்திகள், சினிமாச் செய்திகள் போன்ற பல்வேறு நல்ல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு அழகாக ஜொலிக்கிறது. 'கற்பகம்' இதழில் தொடங்கி இன்றுவரை இதழியலில் நீண்ட கால அனுபவத்தையும் கொண்டவர் பிரதம ஆசிரியர். தாயக ஒலி தரணியெங்கும் கேட்க (ஒலிக்க) வேண்டும். பிரதம ஆசிரியர் பணி சிறக்க வாழ்த்துக்கள்" என்கிறார்.

நவீன தமிழ் இலக்கியத்தின் கருவறையாகவும் தாயக ஒலி மாற்றமுற எழுத்தாளர் உதவ வேண்டும். - என்றும் வாசகர்களின் பாராட்டைப் பெற்றுவரும் தாயக ஒலி "தேமதுரத் தமிழ் ஓசை (ஒலி) உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" எனும் பாரதியின் கனவை நனவாக்கி நடைமுறைப்படுத்தும் நற்பணியினை செய்து கொண்டிருக்கிறது என்று சொல்வது மிகையாகாது."


தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரை நினைவு கூர்ந்து லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கும் இன்றைய தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார் பெருவிழாவில் அவரைப் பற்றி நண்பர் கோபாலகிருஷ்ணன் இயற்றிய இசைப்பாடல் ஒன்றை நினைவூட்ட விரும்புகின்றேன். இவ்விசைப்பாடல் தாயக ஒலி 14 இல் பக்கம் 7 இல் வெளிவந்ததென்றாகும்.

*"தமிழுக்காய் வாழ்ந்த எங்கள் தனிநாயகம்*
*தமிழறிஞர்களுக்கு அவர் நடு நாயகம்*
*ஊர்காவற் றுறை மண்ணின் உத்தமனார்*
*உள்ளத்தில் இறை ஒளி ஏற்றி வைத்து*
*ஊருக்குப் புகழினைக் கூட்டிவைத்து*
*பார்எங்கும் தமிழினைப் பறையறைந்தார்!*
*- அவர்*
*பாதையில் சென்றுநாம் பணிபுரிவோம்!*
*குருத்துவம் நாடிய கோமகனார்*
*குன்றின் மேல் விளக்கென ஒளிவீசி*
*குவலயம் எங்கணும் தமிழ்பேசி*
*சரித்திரம் படைத்தவர் சங்கை பெற்றார்!*
*- அவர்*
*சாற்றிய வாறுநாம் பணிபுரிவோம்!*
*தமிழ்த்தூது தந்திட்ட தலைமகனார்*
*தம்பிரான் வணக்கம் நூல்தனை எடுத்து*
*தமிழ்மொழி ஆய்வுக்கு அடியெடுத்து*
*தமிழியல் ஆய்வினில் தலைசிறந்தார் அவர்*
*தடத்தினில் நாம் நடந்து பணிபுரிவோம்."*

தாயக ஒலி பழைய பிரதிகளைத் தேடிப் படியுங்கள். வெளிவந்த அனைத்துப் பிரதிகளும் உள்ளவர்கள் அவற்றைப் பாதுகாத்து புத்தகமாகக் கட்டி வையுங்கள். உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எதிர்காலத்தில் உசாத்துணையாக அவை அமையும் என்பது திண்ணம்.

இலங்கையில் வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகளுக்குள் பல பரிமாணங்களை உள்ளடக்கி, வாசகருக்கு வழங்கும் சஞ்சிகை வேள்வியில் சளைக்காது தொடரும் தாயக ஒலியின் தமிழ்ப் பணியும் இனமத பேதம் பாராத சமூகப் பணியும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பது கண்கூடு.


சமூகத்தின் சகல மட்டத்தினருக்கும் ஏற்ற வகையில் தாயக ஒலியின் ஆக்கங்கள் தரமாய் அமைந்திருக்கின்றன என்பது அதன் விசேடத் தன்மையாகும். மேலும் பல பரிமாணங்களை உள்ளடக்கி தாயக ஒலி தொடர்ந்தும் வெளிவர வேண்டும். ( உதாரணமாக - சங்க இலக்கியக் குறிப்புகள், நவீன விஞ்ஞானத் தகவல்கள், வீட்டு வைத்திய குறிப்புகள், பெண் வாசகர்கள் விரும்பும் அழகு குறிப்புகள் போன்றவை ) என்றும் மத நல்லிணக்கத்துக்கும் சேவையாற்றத் தூண்டுவதோடு, பிரதம ஆசிரியர் முற்போக்கு சிந்தனையுடையவராகவும் அவருடன் சேர்ந்து உழைப்பவர்களும் அதே சிந்தனையுடன் செயல் படுபவர்களாக இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளமை வரவேற்கத்தக்கதாகும். தாயக ஒலியின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் என்னால் முடியுமான உதவி, ஒத்தாசைகளை மென்மேலும் செய்வதற்கு சித்தமாய் உள்ளேன் எனக் கூறிக் கொண்டு ஒரு முக்கிய தகவலையும் உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன். பிரதம ஆசிரியர் திரு. தம்பு சிவசுப்பிரமணியம் அவர்கள் மதிப்புரைக் குழுவினர் மற்றும் சஞ்சிகை குழுவினர், ஆசிரியர் குழு ஆகியோரின் ஒத்துழைப்புடன் காலஞ்சென்ற பாரதத்தின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் நினைவாக பாடசாலை மட்டத்தில் ஒரு கட்டுரைப் போட்டியினை எதிர்வரும் காலத்தில் தாயக ஒலியில் நடத்தவிருக்கின்றார். மாணவச் செல்வங்களின் ஆற்றல்களை வெளிக் கொணரக் கிடைத்த சந்தர்ப்பமாக இதைக் கொள்ளலாம்.



## இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

வாசகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள், சந்தாதாரர்கள், மதியுரைக் குழுவினர், இலக்கிய நண்பர்கள், நலன் விரும்பிகள், மாணவச் செல்வங்கள், படைப்பாளிகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், மற்றும் நல்நெஞ்சங்கள் உட்பட அத்தனை பெருந்தகைகளுக்கும் இனிய தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை 'தாயகஒலி' பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறது. "பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!"

# இலண்டனில் வீணை அரங்கேற்றம்



இலண்டன் வாழ் எம்மவர்கள் தமது அடையாளங்களை நிலை நிறுத்திக் கொள்ளும வகையில், கீழைத்தேய கலைப் பாரம்பரியங்களைப் போற்றிப் பாதுகாத்து வருவது உண்மையிலேயே பாராட்டப்படவேண்டிய அம்சமாகும். மேலைத்தேய கலாசாரச் சூழலில் வாழ்ந்து கொண்டு, எமது கலைப் பங்களிப்புகளை மறந்து விடாமல் அவற்றுக்குப் புத்துயிர் வழங்கிக் கொண்டிருக்கின்ற எம் இளம் சந்ததியினரும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் பெற்றோரும் உண்மையிலேயே வாழ்த்துக்குரியவர்கள்.

அந்தவகையிலேயே ஒரு துடிப்புள்ள இளைஞரின் வீணை அரங்கேற்றம், இலண்டனில் மிகுந்த அவதானிப்புக்குட்பட்டு பலரின் பாராட்டுக்கு உரியதாகியுள்ளது. ஆம். செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி இலண்டன் பெக் தியேட்டர் அரங்கில் நடைபெற்ற செல்வன் ராம்ஜெகநாதன் அவர்களின் வீணை அரங்கேற்றத்தைத்தான் இங்கு குறிப்பிடுகின்றேன். ராம் ஜெகநாதன் தான் ஒரு கலைக்குடும்பத்தின் வாரிசு என்பதை வீணை அரங்கேற்றத்தின் மூலம் நிலை நிறுத்தியுள்ளார். அவருடைய தாயார் திருமதி ஜெயவேணி ஜெகநாதன் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் கல்வி பயின்று நடனப் பட்டதாரியாக வெளிவந்தவர். இவரின் பெரிய தாயார் திருமதி ஜெயஅழகி பொன்னையா அருணகிரிநாதன் வீணை, வாய்ப்பாட்டு ஆகிய இரண்டையும் இந்தியாவில் கற்றுத் தேறியவர். இந்தக் குடும்பப் பின்னணி செல்வன் ராம் ஜெகநாதனை வீணைக் கலைஞராக உருவாக்கியுள்ளது.

இந்திய வானொலி புகழ் பிரபல சங்கீதக் கலாநிதி சோபனா சுவாமிநாதனை குருவாகப் பெற்று வீணைக் கலையை முறையாகக் கற்று அரங்கேற்றம் கண்டுள்ளார். முன்னாள் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் 2011 ஆண்டு ஜூலை மாதம் இந்தியாவுக்கு வருகை தந்த வேளை அவர் முன்னிலையில் வீணை வாசித்துப் பாராட்டுப் பெற்ற டாக்டர் சோபனா சுவாமிநாதன் அவர்கள் இந்தியாவில் S.A.K. K.K. என்னும் நுண்கலைக் கல்லூரியையும் நடத்தி வருகின்றார். அத்தகைய பெருமைக்குரியவரின் வழிநடத்தலில் செல்வன் ராம் ஜெகநாதன் வீணைக் கலையைக் கற்றுத் தேறியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரங்கேற்ற அரங்கம் அழகுத் தோற்றத்துடன் மிளிர, மின் விளக்குகள் மின்னி ஒளிபரப்ப, நாத வெள்ளமென வீணா கானம் கேட்போரை மெய்சிலிக்க வைத்தது. செல்வன் ராம் ஜெகநாதன் அரங்கேற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலைத்துறையில் பாண்டித்தியம் பெற்றவரும், இலண்டன் பாரதிய வித்தியா பவனின் துணைவேந்தருமாகிய தமிழ்ப் பேராசிரியர் பத்மஸ்ரீ யோன்மார் அவர்களும், கௌரவ விருந்தினராக பிரசாந் நாயக் அவர்களும் பங்குகொண்டு சிறப்பித்தனர்.

மண்டபம் நிறைந்த இரசிகர்கள் கூட்டத்தினரின் உற்சாகமான வரவேற்புடன் அரங்கேற்ற நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முதலில் முல்லைவேது ரங்கசாமி நட்டுவனாரின் சாலமேளம் உருப்படியுடன் வீணை இசையை தொடக்கி வைத்தார் ராம் ஜெகநாதன். தொடர்ந்த ஸ்ரீமுத்தையா

பாகவதர் இயற்றிய சித்தி விநாயகம், சுப்பராய சாஸ்திரியின் ஜயனி நின்னுவினா கீர்த்தனை இசைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து என்டறோ மகானுபவுலு. அத்துகார ஆகிய தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகளை மிக நுட்பமாக வீணையில் தந்தார் ராம்.

மைசூர் வாசுதேவாசர் இயற்றிய பையனசேய ராத, பத்னம் சுப்பிரமணிய ஐயரின் பரிதான மிக் சிதே கீர்தனையும் இடம்பெற்றன. தொடர்ந்து ராகம் – தாளம் – பல்லவி –யில் 'சரவண முருகனே' என்னும் பல்லவி. இதை இவரின் குரு டாக்டர் சோபனா சுவாமிநாதனே ஹரகரப்பிரியா இராகத்தில் வடிவமைத்திருந்தார். தொடர்ந்து மாமவ பக்துபிரம்மா, ஶ்ரீசத்ய சைனம்பாஜெஹும் ஆகிய உருப்படிகள் மெருகூட்டின. இறுதியாக தில்லானா இடம்பெற்றது. செல்வன் ராம் ஜெக நாதன் அனுபவம் பெற்ற கலைஞராக நின்று அரங்கேற்றத்தை மேடையேற்றியமை உண்மை யிலேயே பாராட்டுக்குரியது.

உலகப் பிரசித்தி பெற்ற மிருதங்க வித்து வான் சதீஸ்குமார் மிருதங்கம் வாசிக்க, சரவ ணன் கருணாநிதி கெஞ்சிரா இசைக்க, பிர சன்னா தேவராஜா மோர்சிங் வாசிக்க, தம்புரா இசைக் கலைஞர் நிரோஷி உதயணன் தமது மேலான பங்களிப்பை வழங்க வீணை அரங் கேற்றம் குயிலுவக் கலைஞர்களின் சிறப்பான பங்களிப்புடன் பெருமையுடன் நடந்தேறியது.

"செல்வன் ராம் எடுத்துக் கொள்ளும் எந்தக் காரியத்திலும் முழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆற்றல் கொண்டவர். இவருடைய முன்னேற்றத்திற்குத் தந்தையாரின் ஒத்துழைப் பும் தாயாரின் சிரத்தையுமே முக்கிய பங்கினை வகிக்கின்றன. கலையில் தாயார் வேணி கொண் டிருந்த ஆழ்ந்த பக்தி, காதல் இவையே ராமிற்கு ஏற்ற கலையை சரியான முறையில் இனங் கண்டு நெறிப்படுத்தி ராமை உள்வாங்கச் செய் தது. பெற்றோர் அல்லும் பகலும் கொடுத்த ஊக் குவிப்பு முயற்சியே ராமின் கலைப்பசிக்கு மருந் தாக வீணை அரங்கேற்றம் நடந்தேறியுள்ளது. கடந்த மாதம் சென்னையில் ராமின் கச்சேரியைக் கேட்டு, பார்த்து, ரசித்து பிரமிப்படைந்தேன். நிகழ் வின் முடிவில் வந்திருந்த மேதைகளின் வாழ்த் துக்களை மரியாதையுடன் ஏற்றுக் கொண்டு புன் முறுவலுடன் நின்ற ராமை காணும்போது கலைப் பொக்கிஷம் ஒன்று தந்தை, தாய் வழி நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது. உலகில் இசையால் தானும் புகழ்பெற்று, தன்னால் இசைக்கும் புகழ் சேர்த்து வாழ அன்பான ஆசிகளுடன் கூடிய வாழ்த் துக்களையும் தெரிவிப்பதில் மகிச்சியடைகின் றேன்" என்று நாட்டியக் கலைமணி கிருஷ்ண பவானி சிறிதரன் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவிருந்தார்.

செல்வன் ராம் ஜெகநாதனின் நன்றி நவிலலு டன் அரங்கேற்றம் இனிதே நிறைவெய்தியது. பலரும் மெச்சத்தக்க வகையில் அரங்கேற்ற நிகழ்வு கட்டமைக்கப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும். ●

-வவுனியூர் இரா.உதயணன்,
இலண்டன்

## சிறுவர் கவிதை

### ஒன்றாக இருப்போம்!

ஆடுவோம் பாடுவோம் !
அன்புடன் படிப்போமே !
ஓடுவோம் துள்ளுவோம் !
ஒன்றாக இருப்போமே !

கூடுவோம் களிப்போம் !
குதூ கலிப்போமே !
தேடுவோம் [கண்டு] பிடிப்போம்!
தேவைகளை அறிவோமே !

நாலும் ஆறும் பத்து !
நானும் கடவுளின் பக்தன் !
நூலும் எழுத்தும் கல்வி !
நாலும் இரண்டும் ஓதுவோமே!!

- மழுபுலவர்.

# பொதுநலவாய பளுதூக்கல் போட்டியில் யாழ். மாணவர்கள் சாதனை




பொதுநலவாய பளுதூக்கல் போட்டியில் சக்திகாந்த் விஷ்ணுகாந்த் மற்றும் பயஸ் டினேஜா ஆகிய இருவரும் பதக கங்களை வென்று இலங்கைக்கும் யாழ். மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இதில் ஆண்களுக்கான 83 கிலோகிராம் எடைக் குப்பட்ட இளையோர் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி யைச் சேர்ந்த எஸ். விஷ்ணுகாந்த் 227 கிலோகிராம் எடையைத் தூக்கி தங்கப் பதக்கம் வென்றார்.

பெண்களுக்கான 63 கிலோகிராம் எடைக்குட்பட்ட இளையோர் பிரிவில் யாழ். வேம்படி மகளிர் கல் லூரியைச் சேர்ந்த ஜே.ஜே.பயஸ் டினேஜா 122 கிலோ கிராம் எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்தார்.

பொதுநலவாய இளையோர், கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவினருக்கான பளுத்தூக்கல் போட்டி இந்தியாவின் புனே உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் இலங்கை 4 தங்கம், 3 வெள்ளி, 10 வெண்கலம் உள்ளடங்கலாக மொத்தமாக 17 பதக்கங்ளைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# சிவபூமி பாடசாலை மாணவர்கள் அமெரிக்காவில் வரலாற்றுச் சாதனை




அமெரிக்க லொஸ்ஏஞ்சலஸ் மாநிலத்தில் நடைபெற்ற சர்வதேச விசேட ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றி பதக்கங்களைப் பெற்றுள்ளனர் கோண்டாவில் சிவபூமி மாணவர்கள்.

செல்வன் ஜெயசந்திரன் மனோஜன் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும், செல்வன் அரசகுலசூரியன் மயூரன் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

# மெய்வன்மை விளையாட்டுப் போட்டியில் வட பகுதி மாணவன் ஏற்படுத்திய சாதனை

அண்மையில் (செப்டெம்பர் மாதம்) அனுராதபுரம் விளையாட்டு மைதானத்தில் அகில இலங்கை மட்டத்தில் நடைபெற்ற சேர் ஜோன் ராபற் கனிஷ்ட (Sir John Tarbet - Junior) மெய்வன்மை விளை யாட்டுப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் செல்வன் பாலச்சந்திரன் ஆனந்த்




15 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான பரிதி வட்டம் எறிதல் போட்டியில் ( Discus Throw ) 45.91 மீற்றர் தூரத்தை எட்டி, முதலிடத்தைப் பெற்றதுடன் முழு மொத்த விளையாட்டுப் போட்டியின் தலைசிறந்த மெய்வன்மை வீரனாகவும் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக் கிண்ணத்தைத் தமதாக்கினார்.

வட பகுதியிலிருந்து முதன்முதலாக இந்தச் சாதனை நிலைநாட் டப்பட்டதை, இலங்கைப் பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்க நிர்வாகிகள் பெரிதும் பாராட்டியுள்ளனர். நாமும் எமது இளம் வீரனைப் பாராட்டி மகிழ்வோம்.

- கதிரவேலு மகாதேவா

---

# கோலூன்றிப் பாய்தலில் ஜொய்சன் சாதனை



கல்வி அமைச்சும் சுகாதாரம், உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள அகில இலங்கை பாடசாலைகள் மெய் வன்மைப் போட்டிகளில் அளவெட்டி அருணோதயா கல்லூரி வீரர் கே.நெப்தலி ஜொய்சன் புதிய சாதனை நிலைநாட்டி பலத்த பாராட்டைப் பெற்றுள்ளார்.

தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டிகளின் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 4.21 மீற்றர் உயரம் தாவி அவர் புதிய சாதனை நிலை நாட்டினார்.

இதன் மூலம் 13 வருடங்களாக மாதம்பே சேனாநாயக்க ம.ம.வித்தியாலயத்தின் மதுரங்க பெர்னாண்டோவுக்கு சொந்தமாகவிருந்த 4.00 மீற்றர் என்ற சாதனையை நெப்தலி ஜொய்சன் முறியடித்தார்.

16 வயதே நிரம்பிய ஜொய்சன் நுட்பத் திறனுடன் கூடிய பயிற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தால் எதிர்காலத்தில் மற்றைய வயதுப் பிரிவுகளில் மட்டுமல்லாமல் தேசிய சாதனையையும் முறியடிக்கக் கூடியதாக இருக்கும் என கோலூன்றிப் பாய்தலுக்கு பிரதான மத்தியஸ்தராக கடமையாற்றிய அதிகாரி குறிப்பிட்டார்.

ஜொய்சனிடம் அதீத திறமை இருப்பதாகவும் அவருக்கு மனோ தைரியம் ஊட்டப்பட்டு அவரை உற்சாகப்படுத்துவது மிகமிக அவசியம் எனவும் அவர் கூறினார்.

இளம் வயதில் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் ஜொய்சனுக்கு எவரேனும் பூரண அனுசரணை வழங்க முன்வந்தால், அவர் நிச்சயமாக தேசிய மட்டத்தில் சாதனைகள் புரிந்து யாழ். மண்ணுக்குப் பெருமை சேர்ப்பார் என்பது நிச்சயம்.

ரீ.பாகீஸ்வரனின் பயிற்றுவிப்பிலும் உடற்கல்வி ஆசிரியர் பி.பிரதீபனின் கண்காணிப்பிலும் திற

மையை வெளிப்படுத்தி வரும் ஜொய்சன் 4.35 மீற்றர் உயரமுடைய கோலைக் கொண்டே இந்தச் சாதனையை நிலைநாட்டினார். லண்டனிலிருந்து 4.60 மீற்றர் நீளமுடைய கோலொன்றை தருவிப்பதற்கு கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் அங்கிருந்து கோலை அனுப்புவதில் ஏதோ தாமதம் நிலவுவதாக உடற்கல்வி ஆசிரியர் கூறினார்.

இந்தக் கோல் கிடைத்துவிட்டால் ஜொய்சனினால் சாதனைகளைப் புதுப்பிக்கக்கூடியதாக இருக்கும் என்றார் அவர். மேலும் அகில இலங்கைப் பாடசாலை மட்டப் போட்டிகளில் பங்குபற்றும்போது அவருக்கான செலவினங்களை பாடசாலை முழுமையாக ஏற்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.


2013 டிசம்பர் மாதம்தான் கோலூன்றிப் பாய்தலுக்கான பயிற்சிகளை ஜொய்சன் ஆரம்பித்தார். இந்தக் குறுகிய காலத்தில் சேர் ஜோன் ராார்பட் கனிஷ்ட மெய்வன்மைப் போட்டி - 2014 (4.20 மீற்றர்), அகில இலங்கைப் பாடசாலைகள் விளையாட்டு விழா 2014 (3.96 மீற்றர்), கனிஷ்ட தேசிய மெய் வன்மைப் போட்டி - 2015 (4.20 மீற்றர்) ஆகியவற்றில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றிருந்த நெப்தலி ஜொய்சன், தனது முதல் நான்கு முயற்சிகளிலும் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சாதனை வீரரைப் பாராட்டுவோம். ●

நன்றி : நெவில் அன்தனி

---

நீத்தார் நினைவஞ்சலி

# 'தாயக ஒலி'யின் அஞ்சலி



ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் தடம் பதித்த மூத்த எழுத்தாளர் சிற்பி சிவசரவணபவன் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.


நாவல், சிறுகதை, கட்டுரை, பத்தி, விமர்சனம் என்று பல்துறை இலக்கியத் தளங்களில் தம்மை முன்னிறுத்திச் சாதனை படைத்தவர் அவர். 'கலைச் செல்வி' என்னும் கலை இலக்கிய சஞ்சிகையை 1958 இல் ஆரம்பித்து 1966 வரை தொடர்ந்து எட்டு வருடங்கள் வெளிக்கொணர்ந்து, இலங்கையின் பிர பல்யமான எழுத்தாளர்கள் பலரைத் தோற்றுவித்துப் பெருமை கண்டவர். ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றி கல்வித்துறைக்கும் தன்னாலான பங்களிப்பை வழங்கிய கல்வி யியலாளர். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித் தியம் பெற்ற எழுத்துலகச் சிற்பி.

1952 இல் சுதந்திரன் பத்திரிகையில் 'மலர்ந்த காதல்' என்ற சிறுகதை மூலம் எழுத்தாளராகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்ட சிற்பி தமது 82 ஆவது வயதில் (09.11.2015) இறக்கும் வரை எழுதிக் கொண்டே இருந்தார். 'உனக்காகக் கண்ணே', 'சிந்தனைக் கண்ணீர்', 'அன்பின் குரல்' ஆகிய மூன்று நாவல்களையும், 'நிலவும் நினைவும்', 'சத்திய தரிசனம்', 'நினைவுகள் மடிவதில்லை' என்ற சிறுகதைத் தொகுதிகளையும் தந்துள்ளார். மேலும் ஈழத்து எழுத்தாளர்கள் பன்னிருவரின் சிறு கதைகளைத் தொகுத்து 'ஈழத்துச் சிறுகதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பை 1958 இல் வெளி யிட்டுள்ளார்.

சென்னையில் கல்வி கற்கும் காலத்தில் 'இளந்தமிழன்' ஏட்டின் ஆசிரியராகவும், 'விளக்கு' கல்வி இதழின் ஆசிரியராகவும், சைவசமய ஏடான 'இந்துசாதனம்' பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்து பல்துறைசார் களம் கண்டவர். ஆளுநர் விருது, மூதறிஞர் விருது, ஞான ஏந்தல் விருது ஆகிய விருது

களைப் பெற்று பெருமை சேர்த்தவர். இத்தகைய பெருமைக்குரிய பெருந்தகையின் மறைவால் துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கும், உறவினர் நண்பர்களுக்கும், இலக்கிய நெஞ்சங்களுக்கும் 'தாயக ஒலி' தனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது. ●

---




சைவமும் தமிழும் செழித்தோங்கும் திருவூராம் இணுவில் ஈன்றெடுத்த தவப் புதல்வன் கலாபூஷணம் புலவர்மணி உயர்திரு வை.க.சிற்றம்பலம் அவர்கள் தமது 102 ஆவது வயதில் இயற்கையெய்தியமை தமிழ் கூறும் நல்லுலகுக்குப் பேரிழப்பாகும். ஆசிரியராக முப்பத்தாறு ஆண்டுகள் பணியாற்றி சிறந்த மாணாக்கர் பரம்பரையைத் தரணிக்குத் தந்தவர். சைவ பக்தியும், தமிழ்ப் புலமையும் மேலோங்க நின்று ஆல யங்கள் மீது பாமாலைகள் புனைந்துள்ளார்.

கவித்துவம் மிக்கவராகிய இவர் 'இரட்டை மணிமாலை', 'பிரபந்தங்கள்' அடங்கிய ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆக்கங்களை வெளிக்கொணர்ந்துள்ளார். அண்மையில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் 'தமிழ்நிதி' என்னும் விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளமை சிறப்பு அம்சமாகும். அவரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தவர்கள், உறவினர்கள், மாணவர்கள், படைப்பாளிகள், சீர்இணுவைத் திருவூர் மக்கள் அனைவருக்கும்' 'தாயக ஒலி' தனது துயர்மிகு அனுதாபங்களைப் பகிர்கின்றது. 'எப்போ முடிந்த காரியம்'

●

---



சீர் இணுவைத் திருவூரின் தவப்புதல்வன், சைவமும் தமிழும் இரு கண்களெனப் போற்றி வாழ்ந்த பெருமகன் உயர்திரு ஆறுமுகம் இராசரத்தினம் [ சைவமணி ] அவர்களின் மறைவு சைவ உலகிற்குப் பேரிழப்பாகும். 01.10.1928 அன்று ஆறுமுகம் தம்பதியினரின் மகனாக இணுவிலில் பிறந்த இவர் கல்வியில் மேன்மை பெற்று, அரச பணியில் பிரதி கணக்காளர் நாயகமாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இலண்டனில் தமது மகளுடன் வாழ்ந்த போதும், பிறந்த மண்ணின் பெருமைக்கு உரியவராக சமயப் பொதுப் பணிகளில் தம்மை ஈடுபடுத்தி வந்தார்.

'இணுவில் ஒலி' அதனைத் தொடர்ந்து வந்த 'தாயக ஒலி' ஆகியவற்றில் தமது ஆக்கங்களை வெளிவரத் தந்துதவிய பெருமகனார், அதன் வளர்ச்சியில் காட்டிய ஆர்வம் அளப்பரியது. 13.11.2015 அன்று தமது எண்பத்தேழாவது வயதில் இலண்டனில் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் மறைவால் துயருறும் அவர் தம் குடும்ப உறுப்பினர்களுக்கும், உறவினர், நண்பர்களுக்கும் 'தாயக ஒலி' தனது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது. ●

---



ஈழத்தின் ஈடிணையற்ற பெருமைக்குரிய வயலின் வித்துவான், இசைஞான திலகம், கலாபூஷணம் **உ.இராதாகிருஷ்ணன்** அவர்களின் மறைவு இசையுலகிற்குப் பேரிழப்பாகும். வயலினை உயிராக நேசித்த பெரும் மேதை இணுவில் மண்ணின் மைந்தனாவார்.

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் வயலின் வாசித்துக் கொண்டிருந்த போதே தமது இறுதிக் கணங்களைச் சந்தித்தமை அவரது இசை வாழ்விற்குக் கிடைத்த பேறு என்றே பலர் இயம்புகிறார்கள். எப்படி இருந்த போதிலும் அவரின் மறைவு இசை உள்ளங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. ●

கவிதை

# புத்தாண்டுச் சிந்தனை

மூவினமும் இன்று மூச்சுவிடக் கிடைத்துள்ள
சந்தர்ப்பம் இதனைத் தவறவிடக்கூடாது!

இத்தரையிலுள்ளவளம் எல்லாம் நிறைந்திருந்தும்
புத்தரையும் யேசுவையும் புனிதநபி அவர்களுடன்
சித்தர்குழாம் சூழ்ந்திருக்கும் சிவபெருமான் உட்பட
அத்தனை இந்துமத ஆண்டவர்கள் அனைவருமே

வந்திக்கப்படுகின்ற மதங்கள் பல இருந்தும்
சிந்திக்க மாட்டாமல் சில பேர் நடக்கின்றார்!
தந்திரங்களை மீண்டும் தக்க வைக்கப் பார்க்கின்றார்!
மந்திரத்தால் மாங்காய் விழவைப்போம் என்கின்றார்!

இலங்கையினை அனுமான் எரித்ததனால் மக்கள்
கலங்கியதைப் போன்றதொரு காலம் வரட்டுமெனக்

காவல் இருக்கின்றார்! கல்லை விட்டெறிவதற்கு
ஆவல் மிகக்கொண்டு ஆராய்ச்சி செய்கின்றார்!

சிதைத்து அழித்துவிடத் திடசங்கற்பம் கொண்டார்!
இதற்கெல்லாம் இனியிங்கு இடமில்லை என்பதனைக்

காட்டுவதற்கே நாங்கள் களத்தில் குதித்துள்ளோம்!
நாட்டின்கல் விப்பயிர்க்கு நாற்றுமேடைபோடுகிற
வீட்டுக்கு வந்து வெளிச்சத்தை ஏற்றி வைத்து
பூட்டியதைத் திறந்து பூசை செய்ய முயல்கையிலே
ஆட்டிப் படைத்தற்கு ஆள்விட்டுப் பார்க்கின்றார்
மூட்டைப்பூச்சிகள் போல் முதுகில் கடிக்கின்றார்!
கூட்டுறவாய்க் கல்விக் கொள்கை அடிப்படையில்
நீட்டும் கரம்பற்றும் நிலைப்பாட்டில் இருக்கையில்
மாட்டிவிட்டு வேடிக்கை பார்த்து மகிழ்தற்கே
கேட்டுப் பிறந்ததுபோல் கிறுக்கர் பலர் இருக்கின்றார்!

எப்படியார் நினைத்தாலும் இழிமொழிகள் சொன்னாலும்
அப்படியாய்ப்பட்டவரை அப்புறமாய் ஒதுக்கிவிட்டு

நல்வழியில் செல்வோம்! நன்னோக்கம் மனங்கொள்
வோம்.

செம்மொழிக்கு நேர்ந்த சீரழிவை மாற்றுகின்ற
அத்தனை வழிகளையும் அச்செட்டாய் அறிந்து வரும்

புத்தாண்டில் எண்ணத்தைப் புனர்நிர்மாணஞ் செய்வோம்.
தானுண்டு வேலையுண்டு என்னும்தன் னலத்தோடு
ஏனென்றும் கேட்காமல் என்னவெனப் பார்க்காமல்
மீனுண்ட கொக்குப்போல் விக்குவதால் பயனுண்டா?
தேனுண்ட வண்டாகித் திருப்தியுற வேண்டாமா?

ஆயிரம் மொழிநிலவும் அயல்நாட்டைப் பார்த்தேனும்
பேயர்கள் போலப் பேசிக்கொண்டிருக்கின்ற

இரண்டே மொழி பேசும் இலங்கையர்கள் திருந்தாரா?
முரண்டு பிடிப்பதனால் ஏற்பட்ட முடிவைப் போல்

இனியும் வராமல் இருக்கவொரு வழிபார்ப்போம்
குனியும் நிலை ஏற்படுத்தும் கொள்கையினைத் தள்ளிவிட்டு

வேற்றுமையைப் பெரிதாக்கி வெறுப்பை வளர்க்காமல்
நேற்று நடந்த நிகழ்ச்சிகளை யேநினைத்து
சீற்றத்தின் பாற்பட்டுச் சிந்தனையைக் குழப்பாமல்
கூற்றுவனைமீண்டும் கூப்பிட்டுப் பார்க்காமல்
ஆற்றலுடன் எங்கள் அன்பைப் பயன்படுத்திக்
காற்று நுழையாத இதயங்களில்கூடத்
தோற்றும் படியாக ஏற்ற விதமாகக்

கருத்தை நுழைக்கின்ற கலையைப் பயன்படுத்தி
வருத்தியவர்கள்கூட வணங்கும்நிலைக் காளாக்கி

உண்மை நிலையை உணர்த்தப் புறப்படுவோம்!
அண்மையிலே நிச்சயம்எம் ஆசை நிறைவேறும்,

கலகம் இனிவேண்டாம் கருத்தொற்றுமை வேண்டும்.
விலகியிருக்காதீர்! வெறுங்கனவு என்றுசொல்லிப்

பிதற்றித்திரியாதீர்! பிரியமிகு சோதரரே!
உதட்டினிலே ஒன்றும் உள்ளத்திலே வேறொன்றும்

வைத்திருக்க வேவேண்டாம்! வாய்திறந்து பேசுங்கள்!
கைத்திருக்கும் காயும் கனியாகப் பழக்குமொரு

காலம் வரும்! இதில் கடுகளவும் ஐயமில்லை!
மேலும் நலம் பெருகும் விரைந்து.

- அக்கரைச்சக்தி

சுந்தரம்

# சிரித்து வாழ வேண்டும்

நாங்கள் படிக்கும் காலத்தில் எங்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களை வாத்தியார் என்றுதான் அழைப்போம். வல்லிபுரம் வாத்தியார் எங்கள் வகுப்புப் பிள்ளைகளில் மிகவும் அன்புகொண்டவர். அவர் தமிழ், கணிதம் இரண்டு பாடங்களிலும் அக்கறை காட்டிச் சொல்லித் தருவார். அவர் பாடம் கற்பிக்கும்போது மாணவர்கள் பாடத்தில் அக்கறையுடன் இருக்க வேண்டும் என்பதில் கண்டிப்பு மிகுந்தவர்.

ஒருநாள் அவர் கற்பிக்கும் நேரத்தில் எனக்குப் பக்கத்திலிருந்த மாணவன் வாத்தியாரை கேலிச் சித்திரமாக வரைந்து எனக்குக் காட்டினான். எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. சிரித்துவிட்டேன். வாத்தியார் நான் சிரிப்பதைக் கண்டுவிட்டு ஏன் சிரிக்கின்றீர் என்று கேட்டார். உண்மையைச் சொன்னால் பக்கத்தில் இருக்கும் மாணவன் வாத்தியாரிடம் அகப்பட்டுக் கொள்வானே என்று எண்ணி "சிரித்து வாழ வேண்டும். என்று சின்னத்தம்பி வாத்தியார் சொல்லித் தந்தவர். அந்த ஞாபகம் வந்தது. சிரித்தேன்." என்றேன்.

நீர் பாடத்தைக் கவனிக்காமல் சின்னத்தம்பி வாத்தியார் சொல்லித் தந்ததை நினைத்துக் கொண்டிருக்கிறீர். வகுப்புக்கு வெளியாலை போய் நில்லும் என்ற அவரின் கண்டிப்பான உத்தரவை ஏற்று வெளியில் போய் நின்றேன்.

தனது வகுப்பறையில் நின்று வெளியில் நிற்கும் என்னை அவதானித்த சின்னத்தம்பி வாத்தியார் என்னிடம் வந்து காரணத்தை வினவியபோது நடந்த உண்மையைச் சொன்னேன். சின்னத்தம்பி வாத்தியார் ஏதாவது ஆறுதல் வார்த்தை சொல்லுவர் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் சொன்ன விடயம் தூக்கிவாரிப் போட்டது.

"மகனே! பொய் சொல்லக்கூடாது பாப்பா என்று படிக்கவில்லையா?" – என்றாரே பார்க்கலாம்.

அடுத்த நாள் வல்லிபுரம் வாத்தியார் வகுப்புக்கு வருவதற்கு முன் கரும்பலகையில் அவரது கேலிச் சித்திரப் படத்தை ஒட்டிவிட்டார்கள். வல்லிபுரம் வாத்தியார் அதைப் பார்த்து சிரித்துவிட்டு கேலிச்சித்திரம் கீறிய மாணவனை அழைத்து "நீர் வருங்காலத்தில் சிறந்ததொரு கேலிச்சித்திர வரைஞராக வருவாய்" என்று வாழ்த்தினார்.

"கேலிச் சித்திரங்கள் சிரிக்க வைப்பது மட்டுமல்லாமல் ஆழ்ந்த கருத்துக்களையும் வெளிப்படுத்து வனவாகவும் இருக்கும்" என்று சொன்னார்.

மாணவர்கள் எல்லோரும் வல்லிபுரம் வாத்தியாரின் கேலிச்சித்திரத்தைப் பார்த்துச் சிரிக்க வாத்தி யாரும் சிரித்தார்.

எனக்கு மட்டும் அந்த நேரம் சிரிப்பு வரவில்லை. மௌனமாக இருந்தேன்.

வல்லிபுரம் வாத்தியார் என்னைப் பார்த்து "சிரித்து வாழவேண்டும்" என்றார்.

வெப்பியாரத்தால் எனக்கு அழுகை வந்துவிட்டது. எல்லோரும் சிரிக்கிறார்கள். நான் மட்டும் அழு கின்றேன்.

•

உத்தமன்

# வாழைப் பழமும் தோடம்பழமும் பூனையும் புட்டுக்குழலும்

தேர்தல் பிரசாரத்திற்காக உலுத்தர் கந்தவனம் வீட்டுக்கு வந்தவர்கள் "அப்பு நீங்கள் எங்கட கட்சிக்குத்தான் வாக்குப் போடவேணும்" என்றனர்.

"தம்பியவை நான் எப்பவும் உங்கட கட்சிதானே! எப்ப மாறிப் போட்டனான்? இந்தக் கந்தவனம் சொன்னால் சொன்னதுதான். மாறமாட்டான்."

"அதுதானே, கந்தவனம் அப்புவைப் பற்றி எங்களுக்குத் தெரியாதோ. அப்பு இந்தமுறை 5 ஆம் இலக்கத்திற்கும் 9 ஆம் இலக்கத்திற்கும்தான் போடுங்கோ. என்ன ஞாபகமிருக்குத்தானே!"

"ஒரு ஆள் மூண்டு பேருக்குப் போடலாம் எண்டு கோயிலடியில கதைச்சவ. நீங்கள் இரண்டு பேர் எண்டு சொல்லிறியள். எது சரியடா தம்பியவை.?"

"நீங்கள் சொல்கிறதும் சரிதான் அப்பு. விகிதாசார வாக்கு முறையில் நீங்கள் மற்றவருக்கும் போட்டால் அவருக்கு வாக்குக் கூடி எங்கட இரண்டு பேரும் எம்.பி.யாக வரமாட்டினம். அதனால்தான் இரண்டு பேருக்கு மட்டும்தான் போடச் சொன்னனாங்கள்."

"அது சரி. மற்றவரும் எங்கட கட்சிதானே என்றபடியால்தான் கேட்டனான்."

"ஓம் அப்பு. மற்றவர் வேற இடத்து ஆள். நீங்கள் எங்கட பிரதேசத்து ஆட்களுக்கு மட்டும்தான் போடவேண்டும்."

"எனக்கேன் உந்த விடுப்புக் கதை வேண்டிக்கிடக்கு. நீங்கள் சொல்லுகிற இரண்டு பேருக்கும் போடுகிறன். சந்தோஷம்தானே."

"சரி அப்பு. நாங்கள் வாறம் ஐந்தையும் ஒம்பதையும் மறக்க வேண்டாம்."

தேர்தல் தினத்தன்று காலை 6.00 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்ட கந்தவனத்தார் வாக்களிப்பு நிலையத்திற்குப் போனபோது, அங்கு கியூவில் ஆட்கள் நிற்பதைக் கண்டு அவர்களுடன் சேர்ந்து கியூவில் நின்றார்.

7.00 மணிக்கு வாக்களிப்புத் தொடங்கியது. 7.30 மணியளவில் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்றவர் வாக்காளர் அட்டை, அடையாள அட்டை இரண்டையும் காட்டப் பெயர் வாசிக்கப்பட்ட பின் கைவிரலில் மைபூசி, வாக்குச் சீட்டைக் கொடுத்தார்கள்.

ஐந்து, ஒன்பது என்று பாடமாக்கியபடி சென்றவர் 5 ஆம் இலக்க சுயேச்சைக்குழுவுக்கும், 9 இலக்கச் சுயேச்சைக் குழுவுக்கும் புள்ளடி போட்டபின், வாக்குச் சீட்டை உரிய பெட்டியில் போட்டுவிட்டு வெளியில் வந்து என்ர வேலையைச் சரியாகச் செய்துபோட்டன் என்று பெருமூச்சுவிட்டார் கந்தவனத்தார்.

வீட்டுக்கு வரும் வழியில், அன்று வாக்குக் கேட்டு வந்தவர்களைக் கண்டுவிட்டு, "தம்பியவை நீங்கள் சொன்ன மாதிரி 5 க்கும் 9க்கும் நேரே புள்ளடி போட்டுவிட்டு வாறன்".

"புள்ளடி போட்ட இலக்கங்கள் சரி, எங்கட கட்சிக்காரர்கள் பூனைச் சின்னத்திலல்லே கேட்டவர்கள்."

"உங்கட கட்சிச் சின்னம் புட்டுக்குழல்தானே. ஏன் வேறு கட்சிக்காரர் சின்னத்தில கேட்டனிங்கள். நீங்களும் அடிக்கடி கட்சி மாறுகிறீர்களோ? அதை விளக்கமாக நீங்கள் சொல்லவில்லை. புட்டுக்குழல் சின்னத்தைத் தேடினேன் இல்ல. அதனால 5 ஆம் இலக்க வாழைப்பழச் சின்னத்திற்கும் 9 ஆம்

இலக்க தோடம்பழச் சின்னத்திற்கும் வடிவாகப் புள்ளடி போட்டுவிட்டு வந்தனான்."

"புள்ளடி போட்டனிங்கள் ஒரு சின்னத்துக்கு மட்டும் போட்டிருக்கலாமே"

"5க்கும் 9 க்கும்தானே போடச் சொன்னீங்கள். அதுக்குத்தான் போட்டனான். இந்தக் கந்தவனம் சொன்ன வாக்கை மாற்றமாட்டான் கண்டியளோ".

"உங்கட வாக்கு ஒருவருக்கும் பிரயோசனமில்லாமல் போச்சு. நீங்கள் போட்ட வாக்குச் சீட்டை வாக்கு எண்ணேக்க நிராகரித்துப் போடுவினம்."

"தம்பியவை இந்தக் கந்தவனம், வாக்கை நிராகரித்தால் சும்மா இருக்கமாட்டான். தேர்தல் கொமிஷனரிடம் போய் என்ர நியாயத்தைச் செல்லி வாதாடுவன். அது சரிவராவிட்டால் சுப்பிறீம் கோட்டுக்கும் கொண்டு போவன். இந்தக் கந்தவனத்தை உலுத்தன் என்று நினைச்சுவிட்டினம் என்றாரே பார்க்கலாம்.

| |
|---|
| விகிதாசாரத் தேர்தல் முறையில் அநேகமான முதியவர்களுக்கு விபரம் சரியாகத் தெரியாததனால் ஏராளமான வாக்குகள் நிராகரிக்கப்படுகின்றன. அதேவேளை வேட்பாளர்கள் அடிக்கடி சின்னங்களை மாற்றுவதனால் இத்தகைய நிலைமைகள் ஏற்படத்தான் செய்யும். புட்டுக்குழல் சின்னக்காரர் பூனைச் சின்னத்தில் கேட்டால் குழப்பம் வரத்தான் செய்யும். |

## உங்கள் விருந்து

# தூண்டுகோலாகவிருக்கும் 'தாயக ஒலி'



இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிட்டுள்ள தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் தாயக ஒலி எனும் தலைப்பிலான சஞ்சிகை 48 பக்கங்களையும் திறமான பல அத்தியாயங்களையும் கொண்டு வெளிவந்துள்ளது.

சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் த.சிவசுப்பிரமணியம் மற்றும் மதியுரைக்குழு, சஞ்சிகைக்குழு, வெளிநாட்டு பிரதிநிதிகளின் ஒத்துழைப்பின் கீழ் எம் கரம் சேர்ந்துள்ள தாயக ஒலி தலைப்பிற்கேற்றாற் போல பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையிலும், திறமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், முகப்பட்டையினை கொண்டுள்ளமை சிறப்பு. சமயம், சமூகம், அரசியல் பின்னணி, கலைநிகழ்வுகள், இலக்கியம், நேர்காணல்கள் என சஞ்சிகையில் சகல விடயங்களுக்கும் முன்னுரிமை அளித்துள்ளமையும் வரவேற்கத்தக்கதாய் உள்ளது.

மக்கள் எதிர்கொள்ளும் அவலங்கள் தீர்க்கப்படுமா? எனும் ஆசிரியரின் பேனா முனையிலிருந்து செதுக்கப்பட்டுள்ள கட்டுரை சமுதாய சிந்தனையை பிரதிபலிப்பதாய் உள்ளதோடு, வினாவுக்கான தீர்வுகள் எட்டப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துவதாய் உள்ளது. மேலும் வாகரை வாணனின் ஒரு சூரியனின் அஸ்தமனம் எனும் கவிதை சிறப்பான மொழிநடை கையாளுகையோடு வடிக்கப்பட்டுள்ளது. வித்தியாசமான தலைப்பு கையாளுகையும் சஞ்சிகையின் நுட்பத்திறனுக்கு வலு. அத்தோடு மரபைப் பேணும் உடப்பு திரௌபதை ஆலயம், ச.முருகானந்தனின் நெடுஞ்சாலைக் கனவுலகும் கிராமத்துக் குடிசைகளும் சிறுகதை, மொழிவரதனின் ஒரு கவிதைக் கீறல் எனும் கவிதை என்பன பழமையின் சுவடுகளை ஒரு கணம் புதுமைக்குள் புரட்டிப் பார்க்க வைத்துள்ளது. மனிதாபிமானம் கிணற்றில் விழுந்த நிலவைப் போல தேடுவாரற்று கிடக்கும் இவ்வுலகில் மனநோயாளர்களும் மனிதர்களே எனும் கட்டுரை ஒரு விழிப்புணர்வு தொடரே என்றால் மிகையன்று. மேலும் தாயக ஒலி சஞ்சிகை குறித்த வாசகர்களின் கருத்துக்களைப் பார்க்கும்போது சஞ்சிகையின் முக்கியத்துவம் புலப்படுகிறது. தூண்டாமணி விளக்கென்றாலும் ஒரு தூண்டுகோல் அவசியம். அதுபோல எழுத்தாளர்

களை ஊக்குவிக்கும் இதுபோன்ற முயற்சிகள் தொடர்ந்து காலத்தின் கைகளில் கிடைக்க வேண்டும் என வாழ்த்துகிறோம்.

ஆர்.ஜூஷா, 'சங்கமம்'.


## நிலத்தையும் புலத்தையும் இணைக்கும் 'தாயக ஒலி'

தாயக ஒலி இரு திங்கள் ஏட்டின் கார்த்திகை - மார்கழி இதழ் வெளி வந்துள்ளது. சைவத் தமிழ்ப் பண்பாட்டினை எடுத்துக் கூறும் விதமான அழகிய அட்டைப் படத்தை கொண்டமைந்த இச்சஞ்சிகை யானது, ஆழமான ஜனரஞ்சகமான பதிவுகளினூடாக தன் வாசகர்களைக் கவரும் விதத்தில் அமை யப் பெற்றுள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களின் பாதுகாப்பற்ற சமூக நிலையும், மலையக மக்களின் அன்றாட அவலங்களையும் முன்னிறுத்தி பல்வேறு விதமான தீர்க்கப்படக்கூடிய விடயங்கள் குறித்ததான தன் அவதானத்தை ஆசிரியர் பதிவிட்டுள்ளார். மேலும் அரசியல், சமூக, இலக்கிய பக்கங்கள் திறமைமிகு மூத்த, இளைய எழுத்தாளர்களின் கைவண்ணத்தில் அமையப் பெற்றுள்ளன. விசேட விதமாக இணு வில் ஆர்.எம்.கிருபாகரனின் 'இந்த மண்ணும் எங்கள் சொந்த மண்தான்' நாவலை முன்னிறுத்தி பேராசிரியர் வ.மகேஸ்வரனால் எழுதப்பட்ட நூல் விமர்சனம் இச்சஞ்சிகையின் சிறப்புக்கு வலுச்சேர்க் கும் வகையில் அமையப் பெற்றுள்ளது. ஆகவே, இச்சஞ்சிகையின் அனைத்து அத்தியாயங்களும் சகல சாரரையும் வாசிக்கத் தூண்டும் வகையில் அமையப் பெற்றுள்ளது.

ஜான்ஸி,'தினக்குரல்'

## 'தாயக ஒலி' இரு திங்கள் ஏடு



இரு திங்கள் ஏடான தாயக ஒலியின் 2015 புரட்டாதி - ஐப்பசி மாத இதழ் தமிழை வளர்த்த பெருந்தகைகள் மற்றும் இலக்கியப் படைப்பாளிகளின் புகைப் படங்களை முன்னட்டையில் தாங்கியதாக வெளிவந்திருக்கிறது.

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறு வகமும் இணைந்து வெளியிடும் தாயக ஒலி இம்முறையும் கனதியான பல் வேறு படைப்புக்களைத் தாங்கி வந்திருக்கிறது.

அண்மைக் காலங்களில், எமது நாட்டில் மரணிப்பவர்களின் தொகை அதி கரித்து வருவதனையும் அதற்கான காரணங்களை ஆராய்வதில் வாழப் பிறந்த சமுதாயம். வாழும் காலம் வரை வாழ்ந்து இயற்கையெய்துதலே மேல் என்ற கருத்தினையும் வாசிப்போர் மனதில் விதைக்கின்றது ஆசிரியர் தலையங்கம்.

முதல் கட்டுரையாக ஆளுமைமிக்க புனை கதைப் படைப்பாளியான இரா. உதயணனின், பூர் வீகம் தமிழ் இலக்கியப் பங்களிப்பு என அப்படைப்பாளியின் பன்முகத் தன்மை வாசகர்களுக்கு விரி வாகத் தந்திருக்கின்றார். சஞ்சிகை ஆசிரியர் தம்புசிவா.

ஈழத்தின் முதல் பெண் வரலாற்று நாவலாசிரியையான திக்கம் சிவயோகமலரையும் அவரது ஆக்க இலக்கியங்கள் பற்றியும் அவரது இலக்கியப் பங்களிப்பினை நினைவு கூர்வதாயும் அமைந் துள்ளது த.வசந்தன் எழுதியுள்ள கட்டுரை. அரங்கம் என்ற புதிய பகுதியில் கலைஞர் கலைச் செல்வ னின் 'மனித ஆத்மாவைத் தோடவும், தரிசிக்கவும்' எனும் படைப்பு இலங்கையின் நாடகத்துறையின் வளர்ச்சி பரிமாணம் என்பனவற்றை உள்ளடக்கியதாய் அமைந்திருக்கின்றது. 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' எனும் லண்டன் அருந்தவமலரின் சிறுகதையும் நிச்சயம் பாராட்டப்பட வேண்டி

யதே. வெளிநாட்டு மாப்பிள்ளையை திருமணம் முடிக்கும் எம் பெண்களில் அனேகரின் நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாய் அமைகின்றது அச்சிறுகதை.


வளர்ந்தவர்களுக்கு மாத்திரமல்லாமல் சிறுவர்களுக்கான ஆக்கங்களையும் தாங்கி வந்திருக்கின்றது இம்முறை வெளிவந்துள்ள தாயக ஒலி.

நாவற்குளம் நா.தியாகராசாவின் 'மிருகாபிமானம்' நிச்சயம் சிறுவர்களுக்கு விருந்தாயமையும். இணையத் தளத்தில் காணக்கிடைக்காத சின்னஞ்சிறு செய்திகளும் வாசிப்புக்கு வரமாய் அமைகின்றன.

'தினகரன்' - வாரமஞ்சரி
**(13.09.2015)**

---

## இலக்கியப் பணியாற்றும் தாயக ஒலி



தங்களால் எமது பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட தாயக ஒலி ஏடு 18 எமக்குக் கிடைக்கப் பெற்றது. தங்கள் இலக்கியப் பணிகள் தொடர எமது வாழ்த்துக்கள். கடந்த முறை வெளியான தாயக ஒலி ஏடு 17 இல் எமது பிரதேச செயலகத்தால் வெளியிடப்பட்ட 'பண்பாட்டு மலர்' பற்றிய கண்டோட்டம் எமது இலக்கிய முயற்சிகளுக்கு ஆக்க பூர்வமான பங்களிப்பைச் செய்துள்ளது.

இலைமறை காயாக இருக்கும் இலக்கியத் தகவல்களையும் இலக்கியவாதிகளையும் வெளிக் கொண்டு வரும் தங்கள் முயற்சிகள் மேலும் தொடர எமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எமது ஆக்கங்களுக்குக் களம் வகுத்து வழங்கும் தங்கள் முயற்சிகள் தமிழ் உள்ளவரை தழைத்தோங்க வேண்டும் என இறைவனை ஆசிக்கிறோம்.

வி.பிரதீபன், பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு.

---

## சர்வதேச தரத்தில் 'தாயக ஒலி'



இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும் 'தாயக ஒலி' எம் கரம் கிடைக்கப்பெற்றது. மிக்க மகிழ்வடைந்தோம். தமிழை வளர்த்த பெருந்தகைகளும் இலக்கியப் படைப்பாளிகளும் அட்டைப் படத்தினை அலங்கரித்துள்ளமை 'தாயக ஒலி' இன் தனித்துவத்தை வெளிக்காட்டுகின்றது.

எமது தாயகத்தின் கலை, கலாசார முதுசொம்களையும், இலக்கியப் படைப்புகளையும் சர்வதேச ரீதியாக கொண்டு செல்லும் 'தாயக ஒலி' எம் படைப்பாளிகளுக்கு சிறந்த களம் அமைத்துக் கொடுத்துள்ளது. தரமாகவும், நேர்த்தியாகவும் இரு திங்கள் ஏடாக வெளிவரும் 'தாயக ஒலி' வாழவும் வளம் பெறவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உள்ளே ஒலிப்பவை யாவும் நன்றாக இனிப்பவை, ஆக்கபூர்வமான உள்ளடக்கங்கள், காலத்திற்குத் தேவையான கருத்துக்களை கதையாகவும், கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும் வழங்கிய 'தாயக ஒலி' குழுவினருக்கும் குறிப்பாக பிரதம ஆசிரியர் தங்களும் எமது நன்றிகளையும், பாராட்டுக்களையும் கூறுவதில் உவகையடைகின்றோம்.

கதிரவன் த.இன்பராசா, கதிரவன் கலைக்கழகம், புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு.

## எங்கோ கேட்டவை 11

### "ஆச்சாரம்"

ஒருவர் மிகவும் ஆச்சாரம் பேணுபவர். மிகவும் தேர்ந்து, தேர்ந்து ஒரு ஆச்சாரம் மிகுந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

ஓரிரு ஆண்டுகள் அருமையாகத் தாம்பத்திய வாழ்வு நடைபெற்றது. ஒரு தினம் – ஒரு விரத திருநாள். வழமை போல் அருகிருந்து வாழை இலையில் உணவருந்தினார்கள். என்ன பரிதாபம்? மனைவியின் ஒரு அரிசிப்பாகு துப்பித் தவறி ஆச்சாரம் மிகுந்த கணவரின் வாழை இலையில் வீழ்ந்து விட்டது. வீரிண்டு எழுந்தார் ஆச்சார்யவாதி – வீட்டை விட்டகன்றார்.

ஓடினான்; ஓடினான்; ஊரின் எல்லைக்கே ஓடினான். என்ன இருந்தாலும் மனிதன்தானே! பல மைல் தூரம் கடந்த பின் பசி வயிற்றைக் கவ்வியது. பசி மயக்கத்தில் மயங்கி ஒரு வீட்டின் திண்ணையில் சாய்ந்தார்.

அந்த வீட்டு இல்லாள் இவரது நிலைமை அறிந்து வீட்டிற்குள் அழைத்து உணவு பரிமாற ஆரம்பித்தார். இவரோ சிக்கலான பேர்வழிதானே! 'ஆச்சாரம்' பற்றி யோசித்தார்.!

அந்த வீட்டு அன்னையோ வாழை இலை ஒன்றைக் கடுமையாகக் கழுவிக் கொண்டு வந்து உணவு பரிமாறினார். ஆகா! அருமை! பசி தீர்ந்தது! உணவு அருந்தி முடித்து, வாழை இலையை வீசி எறியப் புறப்பட்டார்.

உணவு கொடுத்த அந்த அம்மா " ஐயா இந்த இலையை எறியாதையுங்கோ – அந்த இலை ஒன்றுதான் எமது வீட்டில் உள்ளது. அந்த இலையில்தான் எனது கணவர் சாப்பிட்டு, நான் சாப்பிட்டு, இப்போது உங்களிடம் தந்தோம்!" என்றார்.

ஆச்சாரம் பேணியவருக்கு குமட்டிக் கொண்டு வந்தது. சாப்பிட்ட அனைத்தையும் வாந்தி எடுத்தார்.

மீண்டும் ஓட்டம் பிடித்தார். – சாப்பாடும் வேண்டும் ; ஒன்றும் வேண்டாம் என்று தீர்மானம் எடுத்தார்.

எனினும் குமட்டல், வயிற்றெரிச்சல் அவரைக் குழப்பிக் கொண்டே இருந்தது.

வழியில் ஒரு பாட்டியைச் சந்தித்தார். பாட்டி வலியவே "என்ன குமட்டி வாந்தி எடுக்கிறீர்களா? இந்தாங்கோ ஒரு பாக்கு சாப்பிடுங்கோ." என்று பாக்கு ஒன்றைக் கொடுத்தார். இவரும் குமட்டலுக்கும், வாந்திக்கும் பாக்கைச் சுவைத்தால் நல்லாயிருக்குமென விரும்பி பாக்கைக் கடித்துச் சுவைத்தார்.


பாட்டியே பார்த்து இரசித்தார். பாக்கைச் சாப்பிட்டு மிகுதியைத் துப்பினார். பாட்டி இவரது முதுகில் தட்டிப் பாராட்டி நான் நான்கைந்து நாட்களாக இந்தப் பாக்கைக் கடித்து உடைக்க முடியவில்லை. நீ ஒரு நிமிடத்தில் பாக்கைக் கடித்து சாப்பிட்டு விட்டாயே என்றாரே பார்க்கலாம்.


ஆச்சார மனிதன் மயங்கி விழுந்தான்!


– இணுவை ரகு


# பென்சில் ஓவியர் - யோகா















கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது தெஹிவளையில் வசித்து வருபவருமாகிய திரு.கே.யோகேந்திரன் சிறு வயது முதல் ஓவியத்தில் ஈடுபாடு கொண்டவராகவும் எழுத்துறையில் ஆர்வ முள்ளவராகவும் இருந்ததுடன் இவரது ஓவியங்கள் மற்றும் ஆக்கங்கள் இலங்கையில் பிரபல தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. பாடசாலை நாட்களில் பல ஓவியப் போட்டிகளில் பங்குபற்றி பல பரிசுகளைத் தனதாக்கிக் கொண்டுள்ளார். அத்தோடு ஓவியக் கண்காட்சிகளையும் நடத்தியுள்ளார்.

இலங்கையில் பிரபல விளம்பர நிறுவனத்தில் 32 ஆண்டுகள் கலை இயக்குநராகவும், விளம்பரங் களுக்குத் தமிழ்மொழி மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்ற பின் வெள்ளவத்தை யிலுள்ள பிரபல விளம்பர நிறுவனத்தில் கடமையாற்றுகிறார். அத்தோடு PENCIL/ PASTEL மூலம் புகைப்படங்களை வரைந்து கொடுக்கும் திறமை கொண்டவர். பல உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரபலங் களின் ஓவியங்களை வரைந்து கொடுத்து அவர்களது பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். வெள்ளவத்தை யில் இயங்கும் FLEX GRAPHIC நிறுவனத்தின் மாதமொரு முறை வெளிவரும் FLEX அருள் ஆன் மீக இதழின் ஆசிரியருமாவார். மூன்று மாதங்களுக்கொரு முறை வெளிவரும் FLEX GUIDE இத ழின் ஆசிரியரும் இவரே. நேரம் கிடைக்கும் வேளைகளில் பல பாடசாலை சிறுவர், சிறுமியர்களுக்கு ஓவியம் கற்று கொடுப்பதுடன் பல சமூக சேவைகளிலும் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் திறமையைத் 'தாயக ஒலி' பாராட்டி வாழ்த்துகிறது.

**தொடர்புகளுக்கு : 075 441 9019**

நூல்விமர்சனம்

**வசந்தி தயாபரன்**

# வீணைமைந்தனின் 'தொலைந்துபோன வசந்தகாலங்கள்' பற்றிய சில சிந்தனைகள்





தனிமனிதன் ஒருவனின் உணர்வுகளின் வெளிப்பாடு அவனது ஆத்மாவுக்கு ஆறுதல் அளிப்பதாக அமைவதில் வியப்பில்லை. ஆனால், அதுவே ஒரு கலைவடிவமாக மாறுகையில், வேறு சிலரது உள்ளங்களில் இரசவாத மாற்றங்களை நிகழ்த்தும் ஆற்றலை அதுபெற்றுக்கொள்கிறது. பசுமையான நினைவுகளை உயிர்ப்பிப்பது மட்டுமன்றி, இரணமாகக் கிடக்கும் ஆறாத காயங்களையும் அது பிறாண்டுகிறது. எனினும் உணர்வுகள் சாகமறுப்பவை. அதிலும் புலம்பெயர்ந்து வாழ்வோருக்குச் சொந்தமானதோ,உரத்துச் சொல்லவேண்டிய ஓராயிரம் மனப்பதிவுகள்.

'தொலைந்துபோன வசந்தகாலங்கள்' நூலைத் தந்த வீணைமைந்தனும் அத்தகைய ஒருவர். அவரது பிறந்தமண், அங்கு அவர் கற்றுக்கொண்ட அனுபவங்கள், மறக்கமுடியாத மனிதர்கள், அம்மண்ணின் மைந்தர்கள் என விரிகின்ற வாழ்வியல் நூல் என்று அந்நூலை வரையறுக்கலாம். பிறிதொரு கோணத்தில், யாழ்.மைந்தன் ஒருவனது நாட் குறிப்பேடு அல்லது சுயசரிதையின் ஒருபாகம் எனவும் அதுதோற்றம் காட்டுகிறது. எனினும், அதன் உள்ளடக்கம் கற்பனை கலக்காத உண்மையை மட்டுமே பேசுகின்றது என்பதில் மட்டும் எவ்வித மாற்றுக் கருத்துக்களும் இல்லை.

தனது வாழ்வின் கணங்களை,கலையழகோடு புனைவிலக்கியம் போன்று படைத்திருப்பது நூலாசிரியரது சிறப்பு. அவர் கண்டும் கேட்டும் வாழ்ந்தும் அனுபவித்த ஒரு காலத்தைய வாழ்வின் ஆவணமாக 'தொலைந்துபோன வசந்தகாலங்கள்' திகழ்கிறது. போலிப் படாடோபங்கள், வார்த்தை விளையாட்டுக்கள் அற்ற அவரது எழுத்து நடையில் ஒருவித அறப்பண்பு இழையோடக் காண்கின்றேன். இன்றைய தலைமுறை அறியாத, சென்ற தலைமுறை மெல்ல மெல்ல மறந்து கொண்டிருக்கின்ற ஒருகாலகட்டத்து வாழ்க்கை அந்நூலினூடாக உயிர் பெற்றிருக்கிறது. அதிலும் காங்கேசன்துறையின் அன்றைய வாழ்வு சிறப்பாகத் துலக்கம் பெற்றிருக்கிறது. காங்கேசன்துறையில் பிறந்து வளர்ந்த ஒருவர்,அரைநூற்றாண்டுக்கு முன்னான யாழ்ப்பாணம் பற்றியும், தனது ஊர் பற்றியும், அன்றைய சமூக நடப்புக்கள் பற்றியும் எழுதுவதன் மூலம் எம்மைக் கடந்த காலத்திற்கு அழைத்துச் செல்ல முயல்கிறார். அவரது எழுத்தினூடே நாம் எமது பண்பாட்டு அசைவியக்கம் குறித்த வரலாற்றுப் பார்வை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளலாம்.

அன்றைய பாடசாலை மாணவர்கள், வாலிபர்கள், முதலியோரின் இரசனைப் போக்குக் குறித்த சுவையான தகவல்களை இந்நூல் சொல்கிறது. தொலைக்காட்சியின் ஆக்கிரமிப்பு இல்லாத அந் நாட்களில், அவர்களது ஓய்வு நேரங்கள் எப்படிக் கழிந்தன என்பது மிகவும் சுவாரசியமாக விவரிக் கப்பட்டுள்ளது. வாசிப்பு,ரேடியோப்பாட்டு, விளையாட்டு, ஊர்ப்புழுதி அளைதல், கூத்துப்பார்த்தல், டூரிங் சினிமா முதலியன பல இடங்களில் சுவையாகப் பதிவாகியுள்ளன. வீணைமைந்தனின் ஊரான

காங்கேசன்துறைக்கே உரிய தனித்துவமான சிறப்புக்களும் வாசகரைக் கவர்வன. காங்கேசன்துறை வாடி வீடும் அங்கு வருகின்ற நடிக நடிகையர், குத்துச்சண்டை வீரர்களும் அவரது இள மனதில் ஏற்படுத்திய வியப்பும் உற்சாகமும், கடற்கரையுடன் அவர் கொண்டிருந்த தோழமையும் பிரியமும், நடிகர் எம்.ஜி.ஆரைப் பார்த்த அவரது வாலிப வயதின் ஆர்வமும் அனுபவமும் என நினைவுகள் கதையாக நீளுகின்றன. 'துறைமுகம்', 'கடலும் நிலவும்', 'அலையோடு விளையாடி' முதலிய பல அத்தி யாயங்கள், இயற்கையின் பிரமாண்டத்தின் முன் தன்னை இழந்து சொக்கிக் கிடந்த கிராமத்துப் பையன் ஒருவனது மண் மீதான காதலின் சாட்சி.

யாழ்ப்பாணத்தின் சராசரிக் குடிமகனின் ஆசைகள்,எதிர்பார்ப்புக்கள் மட்டுமன்றி அரசியல் நிலவரங்கள், ஏமாற்றங்கள், துளிர்விட்ட தொடர் மாற்றங்கள் பற்றிய தகவல்களும் நூலில் ஊடு பாவாக ஆங்காங்கே நெய்யப்பட்டிருக்கின்றன. எமது நினைவுகளில் படிந்துவிட்ட காலத்தூசி துடைப்பனவாயும், அறியாத புதிய விடயங்களை எடுத்துரைப்பனவாயும் எம் கண்முன்னே அன்றைய யாழ்ப்பாணத்தை ஓரளவேனும் மீளக் கொணர்வதில் ஆசிரியரது எழுத்துக்கள் துணை செய்கின்றன.

அன்றைய வாழ்வியல் வார்த்தெடுத்த யாழ்ப்பாண இளைஞனது நினைவு ஒரு திறந்த புத்தகமாக நம் முன் விரிகிறது. அவனுக்குத் தமிழறிவு வளரவும், தன்னினம் பற்றிய உணர்வு பிறக்கவும், தான் தவழ்ந்த மண் மீதான நேசம் பெருகவும் அந்த வாழ்வு வழிகாட்டியது. வீடும் ஊரும், சுற்றமும் நண்பரும்,ஆசிரியரும் நல்லோர் கேண்மையும் அவனைத் தாங்கிக்கொண்டன. மண்ணின் மைந்தனாக அவனை ஆதரவுடன் வளர்த்தெடுத்தன. அதேமண்ணின் மீதான வீணை மைந்தனின் அபரிமிதமான நேசம், இந்நூலை காங்கேசன்துறையினருக்கே உரிய சிறப்புக் கையேடாக நோக்கச் செய்யும் மயக்கத்தையும் ஏற்படுத்தாமலில்லை. எனினும் அவரது வாழ்வின் படிநிலை மாற்றங் களினூடு, ஒரு சமுதாயத்தின் அரை நூற்றாண்டு வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளமை போற் றத்தக்கது. யாழ் நூலக எரிப்பைப் பற்றிய அத்தியாயத்தை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறலாம். தமிழகப் பேச்சாளரது உரைகள், அறிஞர் அண்ணாவினது வழிகாட்டல்கள், மட்டுமன்றி தன்னைச் சுற்றி நடப்பன குறித்த அவரது விழிப்புணர்வுடன் கூடிய அறிகை என்பவற்றின் ஒருமித்த கலவையே வீணைமைந்தன் எனும் எழுத்தாளரின் முகிழ்ப்பு. கலைஞர் கருணாநிதியின் அன்றைய ஆளு மையைப் போற்றுவது போலவே, அவரது இன்றைய தடுமாற்றங்களைக் கண்டிக்கவும் ஆசிரியர் பின்னிற்கவில்லை. நூலெங்கும் துலங்குகின்ற வீணைமைந்தனின் எழுத்தின் நேர்மைக்கு இது ஒரு சான்றாகிறது.

அறுபதுகளில் யாழ் மண்ணில் வளர்ந்த சராசரி இளைஞன் ஒருவனுக்கு, தமிழ் மொழியின் மீதிருந்த பற்றும், பழந்தமிழ்க் கவிதைகள் மீதிருந்த நாட்டமும், தரமான வாசிப்பும் ஆசிரியரது எழுத்து நடையின் வழி நிறுவப்படுகின்றன. அவரது சுளுவான எழுத்துநடை, நீண்டகால வாசிப்புப் பயிற்சியின் பயனே. இன்று அது வலிந்து ஊட்டப்படவேண்டியதாக மாறிப்போய்விட்டது என்ற துயர் எம்மனதினைத் தொட்டுச் செல்கின்றது.

'தொலைந்துபோனவை பல, ஆனால் கலங்கரை விளக்கு உள்ளது' என்ற நூலாசிரியரின் கூற்று அடிக்கடி மனதில் வந்துபோகிறது. அந்த நினைவுடன் நூலின் பின்புற அட்டையைப் பார்க்கையில், எம்மனங்களில் ஒருபொறி தட்டுகிறது. ஆசை இராசையா என்ற அற்புதமான ஓவியர் தீட்டியுள்ள காங்கேசன்துறையின் கலங்கரைவிளக்கு எமக்குள் ஏதோ ஒரு வெளிச்சத்தைப் பாய்ச்ச விழைவதாக நாம் உணர்கிறோம்.

மனித வாழ்வின் மிகப்பெரிய சோகங்களில் ஒன்றுதான் புலப்பெயர்வு. மீண்டும் வந்தாலும், தனது

சொந்த மண்ணில் அந்நியனாக உணர்வதும், தனது ஊருக்குப் போகமுடியாமல் வெதும்புவதும் அதிலும் கொடுமை. தனது இனத்தின் வரலாற்றுச் சின்னங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றமை நெஞ்சைக் கீறிக் கிழிப்பதுவும் உண்மை. ஆயினும் நாம் வாழ்ந்த காலங்களை மீட்டெடுத்து எதிர்காலச் சந்ததிக்குக் கையளிப்பது சாத்தியமாகுமா என்பது ஒரு கேள்விக்குறி. காலம் மாற்றங்களைக் கொண்டு வருவது தவிர்க்கமுடியாதது. அந்தக் கணங்களை அதே உணர்வுச் சிலிர்ப்புடன் மீளப் படைக்க முடியாது. அந்த மறக்க முடியாத நினைவுகள் எமக்குள் பொத்தி வைத்துப் பேணத்தக்கன. எனவே தான், நூலின் பெயர் குறித்த ஒரு நெருடலும் எழுகிறது.'தொலைந்துபோன' என்பதற்குப் பதிலாக ஆசிரியரே ஓரிடத்தில் கூறுமாற்போல, 'மறக்க முடியாத வசந்தகாலங்கள்' என்று தலைப்பிட்டி ருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

புலம்பெயர் வாழ்க்கையில் பெற்றவை போலவே இழந்தவையும் ஏராளம். அதனால்தான் ஆத்மா வின் அலைவும் வலியும் அடிக்கடி பிறந்த மண்ணைத் தேடி ஓடிவிடுகின்றன. இது எமது தலை முறைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதன்று. தமது வேர்களையும் மூதாதையரின் அடையாளங்களை யும் தேடிப்பயணிக்கும் புதிய தலைமுறையை இன்றைய உலகில் காண்கிறோம். அந்த நீண்ட நெடும் பயணத்தில் எமது சந்ததியும் இணைந்து கொள்ளும். அவர்களுக்கு சிறந்ததொரு ஆவணமாகவும் கையேடாகவும் பயன்படும் வகையில் வீணைமைந்தனின் நூல் எளிமையான, சுவையான தமிழ் நடையில் எம்மை வந்தடைந்திருக்கிறது. அதுகாட்டும் ஒளியில் தமிழ்ச் சந்ததி தாம் தொலைத்தவற் றைக் கண்டடையும் என்ற நம்பிக்கையை'தொலைந்துபோன வசந்தங்கள்' ஏற்படுத்தியுள்ளது. ●

---

## அறிந்தவையும் தெரிந்தவையும்

# பிரித்தானியாவை நீண்ட காலம் ஆட்சி செய்த மகாராணியாராக எலிஸபெத் மகாராணி சாதனை



பிரித்தானியாவின் தற்போதைய மகாராணியான இரண்டாம் எலிஸபெத், அந்நாட்டில் நீண்ட காலம் மகாராணியாராக சேவையாற்றியவர் என்ற சாத னையைப் படைத்துள்ளார். இதுவரை காலமும் பாட்டியாரான விக்டோரியா மகா ராணியாரே பிரித்தானியாவை நீண்ட காலம் ஆட்சி செய்தவராக விளங்கினார்.

தற்போதைய மகாராணியார், 63 வருடங்கள், 7 மாத ஆட்சிக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார். இதன் பிரகாரம் அத்தருணத்தில் 23,226 நாட்கள் 16 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் அவர் ஆட்சி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பிரித்தானிய மகராணியாரின் (89வயது) இந்தச் சாதனையையொட்டி பிரித்தானிய பாராளுமன்ற கீழ் சபையில் பிரதமர் டேவிட் கமரோன் தலைமையில் விசேட வைபவமொன்று இடம் பெற்றது.

மகாராணியாரின் தந்தையான 6 ஆம் ஜோர்ஜ் மன்னர் 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி அதிகாலையில் உயிரிழந்தார். இதனையடுத்து எலிஸபெத் மகாராணியார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

மகாராணியாரின் இந்தச் சாதனையையொட்டி, லண்டனில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை விசேட பெருமைக்குரிய விடயமாகும். ●

# JR Print

www.jrprint.com

*- experience of the power -*

www.jrprint.com

30 YEARS EXPERIENCE IN THE PRINTING INDUSTRY

QUICK, QUALITY & AFFORDABLE SERVICE

- Arangetram Books
- Cake Boxes
- Bill Books, Invoices
- Leaflets
- Rich Cakes & Boxes
- Raffle Tickets
- Rubber Stamps
- Lamination
- Translation Services
- Birthday Cards
- Letter Heads
- Wedding Cards
- Short Eat Boxes
- Photocopying
- Compliment Slips
- Short eat Bags
- Gold Blocking
- Visiting Cards
- Colour Printing
- Invitation Cards
- Souvenirs & Invoices



Guaranteed delivery within 72 Hours in Europe at Minimal cost

Fax: **020 8521 3967**

Mob: **07939 998 730**

E-mail: **jrprintuk@gmail.com**

**Contact for FREE Quotation**

**0208 503 6643**

**59 - 61, Hoe Street, Walthamstow, London E17 4QR**




Whether it's a Celebration,
a Gift to Someone Special,
or just a Royal Treat for yourself...
discover a new heaven on earth:
POOJA
SWEETS & SAVOURIES
Best Quality Vegetarian Food For Any Occasion
ORDER ONLINE FOR NEXT DAY DELIVERY *
www.poojasweets.com
TOOTING BRANCH
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7 ER
T : 020 8672 4523
info@poojasweets.com
KINGSBURY BRANCH
KINGSBURY ROAD
LONDON, NW9 9ED
T : 020 8206 2206
kingsbury@poojasweets.com
CARDIFF BRANCH
3 ALBANY ROAD, ROATH
CARDIFF, CF24 3LH
T : 029 2021 4987
cardiff@poojasweets.com


# Inta Lanka (pte) Ltd

*"House of Machinery*


பொங்கல் வாழ்த்துக்கள்

***Importers and Distributors of Rice Mill Machinery, Grinders, Diesel Engines, Electric Motors, All Types of Belting, Water Pumps, Bearings, Etc.***












***141 A, Messenger Street, Colombo 12.***

***Tel: 2430300, 4862331     Fax : 2330492***

எல்லா வகையான அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்,
அழகுசாதன வகைகள், எவர் சில்வர் சாமான்கள்
ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

# Fashion House

## பெஷன் ஹவுஸ்



203, (65) காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்



வாடிக்கையாளர்களுக்கு
இனிய பொங்கல்
நல்வாழ்த்துக்கள்















No. 203,(65), K.K.S. Road, Jaffna.
Tel : 021 222 8713, 021 222 3034

# TAPROBANE TRADING

**All Kinds of Engineering Tools, Bolts & Nuts,**
**General Hardware Merchants, Importers & Suppliers.**







**Raju Baskaran**

No 218, Messenger Street, Colombo 12.
Tel : +94(0) 11 2449425, 2386121, 2333076
Fax : + 94(0) 11 2386120
E-mail : tapro220@sltnet.lk



பொங்கல் திருநாள்
வாழ்த்துக்கள்

# Kanaga Solicitors

**KEY PERSONNEL**

Name : Ms.Kanakavalli Nadarajanpillay
Kanaga Solicitors
108 High Street, Colliers Wood
London - SW 19 2 BT

Position in the firm : Principal Solicitor

**Academic/ professional Qualifications:**
L.L.B(Hons), Barrister of Lincoln's Inn, Masters at Law (L.L.M), Advocate & Solicitor of High Court of Malaya, Solicitor of the Supreme Court of England and Wales.

**Relevant and Present Experience:**

Successful practitioner with 14years of experience as a an immigration Criminal, Civil, Family, Land Law matters, Wills Probate and Corporate litigation. lawyer in the High Courts of Malaya.





**Tel: 07878278131**
**020 8544 1100**
**108 High Street, Colliers Wood**
**London - SW 19 2 BT**
email : kanakavalli _ ek@yahoo.com


Since 1986
Rabeena
We've Mastered Taste
2016
அன்பார்ந்த ஏக இறக்குமதியாளர்கள்,
விநியோகஸ்தர்கள், மற்றும்
வாடிக்கையாளர்களுக்கு
இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
CURRY POWDER
MIXTURE
Rabeena Food (Pvt) Ltd
90, Reclamation Road, Colombo - 11, Sri Lanka.
Tel: 94-11-2336602/03, Fax : 94-11-2332997
E-mail : info@rabeena.com Web Site : www.rabeena.com


செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
உங்கள்
எண்ணம் போல்
நகைகளையும்
புடைவைகளையும்
தெரிவுசெய்துகொள்ள
Exclusive Designer Jewellery
Sarees & all Other Dresses
Selvaraja Gold House & Textiles
பொன்னுருக்கலுக்கான வசதிகள் செய்து
தரப்படுவதுடன் தாலிக்கொடிகள் அனைத்தும்
தங்கத்தின் விலைக்கே செய்து தரப்படும்
கூறைப்புடவைகள், பட்டுப் புடவைகள் அனைத்தும்
40% விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்
162B, Mitcham Road, London SW17 9NJ
Tel : 020 8767 3795, Mobile : 07825 005 269



Western Jewellers
Jewellers & Gem Merchants
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவல்லர்ஸ்
First Tamil Jewellery Shop in UK
Specialise in 22ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery
TOOTING BRANCH
230, UPPER TOOTING ROAD
LONDON SW 17 7EW
UNITED KINGDOM
TEL: 020 8767 3445
WEMBLEY BRANCH
5, PLAZA PARADE
EALING ROAD,
WEMBLEY
HAO 4YA
UNITED KINGDOM
TEL : 0208 903 0909
இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்!
Season's Best is Summer, Saree's Best is Silk Emporium Sarees
SILK
EMPORIUM
122 Upper Tooting Road,
London SW17 7EN
Tel : 020 8672 1900
Opening Hours : Monday - Saturday ( 10.30 am - 6.30pm), Sunday (11.30am-6.30pm)

Luckyland

BISCUIT

MANUFACTURERS




NATTARANPOTHA, KUNDASALE, SRILANKA.

T: +94 081 2420574, 2420217, Fax : + 94 081 2420740

E-mail : luckyland@sltnet.lk

சிவராம் பதிப்பகம், 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9440